விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே



சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 21 திங்கட்கிழமை (04.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 167

## மைத்திரி - மகிந்த விரைவில் கூட்டணி

# தேசிய அரசு ஆட்சிக் காலத்தை
# முழுமையாக பூர்த்தி செய்யாது

### சுதந்திரக்கட்சி பொருளாளர்
### எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணைந்து பரந்துபட்ட கூட்டணி ஒன்றை உருவாக்கவுள்ளன என தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாளர் எஸ்.பி.திஸாநாயக்க, இந்தக் கூட்டணியே 2020 ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரை தெரிவு செய்யும் எனவும் தெரிவித்துள்ளார். (15-ம் பக்.)

### ஐ.தே.கவை மீண்டும் குற்றம் சாட்டிய மைத்திரி



24

### இந்த வருடமே மாகாணசபை தேர்தல்

ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்துக்குள் அனைத்து மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 24

### ரூ.1,500 கோடி புலிகளின் சொத்து அரசுடமை!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்கள் மற்றும் சொத்துக்கள் அரசுடமையா 24

### நான் மீண்டும் களமிறங்கினால் ரணிலுக்கு ஓடவேண்டி வரும்

### மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை



(கொழும்பு)

பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாடு, கூட்டு அரசாங்கத்தில் குழப்பநிலை, கட்சிகளுக்குள் உட்பூசல் போன்ற பல்வேறு விதமான விமர்சனங்கள் அரசியல் களத்தை பரபரப்பாக்கியுள்ள நிலையில், அடுத்த 24

### சு.கட்சியின் ஆலோசகர்களாக மகிந்த, சந்திரிகா ஒரேகுழுவில்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று சபை மற்றும் அகில இலங்கை செயற்குழு ஆகியன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று கூடியது. இதில் புதிய நிர்வாக குழு தெரிவு செய்யப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள் கட்சியின் ஆலோசகர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்ன ஆகியோர் கட்சியின் ஆலோசகர்களாக தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

### சுதந்திரக்கட்சி மத்திய குழு கூடியது

### ஜனாதிபதி மைத்திரி மீண்டும் தலைவரானார்
### கூரே, அங்கஜன் உப தலைவர்களாக தெரிவு

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் தலைவராக மீண்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று சபை மற்றும் அகில இலங்கை செயற்குழு ஆகியன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பு அபேகம வளாகத்தில் கூடியது.

கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக புதிய நிர்வாகக்குழு இதன்போது தெரிவு செய்யப்பட்டது.

கட்சியின் பொதுச் செயலாளராக பேராசியர் ரோஹன லக்ஷமன் பியதாச தெரிவுசெய்யப்பட்டார்.

கட்சியின் தேசிய அமைப்பாளராக அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவும் பொருளாளராக பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. 24

### வாள்வெட்டு குழுக்கள் கொக்குவிலில் மோதல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு காந்திஜி பிரதேசம், மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நேற்று இரவு வாள்வெட்டு குழுக்களிடையே மோதல் நடைபெற்றதால் அப்பகுதிகளில் நேற்று இரவு முழுவதும் பதற்ற நிலை காணப்பட்டது.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு யாழ்ப்பாண பொலிஸார் வருகை தந்து நிலைமைகளைக் கட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். 24

### தமிழகத்தில் இருந்து நாடு திரும்பிய 5 அகதிகள் கைது

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் உள்ள அகதி முகாமில் இருந்த இலங்கையை சேர்ந்த 5 அகதிகள் நேற்று படகு வழியாக இலங்கை திரும்பிய நிலையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களை ஏற்றிவந்த இரு படகோட்டிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து போரின் காரணமாக இடம்பெயர்ந்து படகு மூலம் தமிழகத்திற்குச் சென்று தங்கியிருக்கும் ஈழ அகதிகள் தமிழ்நாடு அகதி முகாமின் நெருக்கடி மற்றும் விமானம் மூலம் தாயகம் திரும்புவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக தமது இலகு பயணத்திற்கு ஒத்துழைக்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்

### 20 தொடர்பில் தீர்மானிக்கவில்லை

ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியினால் முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உடனடியாக எதனையும் கூற முடியாது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

[illegible]

### பட்டதாரிகள் அனைவருக்கும் 2019ல் அரச சேவையில் நியமனம்

(கொழும்பு)

அரச சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான வயதெல்லை 45 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ் ருவன் சந்திர தெரிவித்தார்.

இந்த புதிய நடைமுறைக்கு அமைய பட்டதாரிகள் அனைவரும் 2019ஆம் ஆண்டில் மூன்று கட்டங்களாக அரச சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று கூறிய அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரச சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான வயதெல்லை 35ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

அரச வேலையில் பட்டதாரிகளை இணைப்பதற்கான 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீ-350 ஆவணம் அடுத்தவாரம் வெளியிடப்படும் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

சீ-350 ஆவணத்தை பகிரங்கப்படுத்தினால் விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படுமா என்பது தொடர்பில் ஆராயப்படுவதாகவும் அதற்காக விசேட குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த குழுவின் இறுதி முடிவை ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆவணத்தைப் பகிரங்கப்படுத்துவது தொடர்பில், சபாநாயகர் கரு ஜயசூரிய தம்மிடம் வினவியதாகவும் சட்டமா அதிபர் கூறினார்.

எவ்வாறாயினும், முறிகள் ஆணைக்குழுவின் இறுதியறிக்கையின் இரண்டாவது இணைப்பின் முதற்பிரதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திலுள்ளதாக தேசிய சுவடிகள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் செயலாளருக்கு கோட்டை நீதவான் பிறப்பித்த உத்தரவிற்கமையவே இந்த ஆவணம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (மு)

# இந்திய மீனவர்கள் அறுவர் கைது

(காங்கேசன்துறை)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் நேற்று அதிகாலை கடற்படையினர் ரோந்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் படகு ஒன்று கடற்படையினரால் தடுக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

படகிலிருந்த இந்திய மீனவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். படகும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

மலேரியா சோதனையின் பின்னர் நீரியல் வளத்திணைக்கள அதிகாரியிடம் மீனவர்கள் 6 பேரும் ஒப்படைக்கப்படுவர் என்று கடற்படையினர் மேலும் தெரிவித்தனர். (மு)


## தவறவிடப்பட்டுள்ளது

சுப்பிரமணியம் இலட்சுமணன் என்பவரது தே.அ.அ.இல (580483135V), சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வரிப்பத்திரம் என்பன மருதனார்மடம் சந்தைப்பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**இல.442, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

**0773144866**

(4284)


# விமானத்தில் பெண்ணுடன் தவறாக நடந்த இளைஞன் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்த போது, பிரித்தானிய பெண்ணொருவருக்கு பாலியல் தொல்லைகளை கொடுத்த இளைஞன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

டோஹா கட்டாரிலிருந்து கட்டுநாயக்க நோக்கி வந்த விமானத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 30 வயதான இளைஞனே கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், புதுக்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, அவரை 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (மு)

# பணம் பெற்றவர்களின் பெயர்களை வெளியிடுமாறு கபே அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் வலியுறுத்தல்

(கொழும்பு)

அர்ஜுன் அலோசியஸின் பேர்பச்சுவல் நிறுவனத்திடமிருந்து பணம் பெற்றுள்ளவர்களின் பெயர்களை வெளியிடுமாறு கபே மற்றும் மனித உரிமை ஆராய்ச்சி மையத்தின் நிறைவேற்று இயக்குநர் கீர்த்தி தென்னகோன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் ஒன்றினை அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பாலிசேன ஆகியோருக்கு வழங்குமாறு நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறைச்சாலை அதிகாரிகளிடம் கையளித்துள்ளார்.

குறித்த கடிதத்தில், மென்டிஸ் கம்பனி மற்றும் ஏனைய நிறுவனங்களில் இருந்து தேர்தல் பிரசாரங்களுக்கு நிதி மற்றும் நன்கொடைகள், வழங்கிய அரசியல்வாதிகள் உள்ளிட்ட தனிநபர்களின் பெயர்களை வெளியிட கீர்த்தி தென்னகோன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஜனவரி 01, 2010 முதல் டிசம்பர் 31, 2017 வரை பணம் பெற்றுள்ள தனிநபர்களின் பெயர்களை வெளிப்படுத்தவும், பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக 118 நபர்கள் பெற்றுள்ள விபரங்கள் ஊடகங்கள் மற்றும் பல்வேறு ஆதாரங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறித்த கடிதத்தில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

## பாராளுமன்ற காணி உறுதிப்பத்திரம் நாளை சபாநாயகரிடம் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கை பாராளுமன்ற கட்டடத் தொகுதி அமைந்துள்ள காணிக்கான உறுதிப்பத்திரத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காணி உறுதிப்பத்திரத்தை சபாநாயகர் கருஜயசூரியவிடம் நாளை கையளிக்கவுள்ளதாக காணி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய பாராளுமன்ற கட்டடத் தொகுதி அமைந்துள்ள காணி உரிய முறையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான சான்றிதழையும் வழங்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை காலம் பாராளுமன்ற கட்டடத் தொகுதி சம்பிரதாய பூர்வமான பெயரிலேயே காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு)

# 15 வயதை அடைந்த அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

15 வயதை பூர்த்தி செய்த அனைத்து பிள்ளைகளுக்கும் தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த வயதெல்லை முன்னர் 16 ஆக அமைந்திருந்தது. அதனை 15 வயதாக குறைத்த பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (மு)

# இலங்கையில் 1.38 பில். அமெ.டொலர் வெளிநாட்டு முதலீடுகளுக்கு அனுமதி

(கொழும்பு)

இலங்கை முதலீட்டு சபையில் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களில் இந்த வருடம் முதல் நான்கு மாத காலப்பகுதியில் 1.38 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வெளிநாட்டு திட்டங்களை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, மேலும் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வெளிநாட்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த நிலையில், இந்த வருட இறுதிக்குள் மொத்தமாக 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான பெறுமதியான வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர முடியும் என அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, கடந்த ஆண்டு பூகோள ரீதியாக பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த போதிலும், சிங்கப்பூர், ஹொங்கொங் மற்றும் சீன நாடுகளை சேர்ந்த முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்துள்ளனர்.

கடந்த ஆண்டில், சிங்கப்பூர் 58 மில்லியன், ஹொங்கொங் 85 மில்லியன் மற்றும் சீனா 144 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையில் முதலீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)


1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

யாழ். **கலாலயா** பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

*பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,* மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்
10-06-2018 ஞாயிறு காலை 10.00மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
11-06-2018 திங்கள் காலை 10.00 மணி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். (அ-2801) -இயக்குநர்-



YICSD COLLEGE
YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT

20% Special OFFER

புதிய பிரிவுகள் ஆரம்பம்

அழகுக்கலை
# Diploma in Beauty Culture & Hairdressing
# Advance Dip in Beauty Culture & Hairdressing

தையல்
# Certificate in Tailoring
# Diploma in Tailoring

ஆரி எம்பிராய்டரி
# Certificate in Aari Embroidery
# Diploma in Aari Embroidery

கேக் ஐசிங்
# Certificate in Cake Making & Decorating
# Diploma in Cake Making & Decorating



சனி, ஞாயிறு 10/06/2018 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் 12/06/2018 அன்று 10.00 மணிக்கு

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில் வருகைதரவும்.

இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)
(அ-2808)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சு.க.தலைவராக மீண்டும் மைத்திரி, செயலாளராக ரோஹண

# எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்க புதிய நிர்வாகக்குழு நேற்று நியமனம்

### துமிந்த அவுட்; மகிந்தவுக்கு மவுசு குறையவில்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று சபை மற்றும் அகில இலங்கை செயற்குழு ஆகியன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பு அபேகம வளாகத்தில் கூடியது.

இதன்போது கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள்



கட்சியின் ஆலோசகர்களாக தெரிவு செய்யப்பட்டனர். அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்ன ஆகியோர் கட்சியின் ஆலோசனைக் குழுவாக தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் தலைவராக மீண்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் பொதுச் செயலாளராக பேராசியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவு செய்யப்பட்டார்.

கட்சியின் தேசிய அமைப்பாளராக அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவும் பொருளாளராக பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திஸாநாயக்கவும்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, முன்னாள் அமைச்சர்களான டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன, அநுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜெயந்த ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர்களாக இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, அமைச்சர்களான சரத் அமுனுகம, மகிந்த அமரவீர,முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜெயசேகர, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, பியசேன கமகே எம்.பி., அமைச்சர்களான விஜித் விஜயமுனித டி சொய்ஸா, மகிந்த சமரசிங்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா, தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய உப செயலாளர்களாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏகநாயக்க, வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தஸநாயக்க, மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்



பிரிய, ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, பிரதியமைச்சர் லசந்த அழகியவன்ன, முன்னாள் பிரதியமைச்சர் சுதர்ஷனீ பெர்னாண்டோபுள்ளே, சுமேதா ஜீ. ஜயசேன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதுள்ள அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் மத்திய செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் மத்திய குழுவிற்கு தெரிவு செய்யப்படும் ஏனைய நியமனங்கள் கட்சியின் தலைவரினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்புக்கு ஏற்ப நியமிக்கப்பட வேண்டியுள்ள அமைப்பாளர்கள், தொழில் வல்லுநர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு அமைப்புகளை எதிர்காலத்தில் நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 12 ஆயிரம் சீனர்கள் 10 ஆயிரம் இந்தியர்கள் இலங்கையில் உள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் 12 ஆயிரம் சீனர்களும், 10 ஆயிரம் இந்தியர்களும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக இராணுவத் தளபதி மஹேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த தகவல் முதற்தடவையாக வெளியாகியுள்ளதாக கூறப்படுகின்றது. த ஹிந்து பத்திரிகைக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அதேபோன்று, முன்னாள் புலி உறுப்பினர்கள் 13109 பேர் இலங்கையில் உள்ளனர். புனர்வாழ்வளிக்கப்பட்ட சிலர் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். வெளிநாடுகளில் தொடர்ந்தும் தங்கியிருப்பதற்காக இவர்கள், இலங்கையில் பிரச்சினையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆபத்து உள்ளதாகவும் இராணுவத் தளபதி சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# குற்றமிழைத்தோர் மீது தராதரமின்றி கடும் நடவடிக்கை-ஐ.தே.க.உறுதி

(கொழும்பு)



அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து நான் பணம் வாங்கவில்லை. அந்த பட்டியலில் நான் இல்லை. அதற்கான தேவையும் எனக்கில்லை. என்றாலும் 118 பேர் அர்ஜுன் அலோசியஸுடன் தொடர்பு கொண்டு பணம் பெற்றதாக கூறப்படுகின்றது. இதன்போது அலோசியஸுடன் சாதாரண உறவினை மீறி பாராளுமன்ற உறுப்பினர்கள் யாராவது குற்றம் இழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கம் தராதரம் பாராமல் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

மத்திய வங்கி மோசடியுடன் சம்பந்தப்பட்ட அர்ஜுன அலோசியஸுனுடன் தொடர்பு வைத்துக்கொண்டு 118 பேர் பணம் பெற்றதாக கூறப்படுகின்றது.

வர்த்தக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நெருங்கிய தொடர்புகளை வைத்துக் கொள்வதில் எந்த தவறுகளும் இல்லை. அதற்கு மாறாக அவருடனான தொடர்புகளின் போது குற்றம் இழைத்திருந்தால் அது பாரிய குற்றமாகும்.

எனவே அர்ஜுன அலோசியஸுடனான தொடர்பினை கொண்டு யாராவது குற்றம் இழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கம் தராதரம் பாராமல் சட்ட நடவடிக்கை எடுக்கும். அதில் எந்தவொரு மாற்றுக் கருத்தும்இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பேருந்தில் பயணித்த போது

# பல்கலை.மாணவனின் கையை துண்டாடியது டிப்பர் வாகனம்

பேருந்தின் பின்னிருக்கையில் யன்னல் ஓரமாக அமர்ந்து, ஜன்னலுக்கு வெளியே கையை போட்டுக்கொண்டு பயணித்த, பல்கலைக்கழக மாணவனின் கையை, டிப்பர் வாகனம் துண்டாடிய சம்பவமொன்று இரத்தினபுரியில் இடம்பெற்றுள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவனின் கையே இவ்வாறு துண்டாடப்பட்டுள்ளது.

துண்டாடப்பட்டு வீதியில் கிடந்த மாணவனின் கையுடன், அந்த மாணவன், இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் இரத்தினபுரி-பதுளை வீதியில், பெல்மதுளை சன்னஸ்கம கிரிவெல்தெனிய சந்தியில் இடம் பெற்றுள்ளது. (இ-7)

# பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒழிந்தால் நாட்டின் சமத்துவம் சீர்குலையுமாம்

## சரத் வீரசேகர புதுக்கதை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலமே நாட்டின் சமத்துவம்.ஒற்றுமை போன்றவற்றை நிலையாக பேண முடியும். பயங்கரவாத தடைச் சட்டம் ஒழிக்கப்பட்டால் நாட்டின் சமத்துவம் சீர்குலையும் என அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 30 வருட காலமாக நிலவிய போர் நிலைமைகளின் போது மக்களின் உயிர் காவு கொள்ளப்பட்டது. மக்களின் சொத்துக்கள் அபகரிக்கப்பட்டன. இருப்பினும் அந்த நிலைமைகளிலிருந்து மக்கள்மீண்டு வருவதற்கு பயங்கரவாத தடைச்சட்டம் ஆறுதலாக அமைந்தது. ஆகவே பயங்கரவாத தடைச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டுமென்ற விடயத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது.

[illegible] நாட்டை [illegible] நோக்கிலே



போரிட்டனர். போர் முடிவடைந்த பின்னரும் அவர்களது நோக்கங்கள் முடிவுறவில்லை. நாட்டை இரண்டாகப் பிரித்து தனி ஈழத்தினை உருவாக்குவது விடுதலைப்புலி இயக்கத்தின் ஆதரவாளர்களின் தற்போதைய அரசியல் நோக்கமாக காணப்படுகின்றது. அதேபோன்று தற்போது அரசியலில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் ஈழத்தினை பிரித்து தனியாட்சியினையே கோருகின்றனர். தனியாட்சி பெற்றுக் கொள்ள அரசியல்வாதிகள் முயற்சிக்கும்போது நாட்டில் தற்போது காணப்படும்அமைதி சீர்குலைவதற்கு முழு காரணமாக அமைந்துவிடும். அரசியல்வாதிகளின் நாட்டை பிரிக்கும் எண்ணாங் களுக்கு இது வாய்ப்பாக அமைந்து விடும்.

இந்த தடைச்சட்டமானது இலங்கையின் மனித உரிமைகளை பாதுகாத்து வருகின்றது. போர்க்காலத்தில் மக்கள் கடுமையாக பாதிப்படைந்தனர். அதுபோன்ற மனித உரிமைகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை தவிர்த்து கொள்வதற்கு பயங்கரவாத தடைச்சட்டம் பலமாக அமைந்தது. அந்நிய அமைப்புக்களின் சதிகளிலிருந்து மக்களின் உரிமைகளை பேண வேண்டுமானால் பயங்கரவாத தடைச்சட்டம் ஒழிக்கப்படக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரஞ்சன் டி சில்வா படுகொலை; குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு மாற்றம்

தெஹிவளை கல்கிஸை மாநகர சபை உறுப்பினரும், இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர், தனஞ்சய டி சில்வாவின்தந்தையுமான ரஞ்சன் டி சில்வா படுகொலை தொடர்பான விசாரணைகள் குற்றவியல் விசாரணை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ரஞ்சன் டி சில்வா கடந்த மாதம் 24 ஆம் திகதி இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 55 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்மூலம் லண்டன் லோர்ஷில் அடைந்த படுதோல்விக்கு பழிதீர்த்ததுடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட்

# டொமினிக் பெஸ், பட்லர் அசத்தல்
# லோட்ஸ் தோல்விக்கு லீட்ஸில் பழிதீர்த்து தொடரை சமன் செய்தது இங்கிலாந்து



தொடரையும் 1-1 என்ற கணக்கில் சமப்படுத்தியது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணி, அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

முதல் போட்டியில் இங்கிலாந்தை 9 விக்கெட்டுக்களால வெற்றி கொண்டிருந்தது.

இந்நிலையில் 2ஆவது டெஸ்ட் ஹெடிங்லே லீட்ஸில் கடந்த முதலாம் திகதி ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடி தமது முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் அண்டர்சன், பிரோட், வோக்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலா ந்து அணி, நேற்று முன் தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில், 7 விக்கெட்டுக்களை இழந்து 302 ஓட்டங்களை எடுத்திருந்தது.




நேற்று 3ஆம் நாள் ஆட்டம் நடந்தது. சிறப்பாக செயல்பட்ட பட்லர் அரைச்சதம் கடந்தார். அறிமுக குர்ரான் (20), பிரோட் (2) விரைவில் திரும்ப, இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 363 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதன்மூலம் பாகிஸ்தானைவிட முதல் இன்னிங்ஸில் 189 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

பட்லர் (80) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

**•பெஸ் அபாரம்**

பாகிஸ்தான் அணிக்கு அண்டர்சன் தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' அசார் அலி (11), சொகைல் (8) சிக்கினர்.

இளம் வீரரான டொமினிக் பெஸ் 'சுழல்' வலையில் இமாம் (34), உஸ்மான் (33) ஆட்டமிழந்தார். அசாத் சபிக் (5), அணித் தலைவர் சர்பராஸ் (8) அணியை கைவிட்டனர்.




மற்றவர்களும் ஏமாற்ற, பாகிஸ்தான் இரண்டாவது இன்னிங்ஸில் 134 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில பெஸ், பிரோட் தலா 3 விக்கெட்டுககளை வீழ்த்தினர். இதன்மூலம், இரண்டு போட்டிகள் கொண்ட தொடர் 1-1 என சமன் ஆனது.

போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் ஜோஷ் பட்லர் தெரிவானார்.

## பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்
# செரீனா - ஷரபோவா மோதல்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றில் அமெரிக்காவின் செரினா, ரஷ்யாவின் ஷரபோவா மோதுகின்றனர்.

பிரான்ஸ்தலைநகர் பாரிஸில், பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் இன்று நடக்கவுள்ள பெண்கள் ஒற்றையர் பிரிவு 4வது சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை எதிர்கொள்கிறார். இதன்மூலம் கடந்த 2016ல் நடந்த ஆஸ்திரேலிய ஓபன் காலிறுதிக்கு பின், முதன்முறையாக இவர்கள் மோதுகின்றனர்.



**செரினா ஆதிக்கம்**

டபிள்யு.டி.ஏ., அரங்கில் இவர்கள் இருவரும் 21 முறை மோதியுள்ளனர். இதில் செரினா 19, ஷரபோவா 2ல் வென்றனர். ஷரபோவாவுக்கு எதிராக தொடர்ச்சியாக 18 போட்டிகளில் செரினா வெற்றி பெற்றுள்ளார். இதுவரை 23 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள செரினா, தனது முதல் குழந்தை பிரசவத்திற்கு பின், 4 போட்டிகளில் மட்டுமே விளையாடி உள்ளார். ஊக்க மருந்து சோதனை தடைக்கு பின், முதன்முறையாக பிரெஞ்ச் ஓபனில் பங்கேற்றுள்ள ஷரபோவா, 3வது சுற்றில் முன்னாள் 'நம்பர்-1' வீராங்கனையான செக்குடியரசின் கரோலினா பிலிஸ்கோவாவை தோற்கடித்துள்ளார்.

## சர்வதேச நட்பு கால்பந்து
# ஜேர்மனி அதிர்ச்சி தோல்வி



சர்வதேச நட்பு கால்பந்து போட்டியில் ஆஸ்திரியா 2-1 என்ற கோல் கணக்கில் உலக சம்பியன் ஜேர்மனியை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தது.

ரஷ்யாவில், எதிர்வரும் 14ல் 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் தொடங்குகிறது. இதற்கு தயாராகும் வகையில் ஒவ்வொரு அணிகளும் நட்பு ரீதியிலான சர்வதேச போட்டிகளில் பங்கேற்று வருகின்றன.

இதன்படி ஆஸ்திரியாவில் நடந்த போட்டியில் 'நடப்பு உலக சம்பியன்' ஜேர்மனி அணி, ஆஸ்திரியாவை சந்தித்தது.

ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் மெசட் ஓசில், ஒரு கோலடித்து கைகொடுக்க, முதல் பாதி முடிவில் ஜேர்மனி அணி 1-0 என முன்னிலை வகித்திருந்தது.

சொந்த மண்ணில் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட ஆஸ்திரிய அணிக்கு மார்டின் ஹின்டி ரிகர் (53 ஆவது நிமிடம்), அலெக் சாண்டிரோ ஸ்கோப் (69 ஆவது) தலா ஒரு கோலடித்து கைகொடுத்தனர்.

காயத்தில் இருந்து மீண்டு உலக கிண்ண அணியில் இடம்பிடித்துள்ள ஜேர்மனி கோல்காப்பாளர் மானுவல் நூயர் மீது அதிகம் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இவர், ஆஸ்திரியாவின் கோலடிக்கும் வாய்ப்பை தடுக்கத்தவறினார்.

**32 ஆண்டுகளுக்கு பின**

முடிவில் ஜேர்மனி அணி, 1-2 என்ற கணக்கில் தோல்வியடைந்தது. இதன்மூலம் 32 ஆண்டுகளுக்கு பின் ஆஸ்திரிய அணி, ஜேர்மனியை தோற்கடித்துள்ளது.

கடைசியாக வியன்னாவில் 1986ல் நடந்த போட்டியில் 4-1 என மேற்கு ஜேர்மனியை வீழ்த்தியது.

**வெற்றி இல்லை**

ஜேர்மனி அணி, கடைசியாக விளையாடிய 5 நட்பு போட்டிகளில் ஒன்றில் கூட வெல்லவில்லை. இங்கிலாந்து (0-0), பிரான்ஸ் (2-2), ஸ்பெயின் (1-1) அணிகளுக்கு எதிராக 'சமன்' செய்த ஜேர்மனி, பிரேசில் (1-0), ஆஸ்திரியா (2-1) அணிகளிடம் வீழ்ந்தது.

## 'ஃபிபா' கால்பந்து கவுண்ட் டவுண் 10
# தொடர்ந்த பிரேசில் ஆதிக்கம்



உலக கிண்ண கால்பந்து வரலாற்றில் முதல் முறையாக இரு நாடுகள் (தென் கொரியா, ஜப்பான்) இணைந்து 17ஆவது தொடரை 2002ல் நடத்தின.

ஆசிய மண்ணில் முதன முறையாக நடந்த இத்தொடரில் மொத்தம் 32 அணிகள், 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதல் சுற்றில் மோதின. 'நடப்பு சம்பியன்' அந்தஸ்துடன் களமிறங்கிய பிரான்ஸ் அணி, முதல் சுற்றின் 3 போட்டிகளிலும் தோல்வியடைந்து வெளியேறியது.

**கொரியா சாதனை**

காலிறுதியில் அசத்திய தென் கொரியா, ஸ்பெயின் அணியை வீழ்த்தியது.

இதன்மூலம் உலக கிண்ண அரங்கில், அரையிறுதிக்கு முன்னேறிய முதல ஆசிய அணி என்ற சாதனை படைத்தது. அரையிறுதியில், ஜேர்மனியிடம் தோல்வி அடைந்த தென் கொரியா, நான்காவது இடம்பிடித்தது.

பிரேசில், ஜேர்மனி அணிகள் இறுதிக்கு முன்னேறின. ரொனால்டோ இரண்டு கோல் அடிக்க, பிரேசில் 2-0 என ஜேர்மனியை வீழ்த்தியது. இதன்மூலம் உலக கிண்ண வரலாற்றில் 5 முறை கிண்ணம் வென்ற முதல் அணி என்ற சாதனை படைத்தது.

**ஃபிரி கிக்**

உலக கிண்ண கால்பந்து தொடர் 2002இல் 64 போட்டிகள் 20 மைதானங்களில் நடந்தன.

இத் தொடருக்காக தென் கொரியா, ஜப்பானில் தலா 10 மைதானங்கள் புதிதாக கட்டப்பட்டன. இத் தொடரில் மொத்தம் 161 கோல்கள் அடிக்கப்பட்டன. அதிகபட்சமாக பிரேசிலின் ரொனால்டோ 8 கோல்கள் அடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளையடிப்பதே ராஜபக்ஷக்களின் கொள்கை



## அமைச்சர் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மக்களின் பணத்தை கொள்ளையடிப்பதும் பின்னர் அப்பணத்தை கொண்டு சுகபோக வாழ்க்கை வாழ்வதும் அரசியல் செய்வதும் தான் ராஜபக்ஷக்களின் அரசியல் கொள்கையாக இருந்ததென வன பாதுகாப்பு அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"தற்போது சிலர் எப்படியாவது ஆட்சிக்கு வந்துவிட வேண்டும் என்று தீவிரமாக முயற்சிக்கிறார்கள். இதற்காக சில உறுப்பினர்களுக்கு பணத்தையும் சலுகைகளையும் கொடுத்து தமது பக்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் முயற்சித்து வருகிறார்கள்.

எனினும், இவற்றுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. கடந்த கால ஆட்சியாளர்கள் எல்லாம் கொள்ளைக்காரர்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். இது இரகசியம் இல்லை.

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் இதற்காக சிறையிலும் இருந்தார். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் தமது பெற்றோரின் கல்லறையை கட்டவும் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து 91 மில்லியன் ரூபாவைக் கொள்ளையடித்தார்.

யுத்தத்துக்கு செலவு செய்ததாகக்கூட பொய்யான கணக்குகள் இந்தத் தரப்பினரால் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறானவர்கள் கொள்ளையடித்தார்கள் என்பது மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை அனைவரும் அறிவார்கள். அந்த அரசாங்கத்தில் அனைவரும் கொள்ளையடித்தார்கள். எமது அரசாங்கம் அவ்வாறான கொள்கையில் பயணிக்கவில்லை. நாம் தவறு செய்துள்ளோம் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், கொள்ளையர்களுக்கு எதிராக சட்டத்தை நிலைநாட்டுவோம் என்று தான் ஜனாதிபதி வாக்குறுதியளித்திருந்தார். இதனை அவர் உறுதியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் மக்களின் ஆணைக்கு இணங்கியே அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க வேண்டும். எனவே, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் 2020 ஆம் ஆண்டுவரை செல்லும். அதற்குப் பிறகும் நாம் பலமானதொரு அரசாங்கத்தை உருவாக்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## பேருவளையில் வாகன விபத்து; பொலிஸ் உத்தியோகத்தர் பலி!

(கொழும்பு)

கொழும்பு - காலி பிரதான வீதியிலுள்ள பேருவளை, சபுகொட விகாரைக்கு அருகில் லொறியொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேற்று பிற்பகல் விபத்துக்குள்ளானதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(இ-7)

## இயந்திரத்தினுள் அகப்பட்ட பெண்ணின் கையில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி-மிருசுவில் பகுதியிலுள்ள தும்புத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த பெண்ணின் கை தவறுதலாக இயந்திரத்தினுள் கை அகப்பட்டதில் மணிக்கட்டிற்கு கீழ் கடுமையாக சிதையுண்ட நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் ஹெறபேலி-மிருசுவிலைச் சேர்ந்த 34வயது கமலராஜா கமலாம்பிகை என்ற பெண்ணே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.(இ-7)

## அலோசியஸுடன் உரையாடியோரின் பெயர்களை உடன் வெளியிடுங்கள்

### அமைச்சர் சம்பிக்க வலியுறுத்து

(கொழும்பு)

பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத் தலைவர் அர்ஜுன் அலோசியஸுடன் தொலைபேசியில் உரையாடிய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலை அரசாங்கம் உடன் வெளியிட வேண்டும் என, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.



கண்டி அங்கும்புரையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அர்ஜுன் அலோசியஸுடன் தொலைபேசியில் உரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரது பெயர்களையும் அரசாங்கம் உடன் வெளியிடவேண்டும். இல்லையென்றால், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இதனால் அவப்பெயர் ஏற்படும். பச்சை, நீலம், சிவப்பு உறுப்பினர்களின் கைவரிசையை, பெயர்ப் பட்டியல் வெளியான பின்னர் பார்த்துக்கொள்ளலாம்" எனத் தெரிவித்தார்.

மேலும், நாட்டின் அரசியல், கல்வி தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர், "கிராமப்புற மாணவ, மாணவிகளே, இன்று சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளிலும், பல்கலைக்கழகப் படிப்பிலும் முன்னிற்கின்றார்கள். நாட்டின் ஆட்சி, இந்த இளம் தரப்பினர் கையில் வரவேண்டும்.

"இன்று எமது மக்கள் மத்தியில் ஊடுருவியுள்ள ஒரு குடும்பத்துக்குத்தான் ஆட்சி, குறிப்பிட்ட கல்லூரியில் படித்தவர்களுக்குத் தான் ஆட்சி செய்ய முடியும் என்ற மனப்பாங்கு நீக்கப்படவேண்டும். அவ்வாறு நாட்டின் ஆட்சியை குடும்ப ஆட்சியில் இருந்து விலக்கி, திறமைமிக்கவர்களின் கைகளில் கொடுத்தால் இந்நாட்டை பத்தே ஆண்டுகளில் சிங்கப்பூரை விடவும் முன்னிலைக்கு கொண்டுவர முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அலோசியஸிடம் பணம் பெற்றவர்கள் அரசியலில் இருந்து விலக வேண்டும்

### கூட்டு எதிரணி கோரிக்கை

(கொழும்பு)

எந்த விதத்திலாவது அர்ஜுன் அலோசியஸிடம் பணத்தை பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகள் இருப்பார்களேயானால், அவர்கள் ஒழுக்க நெறிமுறைகளை மதித்து அரசியலில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகள் உட்பட 118 இற்கும் மேற்பட்டவர்கள் அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து பணம் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. இவர்களின் தகவல்கள் வெளியிடப்பட வேண்டும்.

இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிலரது நடத்தைகள் காரணமாக, நாடாளுமன்றத்திற்கு பெரும் தலை குனிவு ஏற்பட்டுள்ளதுடன் அனைத்து பிரதிநிதிகள் மீதும் தவறான அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது எனவும் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

04.06.2018

வைகாசி 21, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு

சஷ்டி முழுவதும்

திருவோணம் பிற்பகல் 1.16 மணிவரை

சுபநேரம் 11.52-1.22 மணிவரை

இராகுகாலம் 7.22-8.52மணிவரை

அமிர்தசித்தம்

வளவன்

கிரகநிலை: சூரி, புத; சுக்; ராகு; குரு; சனி; செவ், கேது, சந்

சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை

**மேடம்** - ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**இடபம்** - மனக்குழப்பம் அகன்று மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், புதிய முயற்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** - எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதில் தாமங்கள் ஏற்படலாம், வேலைச்சுமை அதிகரிக்கும், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கடகம்** - நீண்ட நாளைய நண்பன் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** - பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், சுபகாரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** - மனநிறைவு கூடும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமைகள் ஏற்படலாம், வியாபார விருத்தியுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**துலாம்** - சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், சுப செல[illegible] அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** - வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** - செய்தொழிலில் உயர்வும் மேன்மையும் கிட்டும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தேவையற்ற விவாதங்களைத் தவிப்பது நல்லது, சிந்தனை மிகுதியான நாள்.

**மகரம்** - உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசனசுகமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** - உறவினர்கள் நலன்கருதிய சுப செலவுகள் ஏற்படலாம், சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**மீனம்** - பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








யாழ்.இந்துக் கல்லூரியில் வீற்றிருக்கும் சிவஞான வைரவப் பெருமானின் மஹா கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் நேற்று முன்தினம் மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# வடமராட்சியில் தொடரும் வளச் சுரண்டல்





(பொற்பதி)

மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வெற்றிலைக்கேணி ஜே/432 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மூன்று இடங்களில் பாரியளவில் மணல் எடுக்கப்பட்டு வருவதாக மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஒரு மாதத்திற்கு மேலாக களவாக மணல் அள்ளும் செயற்பாட்டில் குழுவொன்று ஈடுபட்டு வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

வெற்றிலைக்கேணி மருதடி ஆற்றங்கரை தெற்குப் பகுதி புல்லாவெளி, மூர்த்தி ஐயர் தோட்டப் பகுதி ஆகிய இடங்களில் இச் செயற்பாடு இடம்பெற்று வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வெற்றிலைக்கேணி கிராம உத்தியோகத்தர் மற்றும் மருதங்கேணிப் பிரதேச செயலர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் இன்றுவரைக்கும் அவர்கள் எவ்விதமான நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லையென மக்கள் தெரிவித்தனர்.

இக்கிராமத்திலுள்ள பகுதிகளான மண்டலாய், உம்மாண்டி, உணவத்தை, மாவிலங்கை, புல்லாவெளி போன்ற இடங்களிலுள்ள பனை மரங்களை சட்டவிரோதமாக வெட்டி விற்கும்பலே மணல் ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

எனவே சட்டத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் இவர்களைக் கட்டுப்படுத்தத் தவறும் பட்சத்தில் மண் அகழும் இடங்கள் பாரிய பள்ளங்களாக மாறுவதை யாராலும் தடுக்க முடியாது.

எனவே வடமராட்சியில் தொடரும் வளச் சுரண்டல்களை தடுத்து நிறுத்தி சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-64)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராமங்களில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகளுக்கு கடந்த 29 ஆம் திகதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதனை பிரதேச மட்ட மாற்றுத்திறனாளிகளின் சுய உதவிக்குழுவின் தலைவர் அ.மேரி றெசோதா வழங்கினார். (இ)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மூத்தவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 21 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் மாலை கொடி இறக்கமும் நடைபெறவுள் ளது.

மஹோற்சவ காலத்தில் தினமும் நண்பகல் 12 மணிக்கு அன் னதானமும் வழங்கப்படவுள்ளது. (இ)

# யோகாசன-தியான வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள அளவெட்டி கலாசார மத்திய நிலையத்தில் யோகாசன தியான வகுப்புக்கள் இலவசமான முறையில் நடைபெற்று வருகின்றன. இதன் புதிய பிரிவு எதிர்வரும் சனிக்கிழமை 09.06.2018 அன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வார இறுதி நாட்களில் சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் மாலை 4- 6 மணி வரை இவ் வகுப்புக்கள் நடைபெறும் எனவும் நோயாளர்களுக்கு சிறப்புக் கவனமெடுத்து கற்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இலவசமான முறையில் நடைபெறும் இவ் வகுப்புக்களில் இணைந்து பயன் பெற விரும்பும் ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் பயிற்சிநெறி ஆரம்பமாகும் தினத்தன்று இணைந்துகொள்ள முடியும் என பயிற்சி ஆசிரியர் சிவஸ்ரீ தவசுதக் குருக்கள் அறிவித்துள்ளார்.

இவ்வகுப்புக்களுடன் சங்கீதம், வயலின் ஆகிய வகுப்புக்களும் இலவசமான முறையில் கற்பிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. மேலதிக தகவல்களை மேற்படி கலாசார மத்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (இ)

# பாடசாலைக் காணியை விடுவிக்க படைத் தளபதியிடம் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

கல்லடி வேலுப்பிள்ளை வித்தியாலயம் கடந்த 25 வருடங்களாக இடம்பெயர்ந்து உரும்பிராயில் ஒரு தனியார் வீட்டில் இயங்கி வருகின்றது. இப்பாடசாலையில் இன்று 385 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

இப்பாடசாலையை சொந்த இடமான வயாவிளானுக்கு இடமாற்றவும் அதனது இடத்தை விடுவிக்க கோரியும் பாடசாலை சமூகம் யாழ்ப்பாண பாதுகாப்பு படைத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சியை நேற்று முன்தினம் சந்தித்து பாடசாலைக் காணி விடயத்தை எடுத்துக்கூறி பாடசாலை சொந்த இடத்தில் இயங்க ஆவன செய்யுமாறு கேட்டுள்ளனர். இக்கோரிக்கையை பரிசீலிப்பதாக படைத் தளபதி தெரிவித்தார். (இ)

# வழிகாட்டல் கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை இளைஞர் கழக சம்மேளனத்தினால் மல்லாகம் குளமங்கால் றோ.க.மகா வித்தியாலய தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழிகாட்டல் பரீட்சையும் அதனைத் தொடர்ந்து வழிகாட்டல் கருத்தரங்கும் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது. (இ-78)




# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு தல்லுடை கன்னியர் வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதில் எதிர்வரும் 8 ஆம் திகதி மும்மூர்த்திகளுக்கும் அஸ்டோத்திர சதசங்காபிஷேகம் நடைபெற்று இரவு திருவூஞ்சல் [illegible] (இ)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைகள்

## பகுதி- I

| | | | |
|---|---|---|---|
| 01. | 3 | 21. | 3 |
| 02. | 3 | 22. | 2 |
| 03. | 2 | 23. | 2 |
| 04. | 2 | 24. | 1 |
| 05 | 2 | 25. | 2 |
| 06. | 3 அல்லது 1 | 26. | 2 |
| 07. | 2 | 27. | 1 |
| 08. | 1 | 28. | 1 |
| 09. | 3 | 29. | 3 |
| 10. | 2 | 30. | 3 |
| 11. | 2 | 31. | 1 |
| 12. | 1 | 32. | 2 |
| 13. | 2 | 33. | 3 |
| 14. | 3 | 34. | 2 |
| 15. | 1 | 35. | 1 |
| 16. | 2 | 36. | 2 |
| 17. | 1 | 37. | 3 |
| 18. | 2 | 38. | 1 |
| 19. | 3 | 39. | 3 |
| 20. | 1 | 40. | 2 |

## பகுதி- II

01. 1. ஏரிக்கரையில் இருந்த புதர்கள்
2.அடர்ந்த/ அழகான
3. ஏரி 4.காடு
5.ஏரிக்கரை 6.காடு/ ஏரி

02. 1.இரட்டைக்கிளவி 2.வெள்ளிவிழா
3.உலோபங்கூடாது

03. 1.சகபாடி 2.பொதுநலவாதி

04. 1.கவிதா சந்தையில் மாம்பழம், வாழைப்பழம், தோடம்பழம் ஆகியன வாங்கினாள்
2. "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்பது வள்ளுவர் வாக்கு

05. 1. வாய்மை 2.புனிதம்
3.ஆதவன்

06. 1.வீணாய்ப் போகமாட்டாராம்
2.பனைதுணையாகக் கொள்வார்

07. 1.Blackboard 2.Radio

08. 1.What is your name?

09. 1. நயவு செய்து உள்ளே வா
2.அமருங்கள்/ இருங்கள்

10. உமது வீட்டு முகவரி

11. தும்பிரியஸ்தானயம்

12. 1.சீடன் பெரியவர் அருகில் காத்திருந்தான்
2.நகம்கடிப்பதுதவறானபழக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சி ஆட்சி அதிகாரத்தை கோரும் போது ஆளும் கட்சி அதனை வழங்கத் தயாராகக்கூடாது

## அமைச்சர் விஜிதமுனி சொய்சா அறிவுரை

(கொழும்பு)

எதிர்க்கட்சி ஆட்சி அதிகாரத்தை கோரும் போது ஆளும் கட்சி அதனை வழங்க தயாராகக்கூடாது என அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.




பலப்பிட்டிய பிரதேசத்தில் 65 மீனவர்களுக்கு வீடமைப்பு நிதியுதவிகளை வழங்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் மேற்கொண்டுள்ள நற்பணிகள் சம்பந்தமாக மக்களுக்கு தெரியாது. நாட்டின் தற்போதைய அரசாங்கத்தின் ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டுக்கு பெரிய வேலைத் திட்டங்களை செய்துள்ளனர்.

ஆனால், அமைச்சர்கள் அரசாங்கம் மேற்கொண்டுள்ள வேலைகள் குறித்து ஊடகங்களிடம் சரியாக வெளியிடுத்துவதில்லை எனவும் விஜித் விஜயமுனி சொய்சா மேலும் தெரிவித்தார். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

**வேலையாள் தேவை**

முல்லைத்தீவு பகுதியில் தோட்டவேலை செய்வதற்கு ஆடு, மாடு வளர்ப்பில் அனுபவமுள்ளவர்கள் தேவை. குடும்பமாக தங்குவதற்கு வசதியுண்டு. சம்பளம் 30,000/-, சாப்பாடு, தங்குமிடம் உண்டு.

(C-2806) தொடர்புகளுக்கு:
077 168 1697, 076 620 5322

## யாழ்.பல்கலைக்கழகத்தில் கணக்கீட்டு பாட கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவமற்றும்வணிக பீட யாழ். மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கணக்கீட்டு பாடக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர். தி.வேல்நம்பி தலைமையில் இடம்பெறும். (இ)

## அரசிற்கு பாரிய தலையிடியாய் மாறியுள்ள தங்கக் கடத்தல்



(கொழும்பு)

அரசாங்கம் இறக்குமதி செய்யப்படும் தங்கம் மீதான வரியை அதிகரித்ததைத் தொடர்ந்து, நாட்டுக்குள் தங்கம் கடத்தி வருவது அதிகரித்துள்ளது.

இந்த வாரத்தில் கடந்த வியாழக்கிழமை நாட்டுக்குள் சட்டவிரோதமாக பாரிய தொகை தங்கம் கடத்த முயன்ற இரண்டு சம்பவங்கள் பதி வாகியிருந்தன.

தங்கம் மீதான வரி அதிகரிப்பை தொடர்ந்து, இது வரையில், சட்டவிரோதமான 41 கிலோகிராம் தங்கம் பிடிபட்டுள்ளது. இந்தியாவிலிருந்தே நாட்டுக்குள் அதிகமான தங்கக்கடத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த வருடத்தின் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதியில், சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டவரப்பட்ட 83 கிலோகிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதன் பெறுமதி, 500 மில்லியன் ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-7)

## 10 வயது சிறுமியை ஆட்டோவிலிருந்து தள்ளிவிட்ட இளைஞர்கள் மறியலில்

(திருமலை)

திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பத்து வயது சிறுமி ஒருவரை ஆட்டோவில் ஏற்றிச் சென்று தள்ளிவிட்ட இரு சந்தேக நபர்களையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த இரு சந்தேகநபர்களை இம்மாதம் 13ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டார்.

ஆத்திமோட்டை, எட்டாம் வட்டாரம், நிலாவெளி, பகுதியைச் சேர்ந்த 20.மற்றும் 21 வயதுடைய இருவரே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமி தனியார் வகுப்புக்குச் சென்று விட்டு, வீட்டுக்கு சென்ற வேளையில் ஆட்டோவில் ஏற்றிச் சென்று தள்ளி விட்டுள்ளதாக சந்தேக நபர்களுக்கெதிராக சிறுமியின் பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை அடுத்து குறித்த சந்தேக நபர்கள் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

**Co-Operative Hospital Society Ltd Moolai**
**Wanted Doctors**

Hospital is expecting applications from Medical Officers to serve in the hospital.

Doctors can serve in the following basis;
1.Locum
2.Contract.

(C-2807)

Please Contact;
Telephone no:
021 300 1445, 021 225 0441, 077 744 8080
E-mail:
moolaii@yahoo.com

**கேள்வி அறிவித்தல்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 18.06.2018 ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| மருத்துவபீட உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவ மாணவர் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |
| இராமநாதன் விடுதி உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசாமி விடுதி உணவகம் | திருநெல்வேலி |
| பாலசிங்கம் விடுதி உணவகம் | திருநெல்வேலி |

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபா 2000/- உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/-உம் தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சதயம் 4ஆம்பாதம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BSC, MSC
பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: விவாகரத்துப் பெற்றவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/8607

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அனுசம் 1ஆம் பாதம்
கி.பா: 20
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: BSC IT
பொறியியலாளர்
தொ.இ: B/8609

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 33 செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
சொந்தத்தொழில்
தொ.இ: B/8610

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1ம் பாதம்
கி.பா: சூரி, செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L
சொந்தத்தொழில்
தொ.இ: B/8613

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3ம்பாதம்
கி.பா: 46
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BBAவங்கியாளர்
தொ.இ: G/8612

பீறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2ம் பாதம்
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.SC PHAMA
அரசதொழில்
தொ.இ: G/8619

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 1ஆம் பாதம்
கி.பா: 56
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L அரசதொழில்
தொ.இ: G/8622

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2ம்பாதம்
கி.பா: 42 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L அரசதொழில்
தொ.இ: G/8625

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நியதிச்சட்டம் நிறைவேற்றப்பட்டதும் சங்கங்களில் ஏற்படும் பிரச்சினைகளை சீர்செய்து சரியாக செயற்படுத்த முடியும்

## வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர்கள் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர்கள் அண்மையில் மகளிர் விவகார அமைச்சர் அலுவலகத்தில் மகளிர் விவகார, கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரனைச் சந்தித்து தற்போதைய சங்கத் தின் நிலைபற்றி கலந்துரையாடியுள்ளனர்.

இக் கலந்துரையாடலின் போது குறித்த சங்கம் சார்ந்த பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக சங்கத்தின் நிர்வாக சீர்கேடுகள் தொடர்பாக அங்கத்தவர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

எனவே பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் பொதுச்சபை ஒன்றினை கூட்டி புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட வேண்டும் என அங்கத்தவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் இயக்குநர் சங்கத்துக்கு எதிராக ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பாக விசாரணை நடைபெறுவதாகவும் விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றதும் புதிய இயக்குநர் சபை தெரிவுக்கான பொதுச் சபையை கூட்ட முடியும் என்றார்.

மேலும் அமைச்சர் கருத்து தெரிவிக்கையில், கடந்தகால கூட்டத்தில் கணக்கு அறிக்கை காட்டப்படும் போது நிதி நிலவரங்கள் சிறப்பான முறையில் இருப்பதாக தலைவராலும் பொதுமுகாமையாளராலும் தெரிவிக்கப்பட்டதாகவும் தற்போது நிலவுகின்ற நிதி முடக்கமானது மனவேதனையளிப்பதாகவும் கூறினார்.



சென்ற கால கூட்டத்தில் சீவல் தொழிலினை மேற்கொள்பவர்களுக்கான கொடுப்பனவில் நிதிப்பிரச்சினை இருந்ததாகவும் சீவல் தொழிலினை மேற்கொள்பவர்களுக்கு எதுவிதமான இலாப கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை எனவும் சீவல் தொழிலினை மேற்கொள்வதென்பது ஒரு நிச்சயமற்ற வாழ்க்கைத் தொழிலாக காணப்படுவதனால் அவர்களுக்கு உரிய முறையில் இலாபப்பணம் சென்றடைய வேண்டும் என சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினருக்கு தெரிவித்ததாகவும் ஆனால் அவர்கள் அதற்கு ஏற்ப நடந்து கொள்ளவில்லை என்பதையும் வெளிப்படுத்தினார்.

புதிய நிர்வாகசபை தெரிவின் பொதுக் கூட்டமானது பொதுவான மண்டபம் ஒன்றிலே நடத்தப்பட வேண்டும் எனவும் சங்க கட்டடத்தினுள் நடத்தப்படுவதால் ஏற்படும் பிரச்சினைகளை அங்கத்தவர்கள் எடுத்துக்கூறினர்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் சங்கங்களின் செயற்பாடுகளை சிறந்த முறையில் நடத்துவதற்கு புதிய நியதிச்சட்டம் வரையப்படுவதாகவும் அது நிறைவேற்றப்பட்டதும் இனிவரும் காலங்களில் நியதிச் சட்டத்தின் மூலம் சங்கங்களில் ஏற்படும் பிரச்சினைகளை சீர்செய்து சங்கங்களை சரியான முறையில் செயற்படுத்த முடியும் என கூறினார். (2)




## செயலிழக்கும் நிலையில் பொருளாதார மத்திய நிலையம்

(பரந்தன்)

கிளிநொச்சி அம்பாள்குளம் பொருளாதார மத்திய நிலையத்தில் உள்ள நாற்பது கடைகளில் இரண்டு கடைகள் மட்டுமே இயங்கி வருகின்றன.

விரைவில் அதுவும் மூடப்பட்டு பொருளாதார மத்திய நிலையம் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ஒக்டோபர் 14 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையத்தில் நாற்பது கடைகள் காணப்படுகின்றன.

இதில் தற்போது இரண்டு கடைகள் மாத்திரமே இயங்கி வருகின்றன.

இந்த இரண்டு கடைகளையும் தங்களாலும் தொடர்ந்தும் இயக்க முடியுமா என்பது சந்தேகமே என அதன் உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாற்பது கடைகளும் மாவட்டச் செயலகத்தினால் கேள்வி மனுக் கோரப்பட்டு வழங்கப்பட்டன.

ஆனால் எட்டுமாதம் கடந்த நிலையில் இரண்டு கடைகள் மட்டுமே இயங்குகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. (2-312)

## தேவிபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானம்





(பனிக்கன்குளம்)

இறுதி யுத்தத்தில் வீரகாவியமான மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்ட தேவிபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்றுக் காலை சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

தேவிபுரம் மாவீரர் துயிலுமில்ல செயற்பாட்டு குழுவினரின் ஏற்பாட்டில் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது

கடந்தாண்டு குறுகிய காலப்பகுதியில் ஏற்பாடுகள் செய்யப்பட்டமையினால் மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டாலும் சிறந்தமுறையில் அந்நாளை அனுஷ்டிக்கமுடியாமல் இருந்ததாகவும் அதனால் இம்முறை முன்னதாகவே மாவீரர் நாளுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக குறித்த காணியைத் துப்புரவு செய்து அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்குடன் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த சிரமதானப்பணியில் மாவீரர்களின் பெற்றோர், உறவுகள் தேவிபுரமக்கள் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன்,புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சி.குகநேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-287)

## பொதுநோக்கு மண்டபத்தை உரியமுறையில் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி குமாரசுவாமிபுரம் பகுதியில் கூரை சேதமடைந்து காணப்பட்ட பொது நோக்கு மண்டபம் புனரமைக்கப்பட்ட போதும், அது உரிய முறையில் புனரமைக்கப்படவில்லை என்றும் அதனை புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

குமாரசுவாமிபுரம் பகுதியில் கூரை சேதமடைந்து காணப்பட்ட பொதுநோக்கு மண்டபம் கடந்த 2017ஆம் ஆண்டு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐந்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டு குறித்த அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் குறித்த பொதுமண்டபத்தில் ஏற்கனவே கூரையில் காணப்பட்ட ஓடுகள் சேதமடைந்த மரங்களையும் கொண்டே குறித்த பொதுமண்டபம் புனரமைக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு உரிய முறையில் புனரமைக்கப்படாமையினால் குறிப்பிட்ட காலத்திற்குள் இதன் கூரைகள் சேதமடைந்து விடும் எனவும் இது தொடர்பில் தாங்கள் உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ள பிரதேச மக்கள் இதனை உரிய முறையில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

## சேனைப்புலத்தில் யானைகளால் பயன்தரும் மரங்கள் அழிப்பு

(கண்டாவளை)

வவுனியா நெடுங்கேணிப் பிரதேசத்தில் சேனைப்புலவு பகுதியில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் பெரும் பயிரழிவுகளும் ஏற்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சேனைப்புலவு கிராமத்தில் கடந்த இரண்டு தினங்களாக காட்டுயானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

இவ்வாறு காட்டு யானைகள் ஊர்மனைக்குள் சென்று மக்களின் வாழ்வாதாரத்திற்கான விவசாயச் செய்கைகளை முழுமையாக அழித்து வருகின்றன.

கடந்த காலங்களில் இப்பகுதிகளில் காட்டு யானைகளின் தாக்கம் குறைவாக இருந்த போதும், அண்மைய நாட்களாக யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றன.

கடந்த இரண்டு மூன்று நாட்களாக குடியிருப்புக்களுக்குள் உள்நுழைந்த காட்டு யானைகள் பனை, தென்னை போன்ற பயந்தரக்கூடிய மரங்களைஅழித்து வந்துள்ளன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூமாங்குளத்தில் வாள்வெட்டுத்தாக்குதல் ஒருவர் படுகாயம்; மோ.சைக்கிள் தீக்கிரை

(பனிக்கன்குளம்)

வவுனியா கூமாங்குளம் பிள்ளையார் கோவில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வாள்வெட்டு தாக்குதல்நடைபெற்றதில்ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டு பொருட்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

வவுனியா கூமாங்குளம் பிள்ளையார்வீதியிலுள்ளவீடொன்றில் இரவு 9 மணியளவில் பட்டா வாகனத்தில் வந்த 15 இற்கும் மேற்பட்ட இனந்தெரியாத நபர்கள் வீட்டு வளாகத்திற்குள் சென்று அங்கு நின்ற 32 வயதுடைய இளைஞன் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டதுடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் தீயிட்டு கொளுத்தி வீட்டின் யன்னல் கண்ணாடி மீது தாக்குதல்மேற்கொண்டுள்ளனர்மேலும் கதவை உடைத்து சுமார் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான





பணத்தினை கொள்ளையடித்துத் பித்துச்சென்றுள்ளனர் என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இதன் போது வீட்டினுள் யன்னல் அருகில் உறங்கிக் கொண்டிருந்த இரண்டு மாதகைக் குழந்தை தாயார் கட்டிப்பிடித்து காப்பாற்றியதனால் மயிரிழையில் குழந்தைக்கு எதுவித பாதிப்புமின்றி தப்பித்துள்ளது. அத்துடன் காயமடைந்த குறித்த இளைஞன் சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்தொடர்பானமேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை நேற்றைய தினம் தவசிகுளம் மற்றும் கூமாங்குளம் பகுதிகளில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் சுந்தரமூர்த்தி (வயது36) என்ற இளைஞன் மீது வாளால் வெட்டியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-281)

## 41 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்



வவுனியாவில் 41 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வவுனியா மக்கள் வங்கிக்கு முன்பாக அமைந்துள்ள கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று முன்தினம் காலை 9.40 மணியளவில் வடக்குமாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தினால் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இறம்பைக்குளம், பண்டாரிக்குளம், ஈச்சங்குளம், மரக்காரம்பளை, பூவரசங்குளம், நெளுக்குளம் ஆகிய பகுதிகளை சேர்ந்த வறுமைகோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த 41 குடும்பங்களுக்கு 7ஆயிரத்து720 ரூபா பெறுமதியான 25 கோழிக்குஞ்சுகளும் உணவுப் பாத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் நகரசபை உறுப்பினர் தி.செந்தில்ரூபன், வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் போ.மங்களநாதன், தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தின் இணைப்பாளர் ப.சிந்துஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (2)

## உலருணவுப் பொதிகள் வழங்கல்




வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவத்தன்று துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் தரிப்பிடம் மக்கள் நலன் காப்பகத்தினால் பொறுப்பேற்று நடத்தப்பட்டது. அதில் கிடைக்கப்பெற்ற நிதியில் இருந்து வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் மக்கள் நலன் காப்பகம் நடுவப்பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது. (2-9)

# ஆயிரத்து 803 குடும்பங்களுக்கு காணி ஆவணங்கள் வழங்கவேண்டும்

### கண்டாவளை பிரதேச செயலகத் தகவல்படி

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் காணிகளின்றி இருக்கின்ற 255 குடும்பங்களுக்கு காணிகளை வழங்க வேண்டியிருப்பது டன், மத்திய வகுப்புத்திட்டக் காணிகளில் வாழ்ந்து வரும் 183 குடும்பங்களுக்கு காணி ஆவணங்கள் வழங்க வேண்டியிருப்பதாகவும் கண்டாவளைப் பிரதேச செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின்கீழ் 255 குடும்பங்கள் காணிகளின்றி இருப்பதாகவும் இவ்வாறான குடும்பங்களுக்கு பிரமந்தனாறு, கல்மடுநகர், உமையாள்புரம் ஆகிய பொருத்தமான இடங்களில் காணிகள் வழங்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே வேறுநபர்களுக்கு வழங்கப்பட்ட மத்திய வகுப்புத் திட்டக் காணிகளை பகிர்ந்து குடியிருக்கும் ஆயிரத்து 803 குடும்பங்களுக்கு காணி ஆவணங்கள் வழங்க வேண்டியுள்ளதாகவும் பிரதேச செயலகத் தகவல்களில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (2-315)

## புனித சவேரியார், ஆண்கள் தேசிய பாடசாலையின் கலைவிழா நிகழ்வு





(மன்னார்)

மன்னார்-புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் இவ் ஆண்டிற்கான கலைவிழா நிகழ்வு அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்விற்கு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், இலங்கை டிலாசால் அருட்சகோதரர்களின்மாகாண முதல்வர் அருட்சகோ. அட்றியன் கிறிஸ்ரி குரூஸ், மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஏ.விக்டர் சோசை, மன்னார் மாவட்ட மேலதிக செயலாளர் எஸ்.கணபாலன், மன்னார் பிரதேச செயலாளர் என்.பரமதாசன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுகந்தி செபஸ்தியான், பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் என பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பாடசாலை மாணவர்களின் திறமையை மையப்படுத்தி பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# வடக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாணமட்ட தமிழ்த் தினப்போட்டி-2018 அண்மையில் நடைபெற்றது.

இதில் வெற்றியீட்டி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்) பி.மதுரநாயகம் அறிவித்துள்ளார். அதற்கமைவாக கட்டுரை வரைதல்: கிளி/பரந்தன் இந்து ம.வி, சி.யதுர்சனா- முதலாமிடம், பேச்சு: கிளி/ இராமநாதபுரம் ம.வி, சு.லாவண்யா- முதலாமிடம், பேச்சு: கிளி/ கிளிநொச்சி ம.வி, சு. யானுசா- முதலாமிடம், பேச்சு: கிளி/ பளை மத்திய கல்லூரி, ஜீலஜிக்கா- முதலாமிடம், பாவோதல்: கிளி/ இரமநாதபுரம் மேற்கு அ.த.க.பா, ச.பாமகள்- முதலாமிடம், ஆக்கம் எழுதுதல்: கிளி/ கனகபுரம் ம.வி, சி.நிருசி- இரண்டாமிடம், கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்: கிளி/கிளிநொச்சி ம.ம.வி, பி.அமுதினி -இரண்டாமிடம், இலக்கணப் போட்டி கிளி/ கிளிநொச்சி ம.ம.வி, ச.லக்சிகா- இரண்டாமிடம், கவிதை ஆக்கம்: கிளி/ முருகானந்தா கல்லூரி -வி. கிருபாகரன்- இரண்டாமிடம், வாசிப்பு: கிளி/வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பா, ய.பிரதீபன்- இரண்டாமிடம், பேச்சு: கிளி/ பளை மத்திய கல்லூரி, கே.கிரேஜன்- இரண்டாமிடம், தமிழறிவு வினாவிடை: கிளி/ உருத்திரபுரம் ம.வி- இரண்டாமிடம், கவிதை ஆக்கம்: கிளி/பளை மத்திய கல்லூரி, ஜெ.யசோதா- மூன்றாமிடம், பாவோதல்: கிளி/கிளிநொச்சி ம.வி, க.டர்ஜிகா-மூன்றாமிடம், நாட்டார் பாடல்: கிளி/ கிளிநொச்சி ம.ம.வி- மூன்றாமிடம் (2)

## கல்லாறு கிராம மக்களுக்கு குடிநீர் விநியோகம் ஆரம்பிப்பு



(பரந்தன்)

விசுவமடு கல்லாறுக் கிராமத்திற்கான குடிநீர் விநியோகம் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பல ஆண்டுகளாக குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வந்த விசுவமடு கல்லாறு கிராமத்தைச் சேர்ந்த 250 குடும்பங்களினுடைய குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட 8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கரைச்சிப் பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் இந்தக் குடிநீர் வழங்கலுக்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனினால் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், பிரதேச சபை உறுப்பினர்கள், மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312)




கனராயன்குளம் தெற்கு ஆலங்குளம் கிராமத்திலிருந்து கனகராயன்குளம் மகா வித்தியாலயத்திற்கு செல்லும் மாணவர்கள் பதினாறு பேருக்கு நாங்கள் உங்களுக்காக என்ற அமைப்பினால் துவிச்சக்கரவண்டிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

## 'போதை தந்த பரிசு' விழிப்புணர்வு நாடகம்




(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரம் கிராமங்கள், பொது இடங்கள் மற்றும் வீதியோரங்களில் தமிழ் இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் கலாலயா நாடக குழுவினரின் நெறியாள்கையில் "அக விழி திறப்போம்" எனும் தொனிப் பொருளில் "போதை தந்த பரிசு" விழிப்புணர்வு நாடகம் நடைபெற்று வருகின்றது.

போதைப்பொருள்பாவனை, குடும்ப வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் தற்போதுள்ள சூழ்நிலைக் கேற்ப விழிப்புணர்வு நாடகங்களை நெறிப்படுத்தி செய்வதற்கு தமது ஆதரவுகளை தருவதாக குறித்த நாடகங்களுக்கு வருகை தந்த மக்கள் கூறியுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
(படங்கள்: கொழும்புத்துறைச் செய்தியாளர்)

# மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியை அறியாதவர்போல பேசி வருகிறார் மைத்திரிபால

## ஊழல் எதிர்ப்புக்குழு காட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி நடைபெற்றதை அறியாதவர் போல் வேறு கதைகளை பேசி வருவதாக ஊழல் எதிர்ப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் நான்கு விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த சந்தர்ப்பத்தை வழங்குமாறு கோரி அனுப்பியுள்ள கடிதம் தொடர்பில் விளக்குவதற்காக இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியை உடைப்பதற்கு நல்லாட்சி அரசாங்கத்திற்கு அனுமதி வழங்கவில்லை என மைத்திரிபால சிறிசேன, மாதுளுவாவே சோபித தேரரின் நினைவு தினத்தில் கூறினார்.

வங்கியை உடைத்தவர்களை மூன்றாண்டு கடந்தும் பிடிக்க முடியவில்லையே. ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தி ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்ததை போல், அவரது அதிகாரத்தை பயன்படுத்தி, சகல தகவல்களையும் நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி அப்படி செய்யவில்லை என்றால், ஜனாதிபதியும் அதில் பங்காளியாவதை தவிர்க்க முடியாது. காலம் கடத்திக் கொண்டிருக்கலாம், அர்ஜுன் அலோசியஸிடம் பணம் பெற்ற மோசடியான அதிகாரிகள், அரசியல்வாதிகளின் தகவல்களை உடனடியாக வெளியிட வேண்டும்.



அர்ஜுன் அலோசியஸ் குற்றச்சாட்டில் இருந்து தப்பிக்க 3 ஆயிரம் மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளதாக அவரது நிறுவனத்தில் பணியாற்றும் சிலரே கூறியுள்ளனர். இதனால், நான்கு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சந்தர்ப்பம் கோரி கடிதத்தை அனுப்பியுள்ளேன்.

பிணைமுறி மோசடி தொடர்பில் இரண்டாவது ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவை நியமிப்பது, முதல் ஜனாதிபதிவிசாரணைஆணைக் குழுவின் அறிக்கையில் 106 பக்கங்களை நாட்டுக்கு வெளியிடாமை, ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத்தை மீண்டும் நிதியத்திற்கு வழங்குதல், அர்ஜுன் அலோசியஸின் நிறுவனத்திடம் இருந்து ஆயிரத்து 119 மில்லியன் பணத்தை பெற்றுக்கொண்ட 166 காசோலைகள் பற்றிய தகவல்களை வெளியிடுவது பற்றியும் ஜனாதிபதியுடன் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாக வசந்த சமரசிங்க தெரிவித்தார். (இ-7)

## புதையல் விவகாரம்; நான்கு பேர் கைது

(ஏறாவூர்)

கரடியனாறு, எலிஸ்வேவ வன பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட நால்வர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரடியனாறு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து புதையல் அகழ்விற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மற்றும் பூஜைப் பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் கொஸ்லந்த, மெரவக மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் ஏறாவூர் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (இ-7)

# நாட்டின் அபிவிருத்திக்கு மாத்திரமே முன்னுரிமை

## ரணில் கூறுகிறார்





(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்கு மாத்திரமே தற்போது முன்னுரிமை அளிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற, ஆயிரத்து 600 கிராம சேவையாளர்களுக்கான நியமனம் வழங்கல் நிகழ்வில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அபிவிருத்திக்கு தற்போது முக்கியத்துவம் வழங்குமாறும் வேறு காரியங்களை தற்போதைய நிலைக்கு தள்ளி வைக்குமாறு அமைச்சர்களுக்கு தாம் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (இ-7)





வலி.வடக்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் கருகம்பனை இந்து இளைஞர் கழகமும் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சம்மேளனமும் இணைந்து மாபெரும் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியை நேற்று கருகம்பனை கிராமத்தில் மேற்கொண்டன. இந்த சிரமதானத்தில் வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள், அயல் பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், கிராம மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

# விமல் வீரவன்சவின் கட்சியிலிருந்து மேல்மாகாண உறுப்பினர் இராஜினாமா



(கொழும்பு)

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் மேல்மாகாண சபை உறுப்பினர் றொஜர் செனவிரத்ன அக்கட்சியின் உறுப்புரிமையிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

தனது இராஜினாமாக் கடிதத்தை கட்சித் தலைவருக்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தனது இராஜினாமாவுக்கான காரணத்தை ஊடக சந்திப்பொன்றில் விளக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# அடுத்த வருடத்திற்குள் 8 ஆயிரத்து 903 வீடமைப்புத் தொகுதிகள் மக்களிடம்

(கொழும்பு)

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு அடுத்த வருடத்திற்குள் 8 ஆயிரத்து 903 வீடமைப்புத் தொகுதிகளை பொதுமக்களிடம் கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக 4451 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. கொழும்பு நகரில் குறைந்த வருமானத்தைக் கொண்ட பொது மக்களுக்காக இந்த வீடுகள் அமைக்கப்படுகின்றன.

இந்த மக்களுக்கு புதிய வீடமைப்புடன் புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வீடமைப்பு அதிகார சபை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 14 வீடமைப்புத் தொகுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 900 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட தொகை செலவில் இரண்டாயிரத்து 270 வீட்டுத் தொகுதிகளைக் கொண்ட திட்டம் கையளிக்கப்பட்டுள்ளது என்று வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆவது திருத்தச் சட்டத்தில் பயங்கரமான ஒரு விடயம்

(கொழும்பு)

ஜே.வி.பி முன்வைத்துள்ள 20ஆவது அரசியலமைப்பின் திருத்தத்தில் பயங்கரமான விடயமொன்று குறிப்பிடப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் மனோஜ் கமகே சுட்டிக்காட்டியுள்ளார்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. முன்வைத்துள்ள 20ஆவது திருத்தச்சட்டத்தில் நாட்டின் எந்தவொரு பிரஜையும், நாடாளுமன்றில் சாதாரண பெரும்பான்மை ஆதரவுடன் இந்த நாட்டின் ஜனாதிபதியாக முடியும் என்ற பயங்கரமான விடயமொன்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பார்த்தால் சிறையிலிருந்து வந்து அர்ஜுன் அலோசியஸால் கூட, ஏனெனில் அவர் குற்றவாளியாக இல்லாததால், அத்துடன் அவர் இந்த நாட்டின் பிரஜை என்பதால் அவரால்கூட ஜனாதிபதியாக முடியும். இவ்வாறானதொரு திருத்தத்தை கொண்டு வருவதன் நோக்கம் என்ன?

எனக்கு தெரிந்த காலத்திலிருந்து மக்களுக்காக செயற்பட்டு வந்த ஜே.வி.பி இன்று மக்களையா? பாதுகாக்கிறது என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# எதிர்ப்பால் மக்கள் நலன் சார்ந்த எதனையும் சாதிக்க முடியாது

## டக்ளஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுபவர்கள் அரசுக்கு வழிகாட்டியாக இருந்து மக்கள் நலன்சார்ந்த விடயங்களை முன்னெடுக்க வேண்டுமே தவிர அதை விடுத்து எதிர்ப்புக்காட்டுவதனூடாக எதனையும் சாதிக்க முடியாது என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாக செயலாளர்கள், பிரதேச நிர்வாக செயலாளர்கள், உதவி நிர்வாக செயலாளர்கள் ஆகியோருடனான சந்திப்பில் கலந் துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான அறிவித்தல் வந்த வேளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அந்த அதிகாரத்தை பெற்றுவிடக்கூடாது என்பதற்காக கடந்த காலங்களில் வடக்கு மாகாண சபையை நிராகரித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டு அதன் அதிகாரத்தை பெற்றிருந்ததையும் அதன் பின்னர் முதலாவது வடக்கு மாகாணசபையின் அமைச்சர்கள் நான்கு பேரை நிதி மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டு முதலமைச்சரால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்ததையும் சுட்டிக்காட்டிய செயலாளர்நாயகம் அதிகாரம் இல்லை என்றும் நிதி இல்லை என்றும் கூறியவர்களால் எப்படி நிதி மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட முடிந்தது என்று தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் பெரும்பாலானோர் நாளாந்த வாழ்வுக்கு கூட பல துன்ப துயரங்களை சந்தித்துவரும் நிலையில் அந்த மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கோடு துளியளவேனும் செயற்படாதவர்கள் தேர்தல் காலங்களில் கூறிய வாக்குறுதிகளுக்கமைவாகவும் செயற்படவில்லை.

அதிகாரங்களைப் பெற்றுக் கொண்ட பின் அரசை குறை கூறுவதில் மட்டும் கவனமாக இருப்பவர்கள் மக்கள் நலன்சார்ந்து உழைப்பதற்கு ஒருபோதும் தயாராக இருந்ததும் கிடையாது இருக்கப்போவதும் கிடையாது.

கடந்த காலங்களில் எமக்கு கிடைக்கப்பெற்ற பல வாய்ப்புகளையும் சந்தர்ப்பங்களையும் எமது மக்களின் நலன்களுக்காக பல்வேறுபட்ட சவால்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து அவற்றை சிறந்த முறையில் மக்களிடம் எடுத்துச் சென்று நாம் சாதித்துக் காட்டியுள்ளோம்.

அந்தவகையில் மக்கள் பிரதிநிதிகளே அரசுக்கு உரிய வழியைக்காட்டி மக்களுடைய தேவைகள் உள்ளிட்ட நலன் சார்ந்த விடயங்கள் தொடர்பில் சரியான முறையில் செயற்றிட்டங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

எதிர்ப்புக்காட்டுவதனூடாக எதனையும் சாதிக்க முடியாது என்பதனையும் கடந்த கால அனுபவங்களூடாக நாம் கற்றுக்கொண்டுள்ளோம்.

கடந்தகாலங்களில் எமது பகுதிகளுக்கு தேவையான சிற்றூழியர்கள் உள்ளிட்ட ஆளணி வெற்றிடங்களை எமது பிரதேசத்திலுள்ள இளைஞர், யுவதிகளைக் கொண்டே நிவர்த்தி செய்திருந்தோம்.

ஆனால் இன்று அவ்வாறானதொரு நிலை காணப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# பலவீனப்படுத்த நினைப்பவர்களின் முயற்சியை முறியடிக்க வேண்டும்

## ஹக்கீம் கட்சிப் போராளிகளிடம் கோரிக்கை

(கொழும்பு).

எம்மை பலவீனப்படுத்த நினைப்பவர்களின் முயற்சியை முறியடிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



புத்தளம்-கற்பிட்டி பிரதேச சபைக்குட்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அக்கரைப்பற்று மத்திய குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

எமது கட்சியை பலவீனப்படுத்துவதற்கு ஒரு சில அமைச்சர்கள் எடுத்த முயற்சிகளை முறியடிக்க வேண்டும்.

இதற்காக நாங்கள் எங்கு இருக்கின்றோம் எதனைச் செய்யப் போகின்றோம் என்பதைப் பற்றியயெல்லாம் சிந்திப்பதை விடுத்து அவர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும் எனவும் அதுவே எமது முடிவு எனவும் கூறினார்.

மேலும், இவ்வாறு கட்சியை பலவீனப்படுத்த நினைக்கின்ற யாராக இருந்தாலும் சரி அவர்களை எதிர்க்க எங்களின் முடிவின் பிரகாரம் கட்சிப் போராளிகள் மிகவும் மனப்பூர்வமாக அங்கீகரித்து இருக்கின்றார்கள் என தெரிவித்தார். (இ-7)

# நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்படும் மணல், மரக்குற்றிகள் சலுகை விலையில்

## நீதியமைச்சு விசேட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்படும் மணல் மற்றும் மரக்குற்றிகளை மதத் ஸ்தலங்கள் மற்றும் அரச வேலைத் தளங்களுக்கு சலுகை விலையில் விடுவிக்க நீதி அமைச்சு தீர்மானித்துள்ளதுடன், இது தொடர்பான சுற்றறிக்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதவான்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்படும் மணல், ஏலத்தில் விடப்படுகின்றன. அத்துடன், பறிமுதல் செய்யப்படும் மரங்கள், மரக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்படுகிறது. இந்த நடைமுறையை மாற்றி, பறிமுதல் செய்யப்படும் மணல் மற்றும் மரங்களை மதத் ஸ்தலங்கள் மற்றும் அரச வேலைத் தளங்களுக்கு வழங்க நீதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நடைமுறை முதற் கட்டமாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நடைமுறையிலிருக்கும் என நீதி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது. அந்த வகையில் ஆலயங்களுக்கு மணல் மற்றும் மரங்கள் தேவையாயின், பிரதேச செயலர் மற்றும் சம்பந்தப்பட்ட ஆலயம் சார் மத விவகார அமைச்சின் பரிந்துரையுடன் விண்ணப்பத்தை நீதி அமைச்சுக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்க வேண்டும். அரச திணைக்களங்களுக்கு மணல் மற்றும் மரங்கள் தேவையாயின் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் அமைச்சின் பரிந்துரையைப் பெற்று நீதி அமைச்சுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஒரு கியூப் மணலின் சலுகை விலையாக மேல் மாகாணத்தில் 2 ஆயிரத்து 500 ரூபாவும் ஏனைய மாகாணங்களில் ஆயிரத்து 500 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மரங்கள் அந்தந்த மாவட்டத்தின் சந்தை விலையில் 50 சதவீத சலுகை விலையில் வழங்கப்படும். அதனை மரக் கூட்டுத்தாபனமே நிர்ணயிக்கும். மதஸ்தலம் ஒன்றுக்கு அதிகபட்சமாக 10 கியூப் மணலும் ஆயிரம் கன அடி மரமும் சலுகை விலையில் வழங்கப்படும். அதற்கு மேலான ஒவ்வொரு கியூப் மணல் மற்றும் கனஅடி மரமும் நிர்ணய விலையில் வழங்கப்படும்.

டிசெம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னர் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பொது ஏலத்தில் மணல் மற்றும் மரங்கள் விற்பனை செய்யப்படும். மணல் நீதிமன்றாலும் மரங்கள் மரக் கூட்டுத்தாபனத்தாலும் ஏலத்திலும் விடப்படும்" என நீதி அமைச்சு அறிவித்துள்ளது. (இ-9)

# கிரிக்கெட் விளையாடுவதற்காக மாணவர்கள் செய்த ஆபத்தான செயல்

## பற்றி எரிந்த மைதானம்

(களுத்துறை)

களுத்துறை மாவட்டத்தில் உள்ள மைதானத்தில் கிரிக்கெட் விளையாடுவதற்காக மாணவர்கள் செய்த ஆபத்தான செயல் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது.



குறித்த பகுதியில் மழை பெய்த காரணத்தினால் மைதானத்தில் நீர் நிரம்பி ஈரமாக இருந்துள்ளது.

நிலம் ஈரமாக இருந்தால் கிரிக்கெட் விளையாடுவதற்கு சிரமம் ஏற்படும் என்ற காரணத்தினால், குறித்த நிலத்தை உலர வைக்கும் முயற்சியில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக குறித்த மைதானத்திற்கு எரிபொருளை ஊற்றி அதை பற்ற வைத்துள்ளனர்.

இதன்போது மைதானம் பற்றி எரியும் காணொளி சமூகவலைத்தளங்களில் பரவியுள்ளதுடன் இவர்கள் ஆபத்தான முறையை பின்பற்றுவதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஜெயலலிதா மரணம் தொடர்பில் எந்தவித சந்தேகமும் இல்லை

### அண்ணன் மகன் தீபக் விசாரணையில் தகவல்



(டில்லி)

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் எந்தவித சந்தேகமும் இல்லையென ஜெயலலிதாவின் அண்ணனின் மகன் தீபக் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சசிகலாவை தான் அத்தை என்றே அழைப்பேன் என்றும், அவர் ஜெயலலிதாவை பாசமாகவே பார்த்துக்கொண்டார் என்றும் சசிகலா தரப்பு சட்டத்தரணியின் குறுக்கு விசாரணையின் போது தீபக் பதிலளித்துள்ளார்.

மேலும், கடந்த 2016 டிசெம்பர் 4 ஆம் திகதியன்று மாலை ஜெயலலிதாவுக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டதில் எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெயலலிதா மரணம் குறித்து ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது. இதனிடையே ஆணையத்தில் ஏற்கனவே ஆஜராகி சாட்சியம் அளித்தவர்களிடம் சசிகலா தரப்பு சட்டத்தரணி குறுக்கு விசாரணை நடத்திவருகிறார். இந்நிலையில் தீபக்கிடமும் விசாரணை நடத்தப்பட்டது.

இதனிடையே அடுத்து, ஜெயலலிதாவின் உதவியாளராகவிருந்த பூங்குன்றனிடம் விசாரணை நடத்துவதற்கு நீதிபதியின் அனுமதி பெறப்பட்டுள்ளதாக சசிகலா தரப்பு சட்டத்தரணி ராஜா செந்தூர்பாண்டியன் தெரிவித்துள்ளார். (7)

## முதல் தகவல் அறிக்கையில் சர்ச்சை

## துப்பாக்கிச்சூடு குறித்து நான் புகார் எதுவும் அளிக்கவில்லை

### வட்ட வழங்கல் அலுவலர் கோபால் மறுப்பு

(தூத்துக்குடி)

பொலிஸாரின் எப்.ஐ.ஆரில் தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு பற்றி புகார் அளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் கோபால், நான் எந்த புகாரும் அளிக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் கடந்த 22ஆம் திகதி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராடிய பொதுமக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதில் 13 பேர் பலியானார்கள். ஏராளமானோர் காயம் அடைந்தனர். துப்பாக்கிச் சூட்டை தொடர்ந்து வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டன. ஆட்சியர் அலுவலகம் சூறையாடப்பட்டது. தூத்துக்குடி அண்ணாநகர் பகுதியில் பொலிஸ் வாகனம் தீ வைத்து எரிக்கப்பட்டது.

இந்த சம்பவங்கள் குறித்து தூத்துக்குடி வடபாகம், சிப்காட், தென்பாகம் பொலிஸார் வழக்குகள் பதிவு செய்துள்ளனர். தென்பாகம் பொலிஸார் வழக்குப்பதிவு செய்திருப்பதில் திருச்செந்தூர் வட்ட வழங்கல் அலுவலர் கோபால் புகார் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்போது திருச்செந்தூர் வட்ட வழங்கல் அலுவலராக கண்ணன் என்பவர் பணியாற்றி வருகிறார். கோபால் ஸ்ரீவைகுண்டம் வட்ட வழங்கல் அலுவலராக பணியில் உள்ளார்.

துப்பாக்கிச்சூடு விவகாரத்தில் பொலிஸார் தவறுதலாக தனது பெயரை பயன்படுத்தியதாக ஸ்ரீவைகுண்டம் வட்ட வழங்கல் அலுவலர் கோபால், உயர் அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பினார்.

அதில், 'துப்பாக்கிச்சூடு சம்பவம் நடந்த 22ஆம் திகதி நான் தூத்துக்குடி துணை ஆட்சியர் உத்தரவின் பேரில் நிர்வாக நடுவராக 3ஆவது மைல் பகுதியில் பணியில் இருந்தேன். அந்த பகுதியில் எவ்வித பிரச்சினையும் இல்லை. இது தொடர்பாக நான் எதுவும் புகார் அளிக்கவும் இல்லை.

ஆனால் நான் முன்பு பணிபுரிந்த திருச்செந்தூர் வட்ட வழங்கல் அலுவலர் பதவியை குறிப்பிட்டு தென்பாகம் பொலிஸ் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனால் நானும், எனது குடும்பத்தாரும் மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கிறோம். எனவே இதுபற்றி உண்மைத்தன்மையை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' எனக் கூறி யிருந்தார்.

இந்தக் கடிதம் பொலிஸ் வட்டாரத்திலும், அதி காரிகள் மத்தியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. வட்ட வழங்கல் அலுவலர் கோபாலுக்கு ஆதரவாக தூத்துக்குடி மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்கள் சங்க செயலாளர் செந்தூர் ராஜன், மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரியிடம் நேற்று மனு ஒன்றை கொடுத்தார். அந்த மனுவில் கூறி இருப்பதாவது,

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி கடந்த 22ஆம் திகதி போராட்டம் நடந்தது. அப்போது ஏற்பட்ட அசம்பாவிதம் தொடர்பாக தூத்துக்குடி தென்பாகம் பொலிஸ் நிலையத்தில் திருச்செந்தூர் வட்ட வழங்கல் அலுவலர் கோபால் என்பவர் புகார் அளித்ததாகவும், அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு உள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

கோபால் தற்போது ஸ்ரீவைகுண்டத்தில் பணிபுரிந்து வரும் நிலையில் அவர் புகார் அளிக்கவில்லை என மறுத்துள்ளார். இந்த சம்பவம் குறித்து மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் வருவாய்த்துறை அலுவலர்களை இது போன்ற பொய்யான புகார் அளிக்க வற்புறுத்துவதை தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தமிழகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் தென்பாகம் பொலிஸார் முதல் தகவல் அறிக்கையில் பொய்யான பெயரை குறிப்பிட்டிருப்பதாக அதிகாரிகள் குற்றம் சாட்டியிருப்பது மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (7)

## விமான எதிர்ப்பு ஏவு

## நிறுவினால் இராணுவ

## கட்டாருக்கு சவுதி அரேபி



(ரியாத்)

ரஷ்யாவிடம் இருந்து விமானங்களை எதிர்த்து அழிக்கும் ஏவுகணைகளை கட்டார் வாங்கினால், அந் நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என சவுதி அரேபியா அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சவுதி அரேபியா, அமெரிக்கா, பஹ்ரைன், எகிப்து உட்பட பல வளைகுடா நாடுகள் கட்டார் உடனான தூதரக மற்றும் வியாபார ரீதியிலான உறவை கடந்தாண்டு துண்டித்தது. இதற்கு பின்னணியில் அமெரிக்கா இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது.

கட்டார் நாட்டு அரசு பயங்கரவாதத்திற்கு உதவி செய்வதாக கூறி வளைகுடா நாடுகள் அந்நாட்டுடனான உறவை துண்டித்தன.

இந்நிலையில், கடந்த ஆண்டு

## இஸ்ரேலுக்கு கடிவாளம் போடு

## அமெரிக்கா வீட்டோ அதிகாரம்

(நியூயோர்க்)

காஸா எல்லையில் பாலஸ்தீனியர்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வகை செய்யும் தீர்மானம் ஐ.நா பாதுகாப்பு சபையில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், தனது வீட்டோ அதிகாரம் மூலம் அமெரிக்கா அதனை நிராகரித்தது.

இஸ்ரேல் - பாலஸ்தீன எல்லையான காஸா முனைப்பகுதியில் கடந்த ஒரு மாதமாக இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் மற்றும் பாலஸ்தீன மக்கள் இடையே மோதல் நடந்து வருகிறது.



நேற்று, முன்தினம் இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதலில் பாலஸ்தீன் செவிலியர் பெண் பலியானததை தொடர்ந்து உயிரிழந்தவர்கள் எண்

## தமிழர்களை ஏமாற்றியே தி.மு.க. ஆட்சிக்கு வந்தது

### பொன்.ராதா குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழை சொல்லி, தமிழர்களை ஏமாற்றியே தி.மு.க. ஆட்சிக்கு வந்ததாக, மத்திய இணையமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.

கோவையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த அவர், மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

காவிரி நீரை தமிழகத்திற்கு பெற்றுக்கொடுப்பது தொடர்பில், தி.மு.க. அல்லது காங்கிரஸ் கட்சிகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் பேசியது கிடையாது என்றும், தற்போது அவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், கர்நாடகா அரசு காவிரி ஆணையத்திற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்கின்ற விதிமுறையை பிரதமர் நரேந்திர மோடி தெளிவாக சட்டமாக்கியுள்ளதாகவும் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ்வாறு தமிழக மக்களின் நலன் கருதி செயற்படும் மோடி அரசிற்கு, கர்நாடகா அரசு துணையாக செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அவ்வாறின்றி ஏதாவது பிரச்சினை ஏற்படுமாயின், அவற்றை தீர்த்து வைக்க தி.மு.க. முன்னின்று செயற்பட வேண்டுமென்றும், அது தி.மு.கவின் கடமை என்றும் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## அமெ. கூட்டுப்பன

## ஒரே குடும்பத்தை



(பெய்ரூட்)

சிரியாவின் ஹசாகே மாகாணத்தில் அமெரிக்க கூட்டுப் படையினர் நேற்று முன்தினம் நடத்திய வான் வழி தாக்குதல்களில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 12 பேர் உயிரிழந்தனர்.

சிரியா நாட்டின் பல பகுதிகளை ஐ.எஸ். அமைப்பினர் கைப்பற்றி வருகின்றனர். பயங்கரவாதிகள் பொது மக்களை குறிவைத்து தாக்குதலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ஏவுகணைகளை

# வ நடவடிக்கை

## பியா எச்சரிக்கை

ரஷ்யாவுடன் கட்டார் அரசு ஆயுதங்கள் வாங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அதன்படி அடுத்த ஆண்டு ஜனவரியில், விமானங்களை தாக்கி அழிக்கும் ஏவுகணைகளை வாங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள சவுதி மன்னர் சல்மான், பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதியான இம்மானுவேல் மக்ரோனுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இதுகுறித்து பிரான்ஸ் நாட்டின் பிரபல நாளிதழில் வெளியான செய்தியில், கட்டார் நாடு ஏவுகணை வாங்குவதை தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்க சவுதி அரசு தயாராக இருப்பதாகவும், தேவைப்பட்டால் இராணுவத்தை பயன்படுத்தவும் தயார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பிரான்ஸ் ஜனாதிபதி இந்த விவகாரத்தில் தலையிட்டு ஆயுத பரிமாற்றத்தை தடுத்து அமைதி நிலவ வழி செய்யுமாறும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக நாளிதழில் செய்தி வெளியானது.

ஆனால் இதுவரை இது குறித்து பிரான்ஸ் பதில் ஏதும் அளிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# தென்சீனக் கடல்பகுதியில் ஏவுகணைகளை நிறுத்தி

# அண்டை நாடுகளை மிரட்டுகிறது சீனா

## அமெரிக்கா பகிரங்க குற்றச்சாட்டு

(சிங்கப்பூர்)

சர்ச்சைக்குரிய தென்சீனக்கடல் பகுதியில் ஏவுகணைகளை நிறுத்தி வைத்து, சீனா அண்டை நாடுகளை மிரட்டுகிறது என அமெரிக்கா பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளது.

சீனாவின் தென்பகுதியில் அமைந்து இருப்பது தென்சீனக்கடல். பசுபிக் பெருங்கடலின் ஒரு பகுதியாக திகழ்கிற தென்சீனக்கடல், 35 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவிலானது. உலகின் 3 இல் ஒரு பங்கு கப்பல் போக்குவரத்து இந்தக் கடல் வழியே நடைபெறுகிறது. அது மாத்திரம் அல்லாமல், இந்தக் கடலின் அடியில் ஏராளமான எண்ணெய் இயற்கை எரிவாயு வளம் உள்ளது.

இதன் காரணமாக இந்த கடல் முக்கியத்துவம் பெற்று உள்ளது. இருப்பினும் இந்த கடலின் சர்ச்சைக்குரிய பகுதிகள் மீது சீனாவுடன் வியட்நாம், பிலிப்பைன்ஸ் தாய்வான், மலேசியா போன்ற நாடுகள் உரிமை கொண்டாடி வருகின்றன.

ஆனால் சீனா அதில் செயற்கை தீவுகளை அமைத்து, அதை இராணுவமயமாக்கி வருவதாக பரவலாக ஒரு சர்ச்சை உள்ளது. அண்மையில் அங்கு உள்ள பாரசல் தீவின் அங்கமான ஊடி தீவில் சீனா கனரக போர் விமானங்களை நிறுத்தியது. இதை சீனா ஒப்புக் கொண்டது. ஆனால் சீனா அந்தப் பிராந்தியத்தை சீர்குலைப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது.

இந்த நிலையில் அமெரிக்க இராணுவ அமைச்சர் ஜெனரல் ஜேம்ஸ் மேட்டிஸ், சிங்கப்பூரில் பாதுகாப்பு தொடர்பான ஒரு மாநாட்டில் பேசினார். அதில் அவர் சர்ச்சைக்குரிய தென்சீனக்கடல் விவகாரம் குறித்து பிரச்சினை எழுப்பினார். அப்போது அவர் பேசும் போது கூறிய தாவது,

தென் சீனக்கடல் பகுதியில் கப்பல்களை தாக்கும் ஏவுகணைகள், தரையில் இருந்து வானுக்கு சென்று தாக்குதல் நடத்தும் வல்லமைமிக்க ஏவுகணைகள், மின்கருவிகளை செயலிழக்க செய்கிற ஜாமர் கருவிகளை சீனா ஏராளமாக நிறுத்தி வைத்துள்ளது.

இவற்றை சீனா நிறுத்தி வைத்து இருப்பதன் நோக்கம், அண்டை நாடுகளை மிரட்டுவதும் அச்சுறுத்துவதும் தான்.

சீனாவின் நடவடிக்கைகள் அதன் பரந்த நோக்கங்களை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

சீனாவுடன் அமெரிக்கா ஆக்கபூர்வமான உறவைப் பராமரிக்கத்தான் விரும்புகிறது. அதே நேரத்தில் தேவைப்பட்டால் அந்த நாட்டுடன் தீவிரமாக போட்டியிடுவோம்.

இந்த பிராந்தியத்தில் சீனா முக்கிய பங்கு ஆற்ற வேண்டும் என்பதை அமெரிக்கா அங்கீகரிக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தென்சீனக்கடலில் சர்ச்சைக்குரிய பகுதிகளை இராணுவ மயமாக்க மாட்டோம் என்று 2015ஆம் ஆண்டு, சீன ஜனாதிபதி ஜின் பிங் வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் அளித்த வாக்குறுதியை காப்பாற்றத்தவறி விட்டது என்றும் அமெரிக்க இராணுவ அமைச்சர் ஜெனரல் ஜேம்ஸ் மேட்டிஸ் சாடினார்.

இந்த மாநாட்டில் ஜேம்ஸ் மேட்டிஸ் பேசும்போது, ட்ரம்ப், வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் உன் சந்திப்பு பற்றியும் குறிப்பிடத் தவறவில்லை.

இது தொடர்பாக அவர் பேசுகையில், "ஜனாதிபதி ட்ரம்ப், கிம் ஜாங் உன் இரு வரும் சிங்கப்பூரில் 12ஆம் திகதி சந்தித்து நடத்த உள்ள பேச்சுவார்த்தையில் தென்கொரியாவில் அமெரிக்க இராணுவத்தை நிறுத்தி உள்ள விவகாரம் இடம் பெறாது. (தென் கொரியாவில் அமெரிக்கா 28 ஆயிரத்து 500 துருப்புகளை நிறுத்தி வைத்து இருக்கிறது). கொரிய தீபகற்ப பகுதியில் அணு ஆயுதங்கள் முழுமையாகக் கைவிடப்பட வேண்டும் என்பது தான் அமெரிக்காவின் விருப்பம்" என்று குறிப்பிட்டார்.(7)

# ம் ஐ.நா.தீர்மானத்தை

# மூலம் முறியடித்தது

ணிக்கை 123 ஆக அதிகரித்துள்ளது.

இதனை அடுத்து, குவைத் மற்றும் சில வளைகுடா நாடுகள் ஐ.நா. பாதுகாப்பு சபையில் ஒரு தீர்மானத்தை கொண்டு வந்தன. காஸா எல்லை மற்றும் மேற்குக்கரை மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும், அங்கு சர்வதேச பாதுகாப்பு குழுவை ஐ.நா. பார்வையில் அமைப்பது ஆகியன அந்த தீர்மானத்தின் சிறப்பம்சமாகும்.

நேற்று முன்தினம் இந்த தீர்மானம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அமெரிக்கா இந்த தீர்மானத்தை நிராகரித்தது. இந்த தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய அமெரிக்க பிரதிநிதி நிக்கி ஹாலே, 'இஸ்ரேல் மீது எல்லா குற்றச்சாட்டுகளையும் சுமத்த ஐ.நா.உறுப்பு நாடுகள் விரும்புகின்றன. ஆனால், ஹமாஸ் மீது குற்றம் சாட்ட யாருக்கும் விருப்பமில்லை' எனத் தெரிவித்தார். (7)

# துருக்கி விமானப்படைத் தாக்குதலில் 15 குர்திஸ்தான் போராளிகள் பலி!

(இஸ்தான்புல்)

ஈராக் நாட்டின் வடபகுதி மற்றும் துருக்கி நாட்டின் கிழக்கு மாகாணங்களில் துருக்கி விமானப்படை தாக்குதலில் 15 குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியை சேர்ந்த 15 பேர் உயிரிழந்தனர்.

ஈராக்கில் குர்திஸ்தான் தொழிலாளர்கள் கட்சி என்னும் அமைப்பை அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் துருக்கி உள்ளிட்ட நாடுகள் பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளன.



பெரும்பாலும் ஈராக்கின் வடக்கு பகுதியில் ஆதிக்கம் செலுத்திவரும் குர்திஸ்தான் பயங்கரவாதிகள், கான்டில் மலைப்பகுதியில் முகாம்களை அமைத்துள்ளனர். இங்கிருந்தவாறு துருக்கி எல்லையில் பயங்கரவாத தாக்குதல்களை அவ்வப்போது நடத்தி வருகின்றனர்.

துருக்கி நாட்டின் தென் கிழக்கு எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் இவர்கள் நடத்திய தாக்குதல்களில் சுமார் 40 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களை வேட்டையாடும் பணியில் துருக்கி நாட்டின் விமானப்படைகள் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில், தங்கள் நாட்டில் தாக்குதல் நடத்த குர்திஸ்தான் பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக துருக்கி நாட்டு உளவுத்துறைக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதைத்தொடர்ந்து, ஈராக் நாட்டின் வடபகுதி எல்லைக்குள் புகுந்தும், துருக்கி நாட்டின் கிழக்கு மாகாணங்களான டுன்செலி மற்றும் சீர்ட் பகுதிகளிலும் உள்ள குர்திஸ்தான் முகாம்களின் மீதும் துருக்கி விமானப் படைகள் நேற்றும் இன்றும் அதிரடியாக தாக்குதல் நடத்தின. இதில் 15 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக துருக்கி இராணுவம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. (7)

# படையினர் வான்வழித்தாக்குதல்

## தச் சேர்ந்த 12பேர் உயிரிழப்பு



ஈடுபட்டு வருகின்றனர்.

பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக சிரியா நாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அமெரிக்கா தலைமையிலான ஜிகாதி ஒழிப்பு படையினர் தொடர்ந்து வான்வழி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த தாக்குதல்களில் பொதுமக்கள் பலியாகின்றனர்.

இந்நிலையில், சிரியா நாட்டின் ஹசாகே மாகாணத்தில் உள்ள ஹிடாஜ் கிராமத்தில் பயங்கரவாதிகளை குறி வைத்து அமெரிக்க கூட்டுப் படையினர் நேற்று வான் வழி தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 20 பேர் உயிரிழந்ததாக அங்கு இயங்கி வரும் பிரிட்டனை சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 2 பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது. கடந்த 2011ஆம் ஆண்டு முதல் சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர் மற்றும் தாக்குதல்கள் காரணமாக 3.5 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# எகிப்து ஜனாதிபதியாக மீண்டும் பதிவியேற்றார் அப்தேல் அல்சிசி

(கெய்ரோ)

எகிப்தில் அண்மையில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் 97 சதவிகித வாக்குகள் பெற்று அபார வெற்றி பெற்ற அப்தேல் அல்சிசி நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார்.



எகிப்து ஜனாதிபதி தேர்தல் கடந்த மார்ச் மாதம் நடந்தது. ஜனாதிபதியாக இருந்த அப்தேல் பாட்டா அல் சிசி மீண்டும் தேர்தலில் போட்டியிட்டார். முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைவர் சிறையில் உள்ள நிலையில், பல்வேறு கட்சிகள் தேர்தலை புறக்கணித்தன. இதனால், அல்சிசியை எதிர்த்து முக்கிய பிரமுகர்கள் யாரும் போட்டியிடவில்லை.

இதனால், 97 சதவிகித வாக்குகள் பெற்று அல்சிசி அபார வெற்றி பெற்றார். இந் நிலையில், இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக அல்சிசி நேற்று முன்தினம் பதவியேற்றார். பாராளுமன்ற சிறப்பு கூட்டத்தில் எம்.பி.க்கள் மற்றும் தனது குடும்பத்தினர் முன்னிலையில் அல்சிசி பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் மீளவும் சர்வாதிகாரத்தை உருவாக்க முயற்சி

## இராஜாங்க அமைச்சர் விசனம்

(கொழும்ப)

நாட்டில் மீளவும் சர்வாதிகாரத்தை உருவாக்க முயற்சிக்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா விமர்சித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து கொழும்பில் நடத்தப்பட்ட கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ராஜபக்ஷ அரசாங்கம் வெட்கமின்றி, இராணுவத் தலைமையகத்தை விற்பனை செய்தது.

வெள்ளைவான் கலாசாரம், இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் கலாசாரம் மற்றும் கடும்போக்குவாத சக்திகள் வியத்மக என்ற அமைப்பின் ஊடாக தலை தூக்கினால் அதன் பின்னணியிலுள்ள பயங்கர சர்வாதிகாரியும் தலைதூக்கக் கூடும்.

2020ஆம் ஆண்டில் மீளவும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வியத்மக அமைப்பின் ஊடாக முயற்சிக்கப்படுகின்றது. இடதுசாரி கொள்கைகளை பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் ராஜபக்ஷ தரப்பு உண்மையில் அவ்வாறு கிடையாது.

ராஜபக்ஷ அரசாங்கம் மீளவும் ஆட்சி பீடம் ஏறினால் நாட்டு மக்களின் ஜனநாயகம் முழுமையாகவே ஒடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அமெரிக்க - இலங்கை விமானப்படை அதிகாரிகள் இடையே உயர்மட்ட பேச்சு



(கொழும்பு)

அமெரிக்க -இலங்கை விமானப்படைகளுக்கு இடையிலான பேச்சுக்கள் கொழும்பில் இடம்பெற்றுள்ளதாக, அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் கட்டளைப் பீடத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மே மாத நடுப்பகுதியில் இரண்டு நாட்கள் இந்த உயர் மட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கை விமானப் படைத் தலைமையகத்தில் நடந்த இந்தப் பேச்சுக்களில், அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த விமானப்படை அதிகாரிகளும்,இலங்கை விமானப்படை அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இது அமெரிக்க-இலங்கை விமானப்படை அதிகாரிகளுக்கு இடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களாகும்.

இந்தப் பேச்சுக்களில் ஓடுபாதை நடவடிக்கைகள், விநியோகம், பாதுகாப்பு, மருத்துவம் போன்ற துறைகளில், நிபுணத்துவம் பெற்ற ஏழு அமெரிக்க விமானப்படை அதிகாரிகள், இலங்கை விமானப் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

பிராந்திய பாதுகாப்பு, இரண்டு நாடுகளினதும் விமானப்படையினருக்கான எதிர்கால பயிற்சி வாய்ப்புகள், ஒத்திகைகள் குறித்தும் இந்தப் பேச்சுக்களின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க தரப்பு குழுவுக்கு பசுபிக் விமானப்படைத் தளபதியின், வான் தேசிய காவற்படை உதவியாளர் மேஜர் ஜெனரல் ஜேம்ஸ் ஓ எய்பேர்ட் தலைமை தாங்கினார்.

பசுபிக் விமானப்படையின் அனைத்துலக உறவுகளுக்கான பிரிவின் தெற்காசியப் பிரிவுக்கான பணிப்பாளர். மேஜர் மார்ச் லீசரும் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றார்.

இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட மேஜர் ஜெனரல் ஜேம்ஸ் ஓ எய்பேர்ட், "இந்தியப் பெருங்கடலில் இலங்கை மிக முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கிறது. இலங்கையுடன் நாம் பலமான உறவுகளை வைத்துக் கொள்வதற்கு இது முக்கியமான காரணம்.

இந்தப் பேச்சுக்கள் மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளன.

இலங்கை விமானப்படை தமது தேவைகள், முன்னுரிமைகள் தொடர்பான தகவல்களை பரிமாறி, மிகச் சிறந்த பணியை மேற்கொண்டது. இது அவர்களை இந்தோ-பசுபிக் கட்டளை பீடத் தலைமையகத்துக்கு மீண்டும் அழைத்து வர எமக்கு உதவியாக உள்ளது.

இது அமெரிக்க-இலங்கை உறவுகளை முன்னேற்றுவதற்கு சிறந்த வாய்ப்பாக அமைந்தது" என்று கூறினார்.

இந்தப் பேச்சுக்களில், பெறுமதியான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கும், பிணைப்பை வலுப்படுத்திக் கொள்வதற்குமான முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மட்டக்களப்பு கடற்கரைப்பகுதியும் இராஜாங்க அமைச்சரின் வசமா?





(ஏறாவூர்)

மட்டக்களப்பு - செங்கலடி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தளவாய், புன்னக்குடா முனைப்பகுதி பல வருட காலமாக அரச காணியாகவே இருந்து வந்தது.

ஆனால் தற்போது அக்காணி இராஜாங்க அமைச்சர் ஒருவரால் அபகரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடலரிப்பில் இருந்து நிலத்தை இக்காட்டுப் பகுதி பாதுகாத்து வந்தது. ஆனால் தற்போது அங்கிருந்த கண்டல் தாவரங்கள் அழிக்கப்பட்டு. பனை மரங்கள் வெட்டப்பட்டும் உள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதி என்பதனால் பாதுகாப்பு கருதி 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டப்பட்ட சவுக்கு மரங்கள் தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அப்பகுதியில் கடல் 100 மீற்றர் தூரம் முன்னோக்கி வந்துள்ளது.

அரச சட்டத்தின் படி கடல் எல்லையில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் தான் காணி எடுக்க முடியும். ஆனால் இக்காணி கடல் எல்லையில் இருந்து சுமார் 30 மீற்றர் தூரம் கூட இல்லாத அளவுக்கு அடைக்கப்பட்டுள்ளது.

சாதாரண மக்கள் என்றால் உடனடியாக அவர்கள் மீது சட்டம் பாயும். ஆனால் அமைச்சர் என்றவுடன் அமைதி காக்கின்றார்கள் எனப் பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், நமக்காகவும் நமது சந்ததியினருக்காகவும் பாதுகாத்து வைத்திருந்த இயற்கை வளங்கள், வயல் காணிகள், துறைமுகங்கள், வனப்பகுதிகள் என்பன அண்மைக்காலங்களாக அபகரிக்கப்பட்ட வண்ணமாகவே இருக்கின்றதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனினும் இந்த காணி அபகரிப்பு குறித்து தமிழ் அரசியல் தலைமைகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### தலைப்பாகை கட்டிக்கொள்ளும் போது...

"நான் அதை முன்னின்று நடத்தி வைத்தேன்; எவ்வளவோ பாடுபட்டேன்; பயனில்லை. கடைசியில் எனக்குக் கெட்ட பெயர். என்மீது அநியாயமாய்ப் பழி போட்டுவிட்டார்கள்," என்று பலரும் புலம்புவதைப் பார்க்கிறோம்.

எனக்கு இப்படிப் புலம்புகிறவர்களைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது.

நம்மவர்கள் குறை சொல்வதில் வல்லவர்கள். எதையும் சாமானியத்தில் எடுத்துச் செய்ய மாட்டார்கள். வக்கணையாகப் பேசுவதற்கு மட்டும் வந்துவிடுவார்கள்.

எனவே இப்படிப் புலம்புகிறவர்கள் நாம் எத்தகைய சமூகத்தின் நடுவே வாழ்கின்றோம் என்பதை முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு நல்ல காரியத்தையோ ஒரு பொதுக் காரியத்தையோ எடுத்துச் செய்யும் போது நம்மீது என்னவெல்லாம் குற்றச்சாட்டு எழும் என்பதில்தான் இவர்கள் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

"நான் முடிவு எடுத்தேன். நான்தான் செயற்பட்டேன். எனவே அதில் வரும் நல்ல பெயர் முழுவதும் எனக்குத்தான் சேர வேண்டும் என்கிற மனோபாவத்தைக் கைவிட வேண்டும். மாறாக மற்றவர்களைக் கலந்தே முடிவெடுக்க வேண்டும். ஆளுக்கு ஒன்றைச் சொன்னால் அவற்றுள் நாம் திடமாக நல்லது என்று நம்புகிற ஒன்றை எடுத்துக்கொண்டு அதைச் சொன்னவர்களைத் துணைக்கு அழைத்துக்கொள்ள வேண்டும். வரக்கூடிய பெருமையையும் பாராட்டையும் அவர்களுடன் பங்கு போட்டுக் கொள்ளத் தயங்கக் கூடாது.

இந்தச் செயலுக்கு ரொம்பவும் பாராட்டுக் கிடைக்கப்போகிறது என்கிற எதிர்பார்ப்பை ஏற்படுத்திக் கொள்ளாமல் சிறப்பாக நடந்த இந்த வைபவத்தைக்கூடச் சிலர் குறை சொல்லப் போகிறார்கள் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும்.

தலைப்பாகை கட்டிக் கொள்கிறவர்கள் மேலும் ஓர் உண்மையை உணர வேண்டியது அவசியம். பாராட்டு இருக்கிறதே, இது ஒரு நோஞ்சான் மனிதனின் குரலைப் போன்றது. இவனது குரல் நமக்குக் கேட்கவே கேட்காது. குறை சொல்வது இருக்கிறதே, இது ஒலிபெருக்கி போன்றது. ஒன்றும் இல்லாத விடயம் கூட பெரிதாக்கப்பட்டு விடும். இதற்காக வெல்லாம் நாம் சோர்ந்து போய் நமக்கும் இதற்கும் சரிப்பட்டு வராது என்கிற முடிவுக்கு வந்து விடக்கூடாது.

ஒரு காரியத்தில் இறங்கும் போது அதை ஒரு போராகவே எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தப் புனிதமான போரில் வெற்றிகளுடன் சில காயங்களும் சேர்ந்து வரும். இவற்றை நாம் அதிகம் பொருட்படுத்த வேண்டியதில்லை. இந்த மனப்பக்குவம் இல்லாதவர்கள் தலைப்பாகைக்கு ஆசைப்படக் கூடாது!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசு ஆட்சிக்காலத்தை முழுமையாக பூர்த்தி செய்யாது

## மைத்திரி-மகிந்த விரைவில் கூட்டணி-எஸ்.பி.தகவல்



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து பரந்துபட்ட கூட்டணியொன்றை உருவாக்கவுள்ளன என தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க இந்தக் கூட்டணியே 2020 ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரை தெரிவு செய்யும் எனவும் தெரிவித்தார்.**

அடுத்த மாகாணசபைத் தேர்தலில் கூட்டணியொன்றே போட்டியிடும் என தெரிவித்துள்ள எஸ்.பி. திஸாநாயக்க தற்போதைய தேசிய அரசாங்கம் அதன் எஞ்சிய காலத்தை முழுமையாக பூர்த்தி செய்யாது எனவும் தெரிவித்தார்.

16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்திலிருந்து விலகியது சரியான முடிவு என ஜனாதிபதி நினைக்கின்றார் என நான் கருதுகின்றேன் என எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் அரசாங்கத்தில் உள்ளமை தவறு என ஜனாதிபதி கருதுகின்றார் என நான் கருதுகின்றேன் எனவும் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நாங்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளோம்.ஒட்டுமொத்தத்தில் இது ஐக்கிய தேசிய கட்சியை தோற்கடிப்பதற்கான தந்திரோபாயம் என முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)







கரவெட்டி கரணவாய் கிழக்கு பிரதேசத்தில் ஜே/ 331 கிராம உத்தியோகத்தர் பிரிவில் கத்தோலிக்க சேமக்காலை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் ஒதுக்கப்பட்ட 10 இலட்சம் ரூபாய் விசேட நிதியின் மூலமே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் கந்தையா வைத்தியநாதன்,மதகுருமார்கள் இணைந்து சேமக்காலையை திறந்து வைத்தனர். (படங்கள்:- சுபேசன்)

## இராணுவம் இரத்ததானம்





(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள 10 ஆவது விஜய பாகு படையணியின் 24 ஆவது வருடநிறைவு தினத்தை முன்னிட்டு இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று குறித்த முகாமில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இப்படையணியின் இராணுவத்தினர் 102 பேர் இரத்ததானம் வழங்கினர். (இ-9)

## உலக சூழல் தினம் நாளை

(கரணவாய்)

வடமராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் உலக சூழல் தினம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் நெல்லியடி மத்திய கல்லூரியில் நிறுவனத் தலைவர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் மா.நடராசசுந்தரம், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், சிறப்புரைகளை யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.வேலாயுதமூர்த்தி, யாழ்.பல்கலைக்கழக புவியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கே.பிரதீபராஜா. தகவல் தொழில் நுட்பவளவாளர் கே.அசோகன் ஆகியோர் வழங்குவர். (இ-60)

## 5 குடும்பங்களுக்கு இராணுவம் உதவி

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் மனித நேய செயற்றிட்டத்தின் கீழ் முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்திலுள்ள வறுமைக்கோட்டுக்குட்பட்ட 5 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து வழங்கப்படவுள்ளன.

பாதுகாப்பு படைகளின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் வழிகாட்டலுக்கு அமைய இப்பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முழுமையாக அமைத்துக் கொடுக்கப்படவுள்ள இந்த வீடுகளுக்கு மனித நேய செயற்பாட்டாளர் வதனி மோகன் சங்கர் நிதி பங்களிப்பை செய்யவுள்ளார்.

குறித்த வீடுகளின் கட்டுமானப் பணிகளை இராணுவத்தினர் மேற்கொள்ளவுள்ளதுடன் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்கு முன்னர் வீடுகள் குறித்த பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## மாணவர்கள் சிரமதானம்



(சாவகச்சேரி)

ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளுக்கு அமைய அனைத்து அரச தனியார் நிறுவனங்களில் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களைத் தொடர்ந்து பரிசோதித்தல்,டெங்கு நுளம்புகள் பரவுவதைக் குறைத்தல் எனும் விசேட நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்று வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வர்ணகுலசூரியாவின் வேண்டுகோளுக்கு இணங்க சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த முதலாம் திகதி காலை சிரமதானப்பணிகள் இடம்பெற்றன.

இந்த சிரமதான நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முதல்வர் ந.சர்வேஸ்வரன்,பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரி விக்கிரமசிங்க, சாவகச்சேரி நகர்ப்பகுதியின் சுகாதார பரிசோதகர் தளிர்ராஜ் மற்றும் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பல்கலை. பீடாதிபதி உட்பட 10 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்




(ஏறாவூர்)

மட்டக்களப்பு - கல்முனை வீதியை மறித்து போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தியதாக தெரிவித்து கிழக்கு பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்கள் இருவர் உட்பட பத்துப் பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு காத்தான்குடி பொலிஸாரினால் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 12ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில், கல்லடி பாலத்திற்கு அருகில் கடந்த வியாழக்கிழமை இரவு வீதியை மறித்து இளைஞர்கள் மேற்கொண்ட போராட்டம் காரணமாக அப்பகுதியில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதன்போது, கல்லடி பாலத்திற்கு அருகில் போக்குவரத்து பொலிஸாருக்கும், இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தினை தொடர்ந்து இளைஞர் ஒருவர் பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட நிலையிலேயே இந்த நிலையுருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்லடி பகுதியில் வீதி பாதுகாப்பு பரிசோதனையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸார் அப்பகுதியில் இளைஞர் ஒருவர் மீது போக்குவரத்து சட்டத்தினை நடைமுறைப்படுத்த நடவடிக்கையெடுத்ததாகவும் இதன்போது வாயத் தர்க்கம் ஏற்பட்ட நிலையில் பொலிஸார் விதிமுறைகளை மீறி நடந்துகொண்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

எனினும் தமது கடமைக்கு இடைஞ்சல் ஏற்படுத்திய இளைஞரை வாக்குமூலம் வழங்குவதற்கு அழைத்த நிலையிலேயே இந்த சம்பவம் வேறு திசைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

போக்குவரத்து பொலிஸார் தமது விதிமுறைகளை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டதுடன் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் இருந்து பொல்லுகளுடன் வந்த பொலிஸார் குறித்த இளைஞனை கைது செய்ய முற்பட்டதாகவும் அதன்போது இளைஞர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாகவும் தெரிவித்திருந்தனர்.

எவ்வாறாயினும் இளைஞர்கள் குறித்த இளைஞன் வரும் வரையில் போக்குவரத்திற்கு அனுமதிக்கமாட்டோம் என தெரிவித்து கல்முனை - மட்டக்களப்பு வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்ததன் காரணமாக ஒன்றரை மணிநேரம் மட்டக்களப்பு - கல்முனை வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

நீண்ட வரிசையில் வாகனங்கள் நின்ற நிலையில் சுமார் ஒரு மணி நேரத்திற்கு பின்னர் காத்தான்குடி பொலிஸ் நிலையம் சென்றவர் வந்ததன் பின்னரே குறித்த வீதியூடான போக்குவரத்திற்கு இளைஞர்கள் அனுமதியளித்தனர்.

இது தொடர்பில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீட பீடாதிபதி மு.ரவி மற்றும் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்களான வி.பூபாலராஜா, து.மதன் உட்பட 10 பேருக்கு எதிராக மக்களின் போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்தியதான வழக்கு காத்தான்குடி பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முன்மாதிரியாக மக்கள் பிரதிநிதிகள் செயற்படுவது மகிழ்ச்சியளிக்கிறது

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவிப்பு



(ஏறாவூர்)

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் முன்மாதிரியான அரசியல்நடைமுறைகளை ஏனைய மக்கள் பிரதிநிதிகள் சிலரும் பின்பற்றுவதை நோக்கும் போது மகிழ்ச்சியளிப்பதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின்ஸ்தாபக அங்கத்தவரும் காத்தான்குடி நகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எம். சபீல் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஊடக அறிக்கை ஒன்றை நேற்று ஞாயிற்றுக் கிழமை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"நல்லாட்சிக்கான தேசிய முன்னணி நீண்ட காலமாக நடைமுறைப்படுத்திவரும்திட்டங்களை போலவே தனக்குக் கிடைத்த நகரசபைக்கொடுப்பனவை சொந்தமாக்கிக் கொள்ளாமல் நகர சபை பொது நிதிக்கே மீண்டும் ஒப்படைத்துள்ள காத்தான்குடி நகர சபை உறுப்பினரான ஷிப்லி பாறூக் நடவடிக்கை பாராட்டுக்குரிய விடயமாகும். ஏனையோர்களும் இதுபோன்று முன் மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும்.

அரசியல் என்பது மக்களுக்கானதாகும். அரசியலில் கிடைக்கும் பதவிகள் பொறுப்புக்கூறலுக்கானவையாகவே உள்ளன. அதனைப் பயன்படுத்தி சொந்த இலாபங்களையோ அல்லது சொந்த அனுபவிப்புக்களையோ செய்வதனை அனுமதிக்க முடியாது.

எனவே தமது பதவி மற்றும் பொறுப்புக்கள் மக்களின் நலனுக்காக மாத்திரமே பாவிக்கப்பட வேண்டும். இதனை தான் எமது கட்சியும் கொள்கையாக பின்பற்றுகின்றது.

துஷ்பிரயோகங்களும்ஊழல் மோசடிகளும்நிறைந்த சமகால அரசியல் சூழ்நிலையில் ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்றால் அதற்காக முற்போக்கான கொள்கைகள் அமுல் படுத்தப்பட வேண்டும்.

காத்தான்குடி நகர சபையில் ஆரம்பத்தில் ஒரு பிரதிநிதியும் அதன் பின்னர் இருவரும் தற்போது நான்கு பிரதிநிதிகளும் என எமது பிரதிநிதிகள் காணப்படுகின்றனர். இவர்கள் எவரும் தமக்குக் கிடைக்கும் கொடுப்பனவுகள் எதனையும்சொந்தமாக எடுத்துக் கொள்வதில்லை. அவை கட்சியின் தீரமானத்திற்கமைவாக பொது நலன்களுக்காகவே செலவு செய்யப்படுகின்றன.

கடந்த நகர சபைக் காலத்தில் மானிய அடிப்படையில் உள்ளூராட்சிஉறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. காத்தான்குடி நகர சபையின் சகல உறுப்பினர்களும் அவற்றை சொந்தமாக்கிக் கொண்டனர். ஆனால் எமது பிரதிநிதிகள் தமது சொந்தப் பணத்தை செலவழித்து குறித்த மோட்டார் சைக்கிள்களை பெற்றுக் கொண்டிருந்த போதிலும், கட்சியின் கொள்கைக்கு அமைவாக கட்சியிடமே அவற்றை ஒப்படைத்தனர்.

தற்போது நாடெங்கிலும் 18 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களைப் பெற்றுள்ள எமது கட்சி இதே முன்மாதிரியை சகல இடங்களிலும் அமுல்படுத்தி வருகின்றது எனவும் சபீல் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாரிய கடற்படை பயிற்சியில் இலங்கை

(கொழும்பு)

உலகின் பாரிய கடற்படை பயிற்சியில் முதல் தடவையாக இலங்கையும்பங்கேற்கவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 2ஆம் திகதி வரை இந்தப் பயிற்சி, ஹவாயன் தீவுகள் மற்றும் தென் கலிபோர்னியா ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

இந்த பயிற்சியில் 47 போர்க்கப்பல்கள், நான்கு நீரமூழ்கிக் கப்பல்கள், 200 விமானங்களுடன் 25ஆயிரம் படையினர் பங்கேற்கவுள்ளனர். இந்த பயிற்சிகள் 1971ஆம் ஆண்டில் இருந்து நடத்தப்பட்டு வருகின்றன. இஸ்ரேல், பிரேசில் வியட்நாம் ஆகிய நாடுகளும், இலங்கையுடன் முதல்தடவையாக இந்த பயிற்சியில் பங்கேற்கின்றன. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

**எண் 1 (சூரியன்)**
**(ஆளும் வேந்தர்கள்)**

2 செ.மீக்கு மேல் நீளமுள்ள கையெழுத்தாக அமைய வேண்டும். கையெழுத்தின் குறியீடுகளைக் கண்டபடி மாற்றிக் குறியீட்டால் வீண் மனக் குழப்பங்களும் தோல்விகளும் சம்பவிக்கும். மனத்தின் திறத்தைக் கையெழுத்தால் அளவிட்டுக் கூறமுடியும். சரியான முறையில் அமையும் கையெழுத்து, வளமான குடும்பம், வசதியான வீடுகள், வாகன வசதிகள், நிரந்தரத் தொழில் என்று அனைத்து நல்ல பலன்களையும் விரைவாக அளித்திடும். பலருக்கு வேலை கொடுக்கும் அமைப்புகள், அதிகாரமிக்க பதவிகள், பணபலம், ஆள்பலம், நல்ல வாழ்க்கைத் துணை, நல்ல நண்பர்கள், பார் புகழும் சாதனைகள், பிறர் கண்டு வியக்கும் விருதுகள், பாராட்டுப் பத்திரங்கள், சுகமான ஆரோக்கியமான திரேகம், ஆட்சி பீடத்தில் இருப்போர்களின் நல்லாதரவுகள் என்று அனைத்து நல்ல சம்பவங்களையும் பெற்றுத்தரும். நிரந்தரமான வெற்றிக்குச் சொந்தக்காரராக்கும். 1ஆம் எண்காரர்கள் சூரிய ஆதிக்க எழுத்துக்களை கீழே வரவிடாமல் மேல் நோக்கி இழுத்து சென்று ஒரே சீராக இட வேண்டும்.

**1ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்.**

எந்த மாதமாக இருந்தாலும் 1ஆம் திகதி பிறந்தவர்கள், சூரிய ஆதிக்கத்தில் பிறந்தவர் ஆவார்கள். உள்ளதை உள்ளபடி உரைக்கும் உத்தம சீலர்கள். பிறர் கருத்துக்களை கேட்பதில் எள்ளளவும் பொறுமை இருக்காது. உறுதியான குரலில் மறுப்புத் தெரிவிப்பார்கள். வைருடனும் வளைந்து கொடுத்துப் போகத் தெரியாது. பிடிவாதகுணம் அதிகம். கவர்ச்சியாகவோ, இனிமையாகவோ பேசத் தெரியாது. மனதில் உள்ளதை மறைக்காமல் எடுத்துக் கூறுவார்கள். அதிகமான தன்னம்பிக்கை உடையவர்கள். பிறர் தனது இஷ்டப்படியே நடக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார்கள். இலட்சியப் பிடிப்புடன் முன்னேறுவதில் சமர்த்தர்கள். சிறந்த அறிவாளிகள். எதிலும் தன்னுடையே கருத்தே சரியென்று திட்டவட்டமாக உரைப்பதில் வல்லவர்கள். பிறர் மீது ஆதிக்கம் செலுத்திய வண்ணமிருப்பார்கள். தீவிர ஆர்வத்துடன் முன்னேற உயர்ந்த திட்டங்களைத் தீட்டுவார்கள். மிகவும் தைரியசாலிகள். மனதின் கருத்துக்களைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைப்பார்கள். கலைகளில் ஈடுபாடு அதிகம். கம்பீரமான தோற்றமுடையவர்கள். பொது வாழ்வில் புகழ்பெற வேண்டுமென்ற விருப்பம் உடையவர்கள். அன்பும் பாசமும் இவர்களைக் கட்டுப்படச் செய்யும். பேச்சு பிரமாதமானதாக இருக்கும். இவர்களைப் பற்றிப் பேச மற்றவர்கள் தயங்குவார்கள். சுயநலமிருக்கும். புகழ், செல்வம் சேரும்.

**10ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

பொறுமை, நிதானம் இவற்றுக்கு பெயர் போனவர்கள். சாதுவாகவே நடந்து வெற்றி பெறுவார்கள். மனதில் உள்ளதை உள்ளப்டி வெளி யிடாமல் மறைக்கத் தெரிந்தவர்கள். புகழுடன் வாழ்வார்கள். அன்பும் கருணையும் நிரம்பிய இவர்கள் பழகுவதற்கு இனிமையானவர்கள். பிரபலஸ்தகர்கள். எந்தத் துறையை தேர்ந்தெடுத்தாலும் அதன் உச்சத்தை அடைவார்கள். அதிகமாக நண்பர்களைப் பெற்றவர்கள். பெரிய பெரிய பதவிகள் தேடிவந்த வண்ணமிருக்கும். யாரையும் அன்பால் கட்டிப்போடும் பண்புடையவர்கள். விரோதிகளை உருவாக்க தயங்குவார்கள். எதிரியையும் நண்பனாக்கத் தெரிந்தவர்கள். அரசியல், இசை, நாடகம் போன்ற




துறைகள் புலமை கொண்டவர்கள். அரசியல், இசை, நாடகம் போன்ற துறைகளில் புலமை உண்டாகும் தியாக உள்ளத்துடன் பலருக்கும் உதவும் நட்புள்ளம் கொண்டவர்கள். சினிமா மற்றும் கலைத் துறைகளில் நுணுக்கமான விடயங்களை தெரிந்து வைத்திருப்பார்கள். மனதில் சக்தி படைத்தவர்கள். நாட்டுப் பற்று மிகுந்தவர்கள். கொடுக்கல்-வாங்கல் சிறப்பைத் தரும். துன்பத்திலும் மலர்ந்த முகத்துடன் காட்சியளிப்பார்கள். மேன்மையான வாழ்க்கை வாழ்ந்து சமுதாயத்தில் உயர்ந்த மனிதராக வலம் வருவார்கள். பொன், பொருள், புகழ் சேர்ப்பார்கள். கட்டடத் துறையில் கலைநயத்துடன் சாதனை படைப்பார்கள். எந்தத் துறையிலும் இவர்கள ஈடுபட்டு வெற்றிகளைப் பெறமுடியும்.

**19ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

கொள்கைப் பிடிவாதம் மிக்கவர்கள். அரசாங்க ஆதரவு கிடைக்கும். காரிய சித்தியடைவார்கள். இலட்சியப் பிடிவாதமும், கலைகளில் தேர்ச்சியும் மனோவசியச் சக்தியும் இருக்கும். அமைதியான முறையில் வெற்றி பெறுவார்கள். பார்க்கச் சாதுவாக இருக்கும் இவர்கள் பாய்ந்தால் புலிபோல மாறிவிடுவார்கள். அன்புடன் பழகினாலும் கண்டிப்பு மிக்கவர்கள். மத ஈடுபாடு இருக்கும். பிறருக்கு இடையூறு செய்யமாட்டார்கள். தன்னுடைய கருத்துக்களை பிடிவாதமாக மற்றவர்களிடம் திணிப்பார்கள். ஆழ்ந்த நட்பும், பாசமும் இருக்கும். அமைதியாக இருந்து அரிய பெரிய சாதனைகளைச் செய்வார்கள். நறுமணப் பொருட்கள் மீதும் பிரியமிருக்கும். பல கலைகள் கற்கும் ஆர்வம் இருக்கும். காதல் வயப்படுவார்கள். சுறுசுறுப்பு மிக்கவர்கள்.


(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளில் விலங்குகளின் இறைச்சிக் கழிவுகள் பயணிகள் அசௌகரியம்; மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

இறைச்சிக்காக வெட்டப்பட்ட விலங்குகளின் கழிவுகளை வீதிகளில் வீசிவிட்டு செல்வதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும், இந்த செயற்பாடுகள் இனியும் தொடராமல் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.



யாழ்.மாவட்டத்தில் அண்மைக்காலமாக சில இனந் தெரியாத நபர்கள், யாழ். நகருக்கு வெளியே உள்ள பிரதேசங்களில் சனநடமாட்டம் குறைந்த பகுதிகளிலும் சன நடமாட்டம் குறைந்த நேரங்களிலும் விலங்குகளின் கழிவுகளை கொட்டிவிட்டு செல்கின்றனர். இதனால் வீதிகளில் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இந்த நடவடிக்கை தொடர்சியாக இடம்பெற்று வருவதால் இது தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர்கள், பொலிஸார், சுகாதார அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை சுதுமலை வீதி மடத்தடிச் சந்திக்கு அருகில் நேற்று நண்பகல் சன நடமாட்டம் குறைந்த நேரம், சிறிய ரக வாகனத்தில் வந்தவர்கள் இறைச்சிக்காக வெட்டப்பட்ட கோழிகளின் கழிவுகளை வீதியில் வீசிவிட்டு சென்றுள்ளனர்.

இதனால் குறித்த வீதியால் பயணித்தோர் பெரும் அளெகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இவ்வாறே தொடர்ச்சியாக பல பிரதேசங்களில் நடைபெற்று வருவதாகவும் இது தொடர்பாக இறைச்சி வெட்டும் இடங்களில் உரிய சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு சுகாதார பிரிவினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

# சீமெந்து பைக்கற்றுகள் வழங்கல்



(கரணவாய்)

வடமாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ் 2018 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்து பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு 8இலட்சம் ரூபா பெறுமதியான சீமெந்து பைக்கற்றுக்களை வழங்கினார்.

இந் நிகழ்வில் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் த.ஐங்கரன்,செயலாளர் அ.விநோராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-60)

# அரசின் முக்கியஸ்தர்கள் இருவர் அலோசியஸிடம் பணம் பெற்றனர்

(கொழும்பு)

அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் இருவர் சர்ச்சைக்குரிய பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவன உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸிடம் 50 இலட்சம் ரூபா பணம் பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்த விசாரணைகளின் மூலம் இந்த விடயங்கள் தெரிய வந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் இளம் இராஜாங்க அமைச்சர் ஒருவர் 40 இலட்சம் ரூபாவும், பெண் அரசியல்வாதியொருவர் 10 இலட்சம் ரூபாவும் பெற்றுக் கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த இளம் அமைச்சரும், பெண் அரசியல்வாதியும் கடந்த பொதுத் தேர்தலின் போது பிரசாரப் பணிகளுக்காக இந்தப் பணத்தைப் பயன்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருவரும்அர்ஜுன் அலோசியஸிடம் பணம் பெற்றுக் கொண்டதனை நிரூபிப்பதற்கு தேவையர்ன சாட்சியங்கள் உண்டு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பெண் அரசியல்வாதி உயர் பதவியொன்றை வகித்து வருகின்றார் எனவும் இவர் தற்பொழுது நாடாளுமன்றில் அங்கம் வகிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மூன்று வாகனங்கள் மோதி விபத்து; ஒருவர் பலி! மூவர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

மத்துகம - அகலவத்த வீதியின் வேத்தேவ பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததோடு மூவர் காயமடைந்துள்ளனர்.

லொறியொன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி பின்னர் குறித்த மோட்டார் சைக்கிள் ஆட்டோவுடன் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மத்துகம, தியகடுவ பகுதியை சேர்ந்த 21 வயதுடைய மோட்டார் சைக்கிள் சாரதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தில் பெண் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பில் லொறிச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1432

Search for people, places and things   Nagendram   Home

## ராணி


மனிதன் தான் செய்த தவறுகளுக்குச் சிறந்த வக்கீலாகவும்



பிறர் செய்த தவறுகளுக்குச் சிறந்த நீதிபதியாகவும் இருக்கின்றான்

## ராசாத்தி

நம்மைக் குறைகூறும் பலருக்கு உத்தமனாக வாழ்வதைவிட



நம்மை நம்புகின்ற சிலருக்கு நல்லவனாக வாழ்ந்து விடலாம்...

## ராகினி

பணத்தைச் சம்பாதிக்க ஆரோக்கியத்தை தியாகம் செய்கின்றோம்



இழந்த ஆரோக்கியத்தை திரும்பப் பெற பணத்தை தியாகம் செய்கின்றோம்.

## ராஜி

துரோகம் செய்வது கொலை செய்வதற்குச் சமம்



தற்பெருமை கொள்வது தற்கொலை செய்வதற்குச் சமம்

## ராஜினி

இறக்கும் போது நமக்கு வேண்டாதவர்களையும் பார்க்க விரும்புகின்றோம்...



இருக்கும் போது நமக்கு வேண்டியவர்களையும் பார்க்க மறுக்கின்றோம்...!

## ரஜிதா

கொடுப்பது சிறிது என்று தயங்காதே பெறுபவர்க்கு அது பெரிது



எடுப்பது சிறிது என்று திருடாதே இழப்பவர்க்கு அது பெரிது

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய அறநெறிக்கல்வி ஆசிரியர்களுக்கான முதலாவது பட்டயக் கற்கைகள் பயிற்சிநெறி ஆரம்பம்



(கொழும்பு)

இந்து சமய அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதம் மற்றும் இந்து சமய அறநெறிக் கல்வி - கொடி தினம் என்பன திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது குருபூசை தினமாகிய மே மாதம் 31 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை "இளம் சிறார்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு அறநெறிக் கல்வி தேவையென உணர்வீர்!" என்ற தொனிப்பொருளில் நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை அனைவரிடத்திலும் உணர்த்தும் வகையில் இம்மாதத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை செயற்படுத்த இந்துமத அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டுதலில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதில் ஓர் அம்சமாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்த தேசிய அறநெறி விழா கொழும்பு , ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயக் கல்யாண மண்டபத்தில் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இவ்விழாவில் திருஞானசம்பந்தர் குருபூஜை நிகழ்வு, இந்து சமய அறநெறிக் கல்விக்கொடி தின நிகழ்வு, இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகத்தினால் நடத்தப்பட்ட இந்துசமய அறநெறிக் கல்வி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த முதலணியினரிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு , "அறநெறி ஆனந்தம்" திட்டத்தின் கீழ் இந்துசமய அறநெறிக கல்வி ஆசிரியர்களுக்கான முதலாவது பட்டயக் கற்கைகள் (டிப்ளோமா) பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைத்தல் போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றன.

அறநெறிக்கல்வி ஆசிரியர்களுக்கான முதலாவது பட்டயக் கற்கைகள் (டிப்ளோமா) பயிற்சிநெறியினை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தனது உரையில், இந்துசமய அறநெறிக் கல்விச் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்தி இலங்கையில் வாழும் அனைத்து இந்துச் சிறுவர்களுக்கும் இந்து சமய அறநெறிக் கல்வியை வழங்கும் நோக்குடன் எமது இந்து மத அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டுதலில் இந்து சமய அறநெறிக் கல்வி அபி விருத்தித் திட்டம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் ஓர் அம்சமாக தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதம் மற்றும் இந்து சமய அறநெறிக் கல்வி - கொடி தினம் என்பன அனுஷ்டிக்கப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டு தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு வாரம் மற்றும் இந்து சமய அறநெறிக் கல்வி - கொடி தினம் என்பன முதற்தடவையாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

2016, 2017 ஆகிய இரு ஆண்டுகளிலும் நாடு முழுவதும் அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்புடன் மிகுந்த விருப்போடும் வரவேற்போடும் தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு வாரம் நிகழ்ந்தேறியது. அறநெறி தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தி மக்களின் கவனத்தை ஈர்த்த நிகழ்வாக அமைந்தது.

தேசிய இந்துசமய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு மாதத்தினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இன்றைய தேசிய அறநெறி விழாவிலே இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகத்தினால் நடத்தப்பட்ட இந்துசமய அறநெறிக்கல்வி ஆசிரியர்களுக்கான சான்றிதழ்ப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த முதலணியினரிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, "அறநெறி ஆனந்தம்" திட்டத்தின் கீழ் இந்துசமய அறநெறிக்கல்வி ஆசிரியர்களுக்கான முதலாவது பட்டயக் கற்கைகள் (டிப்ளோமா) பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைத்தல் போன்ற முக்கிய நிகழ்வுகள் இடம் பெறுகின்றமை மிகுந்த மன நிறைவைத் தருகின்றன.

இந்து சமய அறநெறிப் பாடசாலையிற் தன்னிகரில்லாச் சேவை நோக்கோடு இளம் இந்துச் சிறார்களுக்கு அறநெறிக் கல்விபுகட்டும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தற் திறனை மேலும்மெருகுபடுத்தும்வகையில் இந்துசமய அறநெறிக் கல்வி ஆசிரியர்களுக்கான முதலாவது பட்டயக் கற்கைகள் (டிப்ளோமா) பயிற்சி நெறியினை ஆரம்பித்துவைப்பதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆளுமை மிக்கதொரு எதிர்காலச் சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற பெரும் பிரயத்தனத்தில் இளம் இந்துச் சிறார்களின் முன்னேற்றத்திற்காக எடுக்கின்ற அர்ப்பணிப்பான செயற்பாடுகள் மனம் மகிழ வைக்கின்றன.

இச் செயற்பாட்டின் மூல வேர் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களாகிய உங்களது மகோன்னத சேவை மனப்பாங்கு என்பது மறுக்க முடியாத உண்மையும் உளமாரப் பாராட்டப்படவேண்டிய விடயமுமாகும்.

உங்களின் ஆத்மார்த்தமான சேவையைத் திறம்பட ஆற்றுவதற்கு இப்பயிற்சி நெறி பக்கபலமாக அமையும் எனக்கூறி உங்கள் சேவை மேலுமிலங்க இறையருளை வேண்டுகின்றேன்.

தேசிய இந்துசமய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு மாதத்தினையும் இந்துசமய அறநெறிக் கொடிதினத்தினையும் தேசிய,மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களிலும் இந்து மாணவர்கள் கல்வி கற்கும் அனைத்துப் பாடசாலைகளிலும், அனைத்து இந்துசமய அறநெறிப் பாடசாலைகள், அனைத்து இந்து ஆலயங்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்களினாலும் அனுஷ்டிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய இந்துசமய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு மாதத்தினையும் இந்துசமய அறநெறிக் கொடிதினத்தினையும் அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்திடும் வகையிலும் இளம் இந்துச்சிறார்களின் முன்னேற்றத்திற்கு கைகொடுக்கும் வகையிலும் அனுஷ்டிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கி இத்தேசிய இலக்கை வெற்றி கொள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நீதித்துறை உயர்மட்டத்தால் காப்பாற்றப்படும் கோத்தா?



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்படுவதில் இருந்து நீதித்துறையின் உயர் மட்டத்தால் காப்பாற்றப்படுவதாக சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. மிக் போர் விமானக்கொள்வனவு மோசடி உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் தம்மைக் கைது செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும், அதற்குத் தடை விதிக்குமாறும் கோரி, உச்சநீதிமன்றத்தில் கோத்தபாய ராஜபக்ஷ அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு 2015ஆம் ஆண்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கோத்தபாய ராஜபக்ஷவை இந்த வழக்கு முடியும் வரை கைது செய்வதற்கு, நீதியரசர் ஈவா வனசுந்தர, சிசிர ஆப்ரு ஆகியோரைக் கொண்ட அமர்வு இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது. இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர், நீதியரசர் ஈவா வனசுந்தர, இந்த வழக்கு தொடர்பான விசாரணையில் இருந்து விலகினார்.

அதையடுத்து, ஒவ்வொரு தவணையிலும் இந்த வழக்கு விசாரிக்கப்படும் போது, நீதியரசர்களான, புவனேக அலுவிகார, பிரசன்ன ஜெயவர்த்தன ஆகியோர் விலகினர். கடைசியாக கடந்த வாரம், நீதியரசர் முர்து பெர்னாண்டோ இந்த வழக்கில் இருந்து விலகிக் கொண்டார். இதனால், கோத்தபாய ராஜபக்ஷவின் மனு மீதான விசாரணை நவம்பர் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரிக்கும் நீதியரசர்கள் அடுத்தடுத்து விலகுவதும், வழக்கு விசாரணை நீண்ட காலத்துக்கு பிற்போடப்படுவதும், கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்யப்படுவதில் இருந்து காப்பாற்ற உயர்மட்ட முயற்சிகள் முன்னெடுக்கப்படுகிறதா? என்ற சந்தேகங்களை எழுப்பியுள்ளது. (இ-7)

# மலையகத்தில் சீரற்ற காலநிலை மண்சரிவால் போக்குவரத்து பாதிப்பு



(ஹற்றன்)

நுவரெலியா,தியகலை பகுதியிலுள்ள பிரதான வீதியில் மண்மேடு மற்றும் பாரிய கற்கள் சரிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக நோட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

இருப்பினும் பொது மக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து, வீழ்ந்து கிடந்த கற்களை அகற்றியதன் காரணமாக சிறிய ரக வாகனங்கள் மாத்திரம் செல்லக் கூடியதாகவுள்ளதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால் ஹற்றன், கொழும்பு மற்றும் தியகல நோட்டன் வீதியின் பல இடங்களில் மண்சரிவு மற்றும் கற்கள் புரளும் அபாயம் காணப்படுவதனால் இவ் வீதிகளினூடாக வாகனங்களை செலுத்தும் சாரதிகள் மிகவும் அவதானத்துடன் வாகனங்களை செலுத்த வேண்டுமென பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

# திடீர் சுற்றிவளைப்பின் போது 900 கஞ்சாச் செடிகள் மீட்பு

(கொழும்பு)

கொஸ்லாந்தை வளஹருவ வனப் பகுதியில், இரகசியமான முறையில் பராமரிக்கப்பட்டு வந்த கஞ்சா பயிர்ச்செய்கை நிலப்பகுதி ஒன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார், சுமார் 7 அடி உயரம் வளர்ந்திருந்த 900 கஞ்சாச் செடிகளைக் கைப்பற்றியதோடு, சந்தேகத்தின் பேரில்ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

56 வயதுடைய அதே பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளாரென, கொஸ்லாந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாச் செடிகளில் சிறுபகுதியை நீதிமன்றில் சாட்சிக்காக வைத்துக்கொண்ட பொலிஸார், ஏனைய செடிகளைத் தீயிட்டு எரித்துள்ளனர். (இ-7)



நாயன்மார்கட்டு நாயன்மார் குருபூசை மடத்தில் நேற்று திருஞானசம்பந்தமூர்த்தி, திருநாவுக்கரசர் நாயன்மாரின் குருபூசை விழாவை முன்னிட்டும், "இளம் சிறார்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு அறநெறிக் கல்வி தேவையென உணர்வீர்!" என்ற தொனிப்பொருளில் அனுஷ்டிக்கப்படுகின்ற அறநெறிக் கல்வி கொடி தினத்தினை முன்னிட்டும் நடத்தப்பட்ட சமய, பண்ணிசைப் போட்டிகள் நடத்தப்பட்டன.எதிர்வரும் 10.06.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு குருபூசை விழாவும் அறநெறிக் கல்வி கொடி தினமும் இடம்பெறவுள்ளன. (படங்கள்:ஐ.சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மையினரின் கைகளில் சிறுபான்மையினரின் அதிகாரங்கள்

## முன்னாள் முதல்வர் நஷீர் கவலை

(ஏறாவூர்)

மாகாண சபை ஆட்சி மக்களின் கைகளில் உள்ளதென கூறப்பட்டாலும் வடக்கு, கிழக்கு ஆகிய சிறுபான்மை இனங்கள் வசிக்கும் மாகாணங்களின் அதிகாரங்கள் பெரும்பான்மை இன ஆளுநர்களின் கைகளில் காணப்படுவது பேரினவாதமாகுமென கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஷீர் அஹமட் தெரிவித்துள்ளார்.



வடக்கு- கிழக்கு மாகாணங்களின் நிர்வாகம் தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையின் பேரினவாத ஆட்சியில் அதிகாரப் பகிர்வு என்றில்லாமல் அதிகாரப் பரவலாக்கம் மாத்திரமே காணப்படுகின்றது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மை சமூகங்களான தமிழர்களும் முஸ்லிம்களும் கூடுதலாக வாழ்கின்றார்கள்.

ஆனால், வடக்கு- கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களின் அதிகாரங்கள் அதனதன் முதலமைச்சர்களின் கைகளில் காணப்படுகின்றன. ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக அதிகாரம் முதலமைச்சர்களிடம் இல்லாமல் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாகாண ஆளுநர்களின் கைகளிலேயே உள்ளது.

இவ்வாறு வடக்கு, கிழக்கு முதலமைச்சர்களின் அதிகாரத்துக்கான சுதந்திர எல்லைகள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்து வந்தது.

மேலும் வடக்கு, கிழக்கு முதலமைச்சர்களும் ஏனைய முதலமைச்சர்களை போன்று மக்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருந்தும் ஆளுநர்கள் அவர்களது நடவடிக்கைகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முயற்சிகளையே முன்னெடுத்து வந்துள்ளனர்.

எனினும் கிழக்கு மாகாணத்தில் எனது தலைமையிலான சுமார் இரண்டரை வருட ஆளுகைக் காலத்தில் மாகாணசபை அதிகாரங்கள் தொடர்பில் பல்வேறு படிப்பினைகளை கிழக்கு மக்களுக்கும் ஏனைய மாகாண மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் விழிப்புணர்வூட்டக் கூடியதாக இருந்தது.

குறிப்பாக உள்ளூராட்சிக்கு உட்பட்ட அதிகார பிரயோகங்களை அமுல்படுத்தி சேவையாற்ற முடிந்தது.

மாகாணமொன்றுக்கு உள்ளூராட்சியின் அதிகாரங்கள் பரிபூரணமாகக் கிடைப்பதை இந்தக் காலத்தில் உறுதிப்படுத்தவும் முடிந்தது.

மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்த நிதிசார் விடயங்களை உள்ளூராட்சிக்குப் பெற்றுக் கொடுக்கவும் முடிந்தது.

எவ்வாறாயினும், சிறுபான்மை இன மக்கள் தமது மாகாண ஆளுகையின் முழு அளவிலான அதிகார உரிமைகளைப் பெற்றுக் கொள்ள இன்னமும் நீண்டகாலம் பயணிக்க வேண்டும் என்பதையே சமகால நிகழ்வுகள் புலப்படுத்தி நிற்கின்றன.

இந்த விடயத்தில் சிறுபான்மைச் சமூகங்களின் ஒற்றுமை என்பது இன்றியமையாதது. பிளவுபட்டு நிற்பின் சிறுபான்மைப் பிரதேசங்களை பேரினவாதம் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கும். பின்னர் மக்கள் வெறுமையை அனுபவிக்க நேரிடும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பறக்கும் தட்டு செயற்படும் பொறிமுறையும் உருள் தொழில்நுட்பவூர்தி வேற்றுக்கிரகவாசிகளும்

வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய கருதுகோள்களும் பறக்கும் தட்டில் வேற்றுக் கிரகவாசிகளின் பயணங்களும் நிஜம் என்று கூறும் வகையில் பறக்கும் தட்டுக்கள் பற்றிய அவதானங்கள் எடுத்துக்கூறுகின்றன. அண்மையில் ஒலியை விட வேகமான பறக்கும் தட்டினை அவதானித்ததாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறை செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் அதி தொழில்நுட்பம் கூடிய F-18 ஜெட் விமானங்கள் பின் தொடர்ந்தபோது அவை மறைந்துவிட்டன.



இவ் வேற்றுக்கிரக போக்குவரத்துச்சாதனம் திண்மமாகவும் வெண்மையாகவும் கரடுமுரடற்ற மேற்பரப்பாகவும் விளிம்புகள் அற்றதாகவும் காணப்பட்டது. எமது விமானம், உலங்கு வானூர்தி என்பவற்றில் காணப்படும் பறப்பதற்கு எந்தவொரு வடிவிலான உதவும் இறக்கைகள், விசிறிகள் காணப்படவில்லை. இது நீண்ட முட்டை வடிவில் இருந்தது.

பறக்கும் தட்டுச் செயற்படும் தொழில்நுட்பம் (Wrap up technology) உருள்தொழில்நுட்பம் எனலாம். இத்தொழில்நுட்பத்தினை மனிதர்கள் உருவாக்கும் வகையில் பூமியில் தொழில்நுட்பம் வளரவில்லை. ஆனால் வேற்றுக் கிரகவாசிகள் இத்தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துகின்றமையை பறக்கும் தட்டுக்களின் அவதானிப்புக்களும் அவற்றினை நெருங்கும்போது அவை மாயமாதலும் உறுதிப்படுத்துகின்றன. இதனைப் பாமர மக்களுக்கு விளங்கப்படுத்துவதற்கு உணவுச்சாலையில் உருளைக்கிழங்குக் கறியினை போண்டா, பற்றிஸ், சமோசா, மசாலாத் தோசை, பேஸ்ரி என ஒவ்வொரு வடிவில் அனுப்புவதுபோல் பறக்கும் தட்டில் வேற்றுக்கிரகவாசிகளின் பயணம் அமையும்.

உருள் தொழில்நுட்பவூர்திகள் (Wrap drives) தம்மைச்சூழ உள்ள வெளி, காலம் என்பவற்றுடன் ஈர்ப்பு விசைகளுக்கு அப்பால் உருள் தொழில்நுட்பவூர்தி பயணிக்கின்றது. இதற்காக பெருமளவு கருத்துளைச்சக்தி (Dark Energy) பிரயோகிக்கப்படுகின்றது. இதற்குரிய சக்தியை குவாண்டம் வெற்றுச்சக்தி (Quantum Vacuum Energy) எனவும் கூறலாம்.

செய்மதிகள் புவியீர்ப்பு விசைக்கு எதிராக எவ்வாறு பயணிக்கின்றனவோ அவ்வாறே உருள் தொழில்நுட்பவூர்திகள் காலவெளியினை ஊடறுத்தவாறு பயணிக்கின்றன. இதனையே நாம் பறக்கும் தட்டுக்கள் என்கின்றோம்.

உருள்தொழில்நுட்ப மூலம் காலவெளியை வளைக்கும் போது பெருமளவு சக்தி விரயமாகும். இதன்போது சுமார் 100X100X100 மீற்றர் கனவளவினை ஒரு நீர்க்குமிழி போல் மாற்ற முடியும். அதாவது ஒரு அறையினைத் தீப்பெட்டியின் கனவளவில் இயக்கக்கூடியதாக அமையும். உருள் தொழில்நுட்பம் (Wrap up technology) மூலம் காலவெளியினையும் ஈர்ப்பு அலைகளையும் தாவி இயங்குதல் கசிமிர் (Casimir effect) என்பர். அதாவது உருள் தொழில்நுட்பவூர்தியினை மூடி காலம் வெளி ஈர்ப்பு விசைகளை தவிர் [illegible] டும். இதனாலேயே மனிதர்களால் அவதானிக்கப்படும் பறக்கும் தட்டுக்கள் கண நேரத்தில் காலவெளிக்கு அப்பால் உருள் தொழில்நுட்பத்தினால் மறைந்து விடும்.

உருள் தொழில்நுட்பவூர்திகள் (Wrap drives) ஒளியை விடவும் வேகமாக பயணிக்கும் தகையது. இதனால் சூரிய ஒளியை விட 100 மடங்கு வேகத்திலும் செல்ல முடியும். இவ்வூர்தியில் 100X100X100 மீற்றர் கனவளவை சிறிய நீர்க்குமிழியின் கனவளவுக்கு மாற்றி அல்லது அதனை பார்ப்பவர்களுக்கு சிறிய நீர்க்குமிழி மாறி காலவெளியில் தெரியுமாறு பயணிக்கலாம். இதன்மூலம் ஒளியின் 100 மடங்கு வேகத்தில் பயணத்தினை பூமியில் இருந்து மேற்கொள்ளும்போது வியாழனை 36 நிமிடங்களிலும், நெப்டியூனை 4 மணித்தியாலங்களிலும், அல்பா சென்றூரியனை 15 நாட்களிலும் அடையலாம்.

தற்போதைய விஞ்ஞான வளர்ச்சி போல் உருள் தொழில்நுட்பத்தினை பயன்படுத்த முடியாத அளவில் இருந்தாலும் அதனை விளங்கக்கூடியதாக உள்ளது. இத் தொழில்நுட்பத்தினை கட்டுப்படுத்தும் போது பெருமளவு சக்தி வெளியேற்றப்படுவதால் அதனை அண்டவெளியிலேயே இயக்குவதற்கு மனிதன் எதிர்காலத்தில் முயல வேண்டும்.

மருத்துவர். சி.யமுனாநந்தா

# செய்தித்துளிகள்

## நோயாளர் விடுதிகள் அமைக்க ரூ. 25.67 மில்லியன் ஒதுக்கீடு

(கரணவாய்)

கரவெட்டி அம்பன் கிராமிய வைத்தியசாலையில் நோயாளர் விடுதிகள் அமைப்பதற்காக 25.67 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.மேற்படி வைத்தியசாலையில் நோயாளர் விடுதிகள் இரண்டு அமைத்து தருமாறு கரவெட்டி ஒன்றியத்தினர் பல தடவைகள் யாழ். அரச அதிபர் நா.வேதநாயகனிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் தற்போது இரண்டு நோயாளர் விடுதிகள் அமைப்பதற்காக மத்திய அரசில் இருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கேள்வி கோரப்பட்டுள்ள நிலையில் வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (இ-60)

## சிறுவர் கழக நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

புதிய சோனக தெரு செந்தமிழ் சிறுவர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்க முன்றலில் முதியோர் சங்கத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக ஜெ.விதுஷன்,செயலாளராக வ.யதுஷனா, பொருளாளராக கு.மாதுரி ஆகியோருடன் 8 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

## பட்டியல் விவகாரம் ஆதாரமில்லாதது

### சபாநாயகர் கருத்து



(கொழும்பு)

அர்ஜுன் அலோசியஸிடமிருந்து பணம் பெற்றதாகக் கூறப்படும் 118 பேரின் பெயர்ப் பட்டியல், விவகாரம் ஆதாரமில்லாத ஒன்று என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அலோசியஸுடன் தொலைபேசி உரையாடல் மேற்கொண்ட பலருடைய தகவல் காணப்படுகின்றன. இதனை பாராளுமன்றத்தில் விரைவில் முன்வைக்கவுள்ளேன் எனவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது அவர் இந்தக் கருத்தை கூறியுள்ளார். (இ-7)

## ஆற்றில் குளித்தவர் மாயம்

(கொழும்பு)

உடபுஸ்ஸல்லாவ, மடுல்ல பகுதியில் நேற்றுக் காலை ஆற்றில் குளிக்க சென்ற ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

ஆற்றில் குளிக்கச் சென்ற இருவரில் ஒருவர் இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை பகுதியை சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பிரதேசவாசிகள் ஒன்றிணைந்து குறித்த நபரை தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

## மின்சாரக் கட்டணங்களுக்கு தன்னியக்க விலை அட்டவணை

(கொழும்பு)

மின்சார கட்டணங்கள் தொடர்பில் தன்னியக்க விலை அட்டவணை ஒன்றை அரசாங்கம் விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் யோசனையின்படியே இந்தக் கட்டண அட்டவணை அறிமுகம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைப்படி ஏற்கனவே எரிபொருள் விலைகளின் அட்டவணையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த முறையானது, நிதி முடக்க ஆபத்துக்களை குறைக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## எறும்புக்குப் பயந்த அரசர்



கடியூர் நாட்டு அரசர், போர் என்று கேட்டாலே பயந்து நடுங்குபவர். இதுவரை, ஒருநாள்கூட அவர் வாளெடுத்து வீசியதில்லை. ஈட்டி, கேடயம் என்றால் என்னவென்றே அவருக்குத் தெரியாது.

எறும்பு கடிக்கே பயந்தவர் என்றால் பாருங்களேன். அரண்மனைக்குள் ஒரு எறும்பைப் பார்த்து விட்டால் போதும். காவலனைக் கூப்பிட்டுக் கேள்வி மேல் கேள்வி கேட்பார்.

"யாரங்கே? எறும்புக்குப் பதிலாக, உன்னைக் கீழே படுக்க வைத்து நசுக்கி விடுவேன்" என்று மிரட்டுவார். எறும்புகளைச் சித்திரவதை செய்து, உடனடியாகக் கொல்லச் சொல்லிக் கட்டளையிடுவார். இல்லையேல், காவலனை வேலையை விட்டு அனுப்பி விடுவார். கடியூர் நாட்டு மன்னனின் இந்த இழிவான செயலைக் கண்டு, எறும்புகள் எதிர்த்து நிற்க விரும்பின. ஒருநாள் அவை ஒன்றுகூடித் தங்களது ராணியிடம் புகார் செய்தன.

மறுநாள், எறும்பு ராணி தலைமையில் இலட்சக்கணக்கான எறும்புகள் அரண்மனைக்குப் படையெடுத்து வந்தன. சாரை சாரையாக வந்த எறும்புக் கூட்டத்தைப் பார்த்து, காவலர்கள் பதறினார்கள். கோட்டையின் வாயிலை மூடி வைத்தார்கள்.

கதவுக்குக் கீழிருந்த சந்து வழியாக எறும்புகள் கோட்டைக்குள் நுழைந்தன. அவை படை வீரர்களைப் போல அணிவகுத்து நின்றன. அங்கிருந்த காவலர்களைக் கடித்து வைத்தன. அரசனுக்கு அடங்காத கோபம். பாதாள அறை சிங்கத்துக்கு எறும்புகளை இரையாக்கச் சொன்னார். எறும்புகளை மண்வாரியால் அள்ளி, காவலர்கள் சிங்கத்தின் கூண்டில் வீசினர். எறும்புகள், சிங்கத்தை மொய்த்துக் கடித்தன. சிங்கத்தைச் சாகடித்தன.

அடுத்ததாகப் பட்டத்து யானைகளை அரசர் அவிழ்த்துவிடச் சொன்னார். எறும்புக்கடி தாங்காமல் பட்டத்து யானைகள் பிளிறி ஓடின. எறும்புகளைக் கொல்ல மந்திரிகள் ஒன்றுகூடிச் சென்றார்கள். எறும்புகள் மந்திரிகளைக் கடித்து வைத்தன. அதைப் பார்த்து அச்சப்பட்ட அரசர், அரண்மனைக்குள் கட்டிய தெப்பத்தில் குதித்தார். இடுப்பளவு தண்ணீர் இருந்த இடம் பார்த்துப் பாதுகாப்பாக நின்று கொண்டார்.

"அரசரைக் காப்பவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கப்படும்." என்று நாட்டு மக்களுக்கு முரசறிவிக்கச் சொன்னார்.

அரசருக்கு ஆலோசனை தர வந்தவர்கள் கோட்டை வாயிலில் கூட்டமாகத் திரண்டனர். ஒருவர், ஆயிரம் கிலோ எறும்புப்பொடி வாங்கி அரண்மனை அறைகளில் தூவி விடச் சொன்னார். மற்றொருவர், தண்ணீரைப் பீச்சி அடிக்கச் சொன்னார். மூன்றாமவர், எறும்புகளின் கண்களில் மிளகாய்ப் பொடி தூவ வேண்டுமென்றார்.

கடைசியாக ஒரு முதியவர் வந்தார். நீண்ட நாட்களாக அவருக்கு, நாட்டு மன்னனைத் தைரியமுள்ள வீரனாகப் பார்க்க ஆசை. அதை, மன்னனிடம் நேரடியாகச் சொன்னால் வம்பை விலைக்கு வாங்கியது போல் ஆகிவிடும். கடுமையான தண்டனைக்கு ஆளாக வேண்டும். மன்னன் குழம்பும்படியாக முதியவர் பேசினார்.

"எதிரி நாட்டு மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அதிக மலைகளும், காடுகளும் உள்ளன. அந்த நாட்டின் மீது படையெடுக்க வேண்டும்" என்றார். "முதியவரே! எறும்புக் கடியிலிருந்து தப்பிக்க வழிகேட்டால், எமனிடம் அனுப்ப வழி சொல்கிறீரே" என்றார் அரசர். முதியவர் சற்றும் தளராமல் பேசினார்.

"எதிரி நாட்டு மலைகளிலும், காடுகளிலும் அதிகமான எறும்புத் தின்னிகள் உள்ளன. ஆகவே, எதிரி நாட்டின் மீது படையெடுத்து வென்று, எறும்புத்தின்னிகளைப் பிடித்து வர வேண்டும்." என்று திட்டவட்டமாகச் சொன்னார்.

ஒருநாள் கழித்து, முதியவரை அரசர் அழைத்து வரச்சொன்னார். தமக்கும், படை வீரர்களுக்கும் அவரையே போர்ப் பயிற்சி தரும்படிக் கேட்டார். தண்ணீரில் பத்திரமாக நின்றிருந்த மன்னருக்குப் போர்ப் பயிற்சி தரப்பட்டது.

எதிரி நாட்டின் மீது படையெடுக்கப் போவதாய் ஓலை அனுப்பப் பட்டது. போரும் நடந்தது. கடியூர் அரசர் வெற்றி பெற்றார். அந்த நாட்டின் காடுகளிலிருந்து எறும்புத் தின்னிகளைப் பிடித்து வந்தனர்.

அவை ஒவ்வொன்றும் பதினாறு அங்குல நாக்கை நீட்டி, அரண்மனைக்குள் ஓடின. எறும்புகள், அவைகளின் நாக்கில் ஒட்டிக் கொண்டன. ஒரு எறும்புத்தின்னி, கால் கிலோ எறும்புகளை விழுங்கித் தீர்த்தது.

எறும்புத்தின்னிகளின் உடம்பிலிருந்த அடுக்கடுக்கான பட்டைகள், இயற்கை தந்த கேடயமாக இருந்தன. துப்பாக்கிக் குண்டுகூட துளைக்க முடியாத உடம்பை, எறும்புகளால் கடிக்க முடியவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக, எறும்புகள் காலியாகின. அரசர் வெற்றியைக் கொண்டாடினார். கடியூர் நாட்டுக்கொடியில் எறும்புத்தின்னி இடம் பெற்றது.

அதன் பிறகுதான் எறும்புகள் அரண்மனைக்குள் ஏன் புகுந்தன என்ற விடயத்தையும் அரசர் தெரிந்து கொண்டார். அன்று முதல் எறும்புகளை மட்டுமல்ல எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டத் தொடங்கினார். ஒரே சமயத்தில் அரசரை நல்லவராகவும், முழு வீரராகவும் பார்த்த முதியவர் மகிழ்ச்சியடைந்தார்.

முற்றும்.



## 2018.06 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1039-மூன்றாம் ஹென்றி புனித ரோமப் பேரரசன் ஆனான்.

❖1615-ஜப்பானில் தொக்குகாவா லெயாசு தலைமையிலான படைகள் ஒசாக்கா கோட்டையைக் கைப்பற்றின.

❖1707-யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டம் ஒல்லாந்தரினால் அமுல்படுத்தப்பட்டது.

❖1876-டிரான்ஸ்கொன்டினென்டல் எக்சுபிரசு என்ற தொடர்வண்டி நியூயோர்க்கில் இருந்து புறப்பட்டு சான்பிரான்சிஸ்கோவை 83 மணி 39 நிமிடங்களில் முதலாவது கண்டங்களிடை தொடருந்துப் பாதை வழியே சென்றடைந்தது.

❖1919- பெண்களின் உரிமைகள்: பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் சட்டமூலத்துக்கு அமெரிக்க சட்டமன்றம் அனுமதி அளித்தது.

❖1928-சீனக் குடியரசின் அரசுத் தலைவர் சாங் சுவோலின் ஜப்பானியக் கையாள் ஒருவனினால் படுகொலை செய்யப்பட்டார்.

❖1939-பெரும் இன அழிப்பு: 963 யூத அகதிகளை ஏற்றிச் சென்ற கப்பல் ஐக்கிய அமெரிக்காவினால் திருப்பி அனுப்பப்பட்டது. இந்த அகதிகளில் 200 பேர் வரை பின்னர் ஜெர்மனியின் நாசி வதைமுகாமில் சிறை வைக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

❖1944-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கக் கடற்படையினர் ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பல் யூ-505 ஐக் கைப்பற்றினர்.

❖1944-இரண்டாம் உலகப் போர்: ரோம் நகரம் நேச அணிகளிடம் வீழ்ந்தது.

❖1957-மார்ட்டின் லூதர் கிங் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் "அறப்போராட்டத்தின்வலிமை" என்ற தனது உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்.

❖1961- அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கிழக்கு பெர்லினுக்குள் நுழைவதைத் தடுப்பதற்கு தாம் கிழக்கு ஜேர்மனி உடன் ஒப்பந்தம் செய்யப்போவதாக சோவியத் தலைவர் நிக்கிட்டா குருசேவ் வியன்னா மாநாட்டில் எச்சரித்தார்.

❖1987-பூமாலை நடவடிக்கை: இலங்கையின் ஆளுகைக்குட்பட்ட வான்பரப்பில் அத்துமீறி உள்நுழைந்த இந்திய வான்படை விமானங்கள் யாழ்.குடாநாட்டின் மீது உணவுப் பொதிகளை வீசியது.

❖1989- போலந்தில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் சொலிடாரிட்டி இயக்கத்தின் வெற்றி கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசத்துக்கு எதிரான புரட்சியைக் கிளறியது.

**பிறப்புகள்**

❖1932-எஸ். பொன்னுத்துரை, ஈழத்து எழுத்தாளர் (இ. 2014)

❖1946-எஸ்.பி.பாலசுப்ரமணியம், தென்னிந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகர்

❖1959-அனில் அம்பானி, இந்தியத் தொழிலதிபர்

❖1984-பிரியாமணி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

**இறப்புகள்**

❖1959-ஜான் திவி, மலேசியத் தமிழ் அரசியல்வாதி (பி. 1904)

❖1963-வி.ஏ.கந்தையா, இலங்கை அரசியல்வாதி (பி. 1891)

❖2001-தர்சன் அரங்கநாதன், இந்தியக் கரிம வேதியியலாளர் (பி. 1941)

❖2005-நந்தி, ஈழத்து எழுத்தாளர், கல்வியாளர், மருத்துவர்

❖2010-ரேமண்ட் ஆல்ச்சின், பிரித்தானியத் தொல்லியலாளர் (பி. 1923)

**சிறப்பு நாள்**

❖விடுதலை நாள் (தொங்கா, 1970)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 110 | 160 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 180 | 120 | 200 | 90 |
| தக்காளி | 160 | 160 | 160 | 130 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 35 | 40 | 35 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 120 | 65 | 120 | 120 |
| கரட் | 200 | 380 | 240 | 150 | 320 | 180 |
| பூசணி | 40 | 20 | 30 | 30 | 40 | 35 |
| புடோல் | 120 | 70 | 120 | 70 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 | 125 | 80 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 160 | 160 | 140 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 85 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 160 | 240 | 130 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 80 | 70 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 60 | — | 120 | 60 |
| பயற்றங்காய் | 160 | 100 | 100 | 120 | 80 | 200 |
| லீக்ஸ் | 250 | 300 | 300 | 200 | 320 | 220 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 70 | 100 | 100 |
| கறிமிளகாய் | 150 | 200 | 180 | 70 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 100 | 120 | 130 | 120 | 200 |
| போஞ்சி | 250 | 400 | — | — | 320 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | — | — | 140 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 40 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 160 | 130 | 200 | 210 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-80 | 75 | 25-70 | 50-75 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | 160 | — | 200 | 180 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 280 | — | 280 | 250 |
| முள்ளங்கி | 100 | 120 | 140 | 30 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | 120 | — | — | 80 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் பார்வையற்றவன் குருடனல்ல. தன் குற்றம், குறையை எவன் உணராமல் இருக்கின்றானோ! அவனே உண்மையான குருடன். ~ *மகாத்மா காந்தி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# குயிலினம் போல வாழப் பழகாதீர்

பறவை இனங்களில் குயிலினத்தை யாரும் உயர்வுபடுத்திக் கூறுவதில்லை. அதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

அதில் ஒன்று, யார் கூவினாலும் தன்னினம் கூவுதாக நினைத்து தானும் கூவுவது. இரண்டாவது காரணம் கூடு கட்டி அதில் முட்டையிட்டு அடை காக்கத் தெரியாமை. மூன்றாவது விடயம் குயிலின் ஒழுக்கம் சார்ந்தது என்பதால் அதனை இங்கு விட்டுவிடலாம்.

குயிலினம் எப்போதும் உணர்ச்சிவசப்பட்ட நிலையிலேயே இருக்கும். தான் கூவுவது எதிரொலித்தால் கூட தன் உறவுக் குயில்கள் கூவுவதாகக் கருதி திரும்பத் திரும்பக் கூவுதல்.

தவிர மனிதர்கள் யாரேனும் பதிலுக்குக் கூவினால் அதனையும் தன்னினம் சார்ந்தவர்களின் கூவல் என்று கருதி உச்சஸ்தாயி வரை கூவுதல் குயிலினத்தின் அறியாமையைக் காட்டும்.

இதுஒருபுறமிருக்க காகத்தின் கூட்டுக்குள் முட்டையிடுவதுதான் குயிலினத்தின் கௌரவக் குறைவுக்கு மிகப்பெரிய காரணம் எனலாம்.

சொந்தமாகக் கூடுகட்டி அதில் குஞ்சு பொரித்து தன் குஞ்சுகளுக்கு இரை கொடுக்கின்ற அந்தத் தாய்மை குயிலினத்துக்கு இல்லாமல் போயிற்று.

காகத்தின் கூட்டில் முட்டையிட்டுவிட்டு தன் பாட்டில் போய்விட, காகமே குயில் குஞ்சுகளுக்கும் இரை கொடுத்து வளர்க்கிறது.

இதனால்தான் காகத்தை நம்மவர்கள் கூவி அழைத்து உணவு கொடுக்கின்றனர். மேலும் தன் குஞ்சுக்கு இரை கொடுக்க முடியாத குயில்களால் தன்னினம் கூவுகிறதா? அல்லது மனிதர்கள் கூவுகிறார்களா? என்பதை அறியமுடியாமல் போயிற்று என்று கூறுவதில் உளவியல் நியாயம் இருக்கவே செய்கிறது.

இவ்வாறாக சொந்த இடத்தில் சொந்தமாக கூடுகட்டி குஞ்சு பொரித்து வாழத் தெரியாத குயில்கள் காகத்தின் கூட்டில் முட்டையிடும் ரம் குறைந்த பண்பாட்டைக் கொண்டிருப்பது போல,

ஒரு சில இனம் சார்ந்த மக்களும் மற்றவர்களின் இடங்களை ஆக்கிரமிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர்.

இத்தகையவர்கள் தங்களின் செயலை உயர்வாகக் கருதிக் கொண்டால் அதுவே அவர்களின் அறியாமை எனலாம். இவற்றை ஒருபுறம் வைத்துக் கொள்வோம்.

இப்போது எங்கள் வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் சிங்கள மீனவர்கள் அத்துமீறி குடிசை அமைத்து கடலட்டை பிடிக்கின்ற தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தென்பகுதி மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான வளங்களும் வசதிகளும் தாராளமாக இருக்கின்றபோதிலும், வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் அத்துமீறி குடிசை அமைத்து கடலட்டை பிடிப்பதென்பது எந்தளவு தூரம் நியாயம் என்பதை தென்பகுதி சார்ந்தவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

இதுதவிர, இவ்வாறான அத்துமீறல்கள் ஆளும் இனம் என்பதாலும் நடக்கிறதோ என்று எண்ணத்தோன்றும்போது அங்கு இன ஒற்றுமை என்பது சிதைவுறுகிறது.

எனவே இத்தகைய செயல்களை சிங்கள மக்கள் முற்றாகக் கைவிட வேண்டும். கூலிக்கு மாரடிப்பதுபோல தமிழர் பகுதியில் நுழைந்து அவர்களின் தொழில் வளத்தை சுரண்டுவதென்பது அடிப்படை நியாயமற்றது.

ஆகையால் தென்பகுதி மக்கள் குயிலினத்தின் பண்பாட்டைப் பின்பற்றாமல் தவிர்க்க வேண்டும்.

# நெத்தலியாற்று பகுதியில் சட்டவிரோதமாக இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## சந்தேகத்தில் ஒருவர் கைது

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள நெத்தலியாற்றுக் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப் படையினர் முற்றுகையிட்டு 210 லீற்றர் கசிப்பையும் மற்றும் 400 லீற்றர் கசிப்புக் கோடாவையும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றியதோடு, சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்த பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கி உள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஆர்.விமலகுணரட்ண தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு நேரத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தருமபுரம் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் நடைபெற்று வரும் மணல் கடத்தல், மரக்கடத்தல், விலங்குகளை இறைச்சிக்காக வேட்டையாடுதல் உட்பட பல்வேறு குற்றச்செயலகளைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட வேவுப் பணியில் ஈடுபட்டிருந்த முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப் படையினர் இந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருடகளையும் கைதான சந்தேக நபரையும்தருமபுரம்பொலிஸ நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளனர்.

கைதான சந்தேகநபரிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் சந்தேக நபரை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்தில் நீதிபதி முன்பாக முன்னிலைப்படுத்தியபோது சந்தேக நபரை நாளை மறுதினம் புதன்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பிதுள்ளதாக தருமபுரம் பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (மு-15)

# காணாமல்போனோர் அலுவலகங்கள் பிரதேச மட்டங்களில் அமைப்பு

(கொழும்பு)

காணாமல்போனோர் தொடர்பான செயலக அலுவலகங்களை பிரதேச மட்டத்தில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 8 அலுவலகங்கள் அமைக்கப்பட இருப்பதாக அந்த அலுவலகத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் 14ஆம் 15ஆம் திகதிகளில் கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினர்களைச் சந்திக்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேபோன்ற அலுவலகத்தின் சந்திப்பு எதிர்வரும் 13ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெறவிருப்பதாகவும் அவர் கூறினார். அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் இது தொடர்பான நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடந்த 10 வருட காலமாக இந்த விடயம் தொடர்பில், நீதி நிலைநாட்டப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

குடும்பத்தினரிடம் பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். எதிர்வரும் 13ஆம் திகதி திருகோணமலையில் காணாமல்போனோரின் குடும்ப உறவினர்களை சந்திக்க இருக்கிறோம்." என்றார். (மு)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**நவபக்தி என்றால் என்ன?**

இவை ஏதாவது ஒன்றிலாவது முழு மனதுடன் ஈடுபட்டால் படிப்படியாக பக்தி கைகூடும். இந்தப் பக்தியின் காரியத்தை நினைத்துத்தான் நமது பெரியவர்கள் மாலை வேளையில் விளக்கு வைத்து இறைவனின் நாமத்தைச் சொல்ல வேண்டும் என்று கூறுகிறார்கள். ஒன்றும் அறியாத குழந்தைப் பருவம் முதல் ராம, ராம, ராம ஜெயம் சொல்ல வேண்டும் என்று கூறுவார்கள்.

விபரம் இல்லாத பருவத்தில் எந்தவித ஆசையும் இல்லாமல் இறைவனை வணங்கினால் இறைவனின் அருள் அவனுக்குக் கிடைக்கிறது. இவ்வாறு இளம் பருவம் முதல் செய்வதால் பக்தி உண்டாகிறது. நாம் வளர வளர பக்தி அதிகரித்து நிரந்தர பக்தியாக மாறுகிறது.

பக்தனின் வாழ்க்கை பரமானந்தம் உடையதாக மாறுகிறது. ஏனென்றால் கிடைப்பதை வைத்து அவன் திருப்தியடைகிறான். சலனமற்ற பக்தியின் காரணமாக இறையருள் அவனுள் ஐக்கியமாகிறது. பகவான் கிருஷ்ணன் பாகவதம் தசமத்தில் கோபியர்களிடம் கீழ்க்கண்டவாறு கூறுகிறான்.

"சலனமற்ற பக்தியுடன் என்னை பூஜிப்பவர்களுக்கும் முழு மனதுடன் மகிழ்ச்சியுடன் என்னை வணங்குபவர்களுக்கும் நன்மை கிடைக்கச் செய்து படிப்படியாக அவர்களுக்கு முக்தி கிடைக்கச் செய்வேன்" *(தொடரும்)*

# இலங்கை கடவுச்சீட்டை பயன்படுத்தி விசா இன்றி 42 நாடுகளுக்கு செல்லலாம்!

## தரப்படுத்தலில் 93ஆவது இடம்

உலகளவில் பலமான கடவுச்சீட்டுக்களை கொண்ட நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. விசா இல்லாமல் எத்தனை நாடுகளுக்குப் பயணம் செய்யலாம் என்பதன் அடிப்படையில் உலகின் சக்திவாய்ந்த கடவுச்சீட்டுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி உலகின் அதிசக்தி வாய்ந்த கடவுச்சீட்டை கொண்ட நாடாக ஜப்பான் முன்னிலை பெற்றுள்ளது. இதைப் பயன்படுத்தி 189 நாடுகளுக்கு விசா இல்லாமல் சென்று வரலாம்.

இரண்டாம் இடத்தில் ஜேர்மனி மற்றும் சிங்கப்பூர் கடவுச்சீட்டுகள் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி 188 நாடுகளுக்குச் செல்லலாம். மூன்றாம் இடத்தில் பின்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், சுவீடன், தென் கொரியா உள்ளன. 187 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்க முடியும்.

நான்காவது பிரித்தானியா, நோர்வே, லக்சம்பேர்க், ஒஸ்ரியா, நெதர்லாந்து, போர்த்துக்கல், அமெரிக்கா உள்ளன. இந்நாடுகளின் கடவுச்சீட்டை பயன்படுத்தி 186 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்க முடியும்.

ஐந்தாவது இடத்தில் கனடா, பெல்ஜியம், டென்மார்க், அயர்லாந்து, சுவிட்சர லாந்து உள்ளன. 185 நாடுகளுக்கு பயணிக்க முடியும்.

ஆறாவது இடத்தில் அவுஸ்ரேலியா மற்றும் கிரீஸ் கடவுச்சீட்டுக்கள் உள்ளன.

புதிய தரவுக்கு அமைய 93ஆவது இடத்தில்இலங்கை மற்றும் எத்தியோப்பியா நாடுகள் உள்ளன. இந்த நாடுகளின் கடவுச்சீட்டை பயன்படுத்தி விசா இன்றி 42 நாடுகளுக்குபயணிக்கமுடியும். (மு)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## சமபங்கு



தாய். சேய் நலம் என்று சொல்கிறபோது அது பெண்களுக்கோ. குழந்தைகளுக்கோ மாத்திரம் அல்ல் மனித குலத்திற்கே ஒரு பொதுவான. ஒரு மதிப்புடைய விஞ்ஞானம் அது. மனிதகுல மேன்மைக்காகவே, தாய்-சேய் நலம் என்ற ஒரு பிரிவை எல்லோரும் மதித்து அதற்கு ஒவ்வொருவராலும் ஆகவேண்டிய செயலைச் செய்ய வேண்டியது அவசியம். தாய்க்கும், சேய்க்கும் நோய் வராமல் தடுக்க வேண்டுமானால் கருவுற்ற நாள் முதற்கொண்டு பிரசவம் ஆகிற வரையிலே அதைக் கவனிக்க வேண்டியது பெண்களுடைய கடமை. ஆனால், பெண்கள் மாத்திரம் அதைக் கவனித்துக் கொள்ள முடியாது. குடும்பத்திலே முக்கியமாக உள்ள கணவன் இன்னும் பெரியவர்கள் எல்லோருடைய கடமையும் உள்ளது. அதற்கேற்ற அறிவு அனைவருக்கும் அவசியம்.

கருவுற்ற காலத்தில் ஒரு பெண்ணினுடைய மனம் சோர்வு அடையுமேயானால், பிணக்கு அடையுமேயானால், வருத்தம் அடையச் செய்வோமேயானால், ஒவ்வொரு வருத்தமும் அவர்களின் குழந்தைகளை மனத்தாலே பாதிக்கும். மனம் என்பது கருமையம், சீவகாந்த ஆற்றல், இருப்பு நிலையான அறிவு, இயக்க நிலையான மனம் என்ற அனைத்தும் அடக்கம் பெற்ற ஒரு இயற்கை நிதி. இதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கருவுற்ற காலத்திலே எந்த விதத்திலே ஒரு பெண் ஒரு குடும்பத்திலே இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும் கணவன் எவ்வாறு அக்கருவுற்ற பெண்ணோடு நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொண்டார்களா என்றால் தெரிந்து கொள்ளவே இல்லை. அந்தகாலத்திலே ஏற்படக் கூடிய மனநிலை குழந்தைகளை எப்படிப் பாதிக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, விளைவறிந்து செயல்புரிந்து நலம் காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளுக்கிடையிலான மேசைப்பந்தாட்டம்

# எம்.மேசக் சிறப்பாட்டம் யாழ்.மத்திய கல்லூரி வெற்றி






வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின், 20 வயது ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மேசைப்பந்தாட்ட அணி சம்பியனாகியது.

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் வருடாந்த விளையாட்டுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான மேசைப்பந்தாட்ட போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மேசைப்பந்தாட்ட திடலில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் மோதின.

முதல் ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மேசக்கை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் தனுஸ் மோதினார். இதில் மேசக் 11:06,11:08, 11:09 என மூன்று செற்களையும், தனுஸ் 11:08, 11:09 என இரு செற்களையும் கைப்பற்றினார். முடிவில் மேசக் 3:2 என்ற செற்கள் அடிப்படையில் வென்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தட்சயனனை எதிர்த்து கொக்குவில் இந்துவில் துஸியந்தன் மோதினார்.

துஸியந்தன் 12:10,11:08, 11:09 என மூன்று செற்களையும், தட்சயனன் 11:02, 11:06 என இரு செற்களையும் கைப்பற்றினார். முடிவில் தட்சயனன் 3:2 என்ற செற்கள் அடிப்படையில் வென்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துவின் சாய்ராமை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் லவிதன் மோதினார். இதில், லவிதன், 11:08, 11:05,14:12 என்ற நேர் செற்களையும் வென்றார்.

தொடர்ந்தும், வெற்றியாளர் தொடர்பில் இழுபறி தொடர்ந்ததால், நான்காவது ஒற்றையர் ஆட்டம் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மேசக்கை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் துஸியந்தன் மோதினார். இதில் மேசக் 11:08, 11:09, 11:08 என முதல் மூன்று செற்களையும், துஸியந்தன் 11:7 என முதற் செற்றையும் கைப்பற்றினர்.

ஐந்தாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தட்சயனனை எதிர்த்து கொக்குவில் இந்துவின் தனுஸ் மோதினார். இதில் தட்சயனன் 11:08,11:07,12:10 என மூன்று செற்களையும், தனுஸ் 11:3,11:7 என இரண்டு செற்களையும் கைப்பற்றினார்.

மூன்று ஒற்றையர் ஆட்டங்களை வென்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், ஆட்டத்தில் சிறப்பாட்டக்காரராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் எம். மேசக்தெரிவு செய்யப்பட்டார். (க-26)

## வடக்கு-கிழக்கு பிரிமியர் லீக்

# மாதோட்டம் எப்.சி அணியை வீழ்த்தி வென்றது ரில்கோ கொங்கியூரொர்ஸ்



வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், போட்டியொன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரில்கோ கொங்கியூரொர்ஸ் அணி வெற்றி பெற்றது.

கிளியூர் கிங்ஸ் (கிளிநொச்சி), தமிழ் யுனைட்டட் அணி (யாழ்ப்பாணம்), ரில்கோ கொங்கியூரொர்ஸ் எப்சி (யாழ்ப்பாணம்), மன்னார் எப்.சி, றிங்கோ ரைய்ரென்ஸ் (திருகோணமலை), வவுனியா வாரியர்ஸ், நோதன் எலையிட் எவ் (யாழ்ப்பாணம்), முல்லைத்தீவு பீனிக்ஸ், வல்வை ஏவ்.சி (யாழ்ப்பாணம்), மட்டுநகர் சுப்பர் கிங்ஸ், அம்பாறை அவேஞ்சர்ஸ், மாதோட்டம் எப்.சி ஆகிய 12 அணிகள் உருவாக்கப்பட்டு முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்று வருகின்றன.

இதில் 31 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இரண்டாவது லீக் ஆட்டத்தில் ரில்கோ கொங்கியூரொர்ஸ் அணியும் மாதோட்டம் எப்.சி அணியும் மோதின.

முதற்பாதியாட்டத்தில் ரில்கோ கொங்கியூரொர்ஸ் அணியின் தனேஸ், கோனர் வாய்ப்பொன்றை அடிப்படியே வெட்டி அடித்து, கோல் கம்பத்துக்குள் புகுத்தி அசத்தலான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

தொடர்ந்து, சிறிது நேரத்தில் கொங்கியூரொர்ஸ் அணியினால்இரண்டாவது கோலும் அடிக்கப்பட்டது. முதற்பாதியாட்டம் அந்த இரண்டு கோல்களுடன் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்கவில்லை. முடிவில் ரில்கோ கொங்கியூரொர்ஸ் அணி, 02:00 என்ற கோல்கள் கணக்கில் வென்று சம்பியனாகியது. (க-26)



2018ஆம் ஆண்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யாழ்.மாவட்ட மட்டத்தில் நடத்திய கயிறு இழுத்தல் போட்டியில் காரைநகர் பிரதேச இளைஞர் அணியாழ்.மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப்பெற்றது. இவ் அணி தொடர்ந்து மூன்று வருடங்கள் யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.(க-26)




வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை அணி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

# பிரியலக்சன் அபாரசதம் சென்றலைட்ஸ் வெற்றி




பிரியலக்சனின் அபாரமான சதத்தின் உதவியுடன், இலங்கை கிரிக்கெட் சம்மேளனத்தில் பிரிவு-3 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியின், போட்டி யொன்றில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணி வெற்றி பெற்றது.

50 ஓவர்களைக் கொண்ட இச் சுற்றுப்போட்டியானது தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் ஒரு போட்டியொன்று ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து றைரோன் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி, 45.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பிரியலக்சன் 113 ஓட்டங்களையும், டர்வின் 37 ஓட்டங்களையும், மயூரன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

றைரோன் அணி சார்பில் அஜந்தன் 9.5 ஓவர்கள் பந்து வீசி 67 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும், விஸ்வரூபன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

261 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய றைரோன் அணி, 36.4 ஓவர்களில் 164 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் மணாளன் 55, நந்தகுமார் 40, திலக்சன் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, டர்வின் 8 ஓவர்கள் பந்துவீசி 42 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்களையும், மயூரன் 10 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும், அலன் ராஜ், தசோபன், ஜேம்ஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (க-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதை தொடர்பான பழைய முறைப்பாடுகளை மீளாய்வு செய்கிறது மனித உரிமை ஆணைக்குழு

## ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடகம தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் கிடப்பில் போடப்பட்ட சித்திரவதைகள் தொடர்பான ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் தொடர்பில் மீளாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீபிகா உடகம தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகள் பல ஆயிரக் கணக்கில் ஆணைக்குழுவுக்கு கிடைத்தன. அவை ஏழு தொடக்கம் எட்டு ஆண்டுகள் கடந்தவை. சில அதற்கு மேற்பட்ட காலப் பகுதியைக் கொண்டவை என்று அவர் கொழும்பு ஆங்கில வார இதழான சண்டே ரைம்ஸுக்கு தெரிவித்துள்ளார்.

2014ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக் கோவைகள் ஆயிரக் கணக்கில் குவிந்துள்ளன. அலுவலகத்தை சுத்தப்படுத்த பணிக்கு அமர்த்தப்பட்ட பணியாளர்களால் அவை மீட்கப்பட்டுள்ளன.

2014ஆம் ஆண்டுக்கு பின்னர் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு ஆராய்ந்து வருகிறது.



காணாமல் ஆக்கப்படுதல், தடுப்புக் காவல் சித்திரவதை, தடுத்துவைத்தல் மற்றும் காரணமின்றிய கைதுகள் ஆகியன இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பெறப்படுகின்ற பொதுவான முறைப்பாடுகளாகும்.

காணாமற்போனோர் அலுவலகம் நிறுவப்பட்ட பின்னர், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முறைப்பாடுகள் அந்த அலுவலகத்தால் விசாரணை நடத்தப்படும். எனினும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவே கையாளும் என்று கலாநிதி தீபிகா உடகம மேலும் தெரிவித்தார். (மு)

# தொலைபேசியில் உரையாடிய எம்.பிக்களின் பட்டியல் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்-கருஜயசூரிய

(கொழும்பு)

பேர்ச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளரான அர்ஜுன் அலோசியஸுடன் தொலைபேசியில் உரையாடியவர்களின் பெயரப் பட்டியல் இந்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையுடன் இணைக்கப்பட்டதாக இந்த பட்டியல் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டார்.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி விசாரணை அறிக்கையின் பிரதியை வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளரிடம் கோரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட சபாநாயகர், அதனை அவர் வழங்குவார் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை, பிணை முறி குற்றச்சாட்டில் கைதாகிய அர்ஜுன் அலோசியஸ், தொடர்ந்து 4 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

# 100 நாள் வேலைத்திட்டம் 85 வருடம் பழமைவாய்ந்தது இப்படிக்கூறுகிறார்-சுமங்கள தேரர்

(கொழும்பு)

இந்த அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்துக்கு பொறுப்புதாரர் பிரதமர் தான் என்பதை ஜனாதிபதி சொல்லாமல் சொல்லியிருந்தார் என சியம் மகா பீடத்தின் ரங்கிரி தம்புளு விகாரையின் மகாநாயக்கர் கலாநிதி இனாமலுவே ஸ்ரீ சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தில் உருவான 100 நாள் வேலைத்திட்டம் கடந்த 85 வருடங்கள் பழைமை வாய்ந்தது. இது அமெரிக்காவிலிருந்து பிரதிசெய்யப்பட்ட ஒன்று.

இதேவேலைத்திட்டத்தை ஐ.தே.க கடந்த 90 களிலும் அறிமுகம் செய்ததாகவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால், இந்த வேலைத்திட்டம் பிரதமருடையது என்பது உறுதியாவதாகவும் தேரர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ரங்கிரி தம்புளு உயன்வத்த ரஜமகா விகாரையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் இதனைக் கூறியுள்ளார். (மு)

# சிவகுமாரனின் 44ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை

(யாழ்ப்பாணம்)

தமிழ் இனத்தின் விடுதலைக்கான முதல் தற்கொடையாளர் தியாகி பொன்னுத்துரை சிவகுமாரனின் 44ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளை செவ்வாய்க்கிழமை உரும்பிராயில் உள்ள சிவகுமாரனின் நினைவிடத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் இனத்தின் விடுதலைக்கான களச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த போது, 1974 ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி பொலிஸாரின் சுற்றிவளைப்பில் சிக்கி சயனைட் அருந்தி பொன்.சிவகுமாரன் (வயது-24) சாவடைந்தார்.

தியாகி சிவகுமாரனின் 44ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9. 30 மணிக்கு உரும்பிராய் சந்தியில் உள்ள பொன்.சிவகுமாரனின் நினைவிடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நினைவேந்தலில் சகல தமிழ் அரசியல் கட்சிகளினதும் பிரமுகர்கள் கலந்து கொள்வர் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (மு)

# பண்டாரநாயக்கவின் பொருளாதாரக் கொள்கை அரசாங்கத்திற்குள் செயற்படுவதில்லை-மைத்திரி

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் கிராமத்தின் அதிகாரத்தைக் கொடுத்தார்கள் என்று கூறுவதை விடவும் இந்த அரசாங்கத்தின் பொருளாதார கொள்கையை புறக்கணித்தார்கள் என்றே கருத வேண்டியுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பண்டாரநாயக்கவின் பொருளாதாரக் கொள்கை அரசாங்கத்துக்குள் செயற்படுவது இல்லையெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எதிர் வரும தேர்தலில் வெற்றிபெறச் செய்வதை இலக்காகக் கொண்டே கட்சியை மறுசீரமைப்பதாகவும் நேற்று நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (மு)



# புத்தளம் பகுதியில் விபத்து ஒருவர் பலி; இருவர் காயம்

(புத்தளம்)

புத்தளம், கல்அடிய-பாலாவி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9.10 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு பகுதியை சேர்ந்த 49 வயதுடைய பிரசாத் பெர்னாண்டோ என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அதிவேகமாக பயணித்த ஜீப் வண்டியொன்று வேகத்தை கட்டுபடுத்த முடியாமல் மதில் ஒன்றில் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்ற னர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு)

# ரணிலுக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்கவே 20ஆவது திருத்தம்-கம்மன்பில கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியாத பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 2020ஆம் ஆண்டு அரசியல் அதிகாரத்தினை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே மக்கள் விடுதலை முன்னணியினர் 20ஆவது அரசியல் திருத்தத்தினை முன்வைத்துள்ளனர் என பிவிதுரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்.

மக்கள் விடுதலை முன்னணியினர் பிரதமரின் விருப்பத்துக்கு இணங்கவே 20ஆவது திருத்தத்தினை பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ளனர்.

பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்திற்கு குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை இரத்து செய்ய வேண்டும் என்ற விடயத்திற்கு எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றனர்.

பாராளுமன்றத்தில் குறித்த திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவினை பெற வேண்டும். ஆனால் தற்போது மக்கள் விடுதலை முன்னணியினா முன்வைத்துள்ள இந்த திருத்தத்துக்கு எதிர்ப்புகளே அதிகளவு தோன்றியுள்ளது.

எனினும் இவ் விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் சூழ்ச்சிகளை பிரயோகிப்பார். அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையின்போதும் பண பலத்தினை பிரயோகித்து நம்பிக்கையில்லா பிரேரணையை சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்.



எவ்வாறு இருப்பினும் 20ஆவது திருத்தம் ஒரு போதும் வெற்றிபெறாது. இவ்விடயம் தொடர்பில் பொது மக்களின் ஆதரவினை பெற்று மக்கள் விடுதலை முன்னணியின் திட்டங்களை தோற்கடிக்க பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றது என்றார். (மு)

# தேசிய சுற்றுச்சூழல் தின நிகழ்வு இன்று

உலக சுகாதார தின நிகழ்வு இன்று ஜனாதிபதி தலைமையில் கேகாலையில் இடம்பெறவுள்ளது.

முறையற்ற பிளாஸ்டிக் பாவனையினால் ஏற்படும் சுற்றாடல் தாக்கங்களை தடுப்போம் என்ற தொனிப்பொருளில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை, பிளாஸ்டிக் கழிவுகளை மீள்சுழற்சிக்குட்படுத்துவதுடன், திண்மக் கழிவுகளை முகாமைப்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்றை மட்டக்களப்பு மாநகர சபை மேற்கொண்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை பிரிவில் இது தொடர்பான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ.1,500 கோடி...

க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அருகில் காணப்பட்ட காணி, வெள்ளவத்தையிலுள்ள சுகபோக வீட்டுத் தொகுதி, கொழும்பு ஜம்பட்டா வீதியிலுள்ள நவீன அச்சகம், கருவாத்தோட்டத்திலுள்ள காணி, பல படகுகள் உட்பட வங்கிக் கணக்குகளும் இதில் அடங்குவதாக கூறப்படுகிறது.

பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினரால் இந்த சொத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு)

## பட்டதாரிகள் அனை...

வயதெல்லையை 45ஆக அதிகரிக்குமாறு வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை முன்வைத்தனர்.

அதற்கமைய வயதெல்லையை 45ஆக உயர்த்துவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு முன்வைத்த யோசனைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

5 ஆயிரம் பட்டதாரிகள் அடுத்த மாதமும் 15 ஆயிரம் பட்டதாரிகள் வரும் செப்ரெம்பரிலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கான பயிற்சியாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

2019ஆம் ஆண்டில் மூன்று கட்டங்களில் பட்டதாரிகளை அரச சேவைகளில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போதே முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார். (மு)

## தமிழகத்தில் இரு...

றனர்.

இந்த நிலையில் நேற்று இரவு ஓர் படகில் ஒரு சிறுவன் உட்பட 5 பேர் படகு மூலம் தாயகம் திரும்பிய நிலையில் இலங்கை கடற்பரப்புக்குள் வைத்து இலங்கை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். இவர்களை ஏற்றிவந்த இரு படகோட்டிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் குருநாகலை சேர்ந்த ஒரு ஆணும், திருகோணமலையை சேர்ந்த தாயும் மகனும், தொண்டைமனாற்றை சேர்ந்த கணவனும் மனைவியுமாக 5 பேர் மட்டுமே தாயகம் திரும்பிய இலங்கை அகதிகள் என தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்தவர்களை கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவர்களை இன்று யாழ் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை காங்கேசன்துறை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

இதனிடையே, இம்மாதத்தில் இதுவரை 20க்கும் மேற்பட்ட அகதிகள் இவ்வாறு ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு தாயகம் திரும்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. (மு-9)

## இந்த வருடமே...

தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார். (மு)

## ஜனாதிபதி மைத்தி...

திஸாநாயக்கவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனெவிரத்ன, அநுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர்களாக ஏ.எச்.எம்.பௌசி, சரத் அமுனுகம, மகிந்த அமரவீர, தயாசிறி ஜயசேகர, ரெஜினோல்ட் கூரே, பியசேன கமகே, விஜித் விஜயமுனித டி சொயிஸா, மகிந்த சமரசிங்க, திலான் பெரேரா, தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (மற்றொரு செய்தி 3-ம் பக்கத்தில்: (மு)

## 20 தொடர்பில் தீர்...

தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தற்பொழுது ஆய்வு செய்து வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். தேசிய ஊடகமொன்றுக்கு 20 ஆம் திருத்தச் சட்ட மூலம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (மு)

## வாள்வெட்டு குழு...

நேற்று பகல் குறித்த பகுதியில் இரு குழுக்களிடையே மோதல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மோதல் நேற்று பகல் முழுவதும் நீடித்த நிலையில், ஒரு குழுவினர் வெளி இடங்களை சேர்ந்த இளைஞர்களை அழைத்துள்ளனர். இதனையடுத்து குறித்த பகுதிக்குள் 10க்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் வாள்வெட்டு குழுவை சேர்ந்தோர் வந்துள்ளனர்.

இதனால் குறித்த பகுதிக்குள் மேலும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று இரவும் இவ்வாறான ஒரு பதற்றநிலை ஏற்பட்டிருந்தது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு யாழ்ப்பாண பொலிஸார் வருகைதந்து நிலைமைகளைக் கட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து நிலைமைகள் கட்டுக்குள் வந்திருந்தது. சம்பவம் தொடர்பில் இன்றைய தினமும் விசாரணைகள் தொடரும் என பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. (மு-4)

## நான் மீண்டும் கள...

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தான் தயார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்ச்சைகளினால் சலனமடைந்துள்ள இலங்கையின் சமகால அரசியல் நிலை தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு பிரத்தியேக நேர்காணல் ஒன்றினை வழங்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நேர்காணலின் போது, ஒரு சில வழக்கறிஞர்கள் உங்களால் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியும் என கூறியுள்ளார்கள். அதாவது 19ஆவது திருத்தச்சட்டம் எதிர்காலத்தில் தாக்கம் செலுத்தாது. எனவே உங்களால் மீண்டும் ஜனாதிபதியாக வரமுடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றதே? என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது.

குறித்த கேள்விக்கு மகிந்த பதில் அளிக்கும்போது. அவ்வாறு தெரிவிக்கும் நபர்களும் இருக்கின்றார்கள். எனினும் இதனைத் தீர்மானிக்க வேண்டியது நீதிமன்றமே என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், எமக்கு அவ்வாறான சுயநலம் இல்லை. எமக்கு இந்த முறைகேடான அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்பது மட்டுமே பிரதான நோக்கம் எனக் குறிப்பிட்ட மகிந்த, நான் மீண்டும் களமிறங்கினால் ரணிலுக்கு ஓட வேண்டிய நிலை ஏற்படும், நாட்டு மக்களினதும், நீதிகட்டமைப்பின் தீர்ப்பும் அதுவெனின் அதனை மாற்ற முடியாது எனவும் மகிந்த தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

## ஐ.தே.கவை மீண்...

ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் கூட்டணி வைத்துக்கொண்டதன் காரணமாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உள்ளூராட்சி தேர்தல்களில் தோல்வியை சந்தித்தது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நேற்றைய மத்திய குழு கூட்டத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அனைவரும் சிந்திக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைத்துக் கட்சிகளும் உட்கட்சிமோதல்களால் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் கூறிய ஜனாதிபதி, எந்த கட்சியும் உட்கட்சி மோதலால் பாதிக்கப்படவில்லை என எவரும் தெரிவிக்க முடியாது எனவும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் ஆரம்பகாலத்திலிருந்து இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளதுடன்,

மேலும் அண்மையில் மாதுளுவாவே சோபித தேரரின் நினைவு தின வைபவத்தில் பேசிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தான் ஆட்சியேற்ற போது நடைமுறைப்படுத்தப்பட்ட நூறு நாள் வேலைத்திட்டமானது மோசமானது என்றும், அதனை யார் தயார் செய்தார் என்று தனக்குத் தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சியினர் பெரும் அதிருப்தியடைந்தனர். மைத்திரிபால சிறிசேனவின் இந்தக் கருத்துக்குப் பதில் கருத்து வழங்கிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி, கோத்தபாய ராஜபக்ஷவுடன் கூட்டணி வைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பதாக தாம் கேள்விப்பட்டிருப்பதாக தெரிவித்திருந்தார். (மு)


ஏஞ்சல்ஸ் அழகு நிலையம்

பயிற்சியகம்

● யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் மாணவர்களை வாழ்த்துவதுடன், உங்கள் பட்டமளிப்பு விழாவிற்கான அலங்காரங்களினை பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள எமது கிளையில் விசேட சலுகைக் கட்டணத்தில் மேற்கொள்ளலாம்.

புதிய டிப்ளோமா வகுப்புக்கள்

பயிற்சி முடிவில் சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.

அழகுக்கலை சான்றிதழ் ஆரம்பமாகின்றன.

மணப்பெண் அலங்காரம், பூப்புனித நீராட்டு விழா அலங்காரம் சிறந்த முறையில் மேற்கொள்ளப்படும்.

தொடர்பு :- 077 627 7332

தலைமையகம்:- 94, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்:

132, 3ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

நியூ ஏஞ்சல்ஸ் அழகு நிலையம் பயிற்சியகம், ( Northway மேல்மாடி எரிபொருள் நிரப்பு நிலையம் எதிரில்) பரமேஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.

(4282)



விற்பனைக்கு

* மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

வேம்படி வல்வெட்டித்துறை (4225) தொடர்புகளுக்கு 077 357 3055



ஆள்தேவை

கட்டடம் கட்டும் நிறுவனம் ஒன்றிற்கு கல்லு அறுக்க ஆள் தேவை.கோண்டாவில்

தொடர்பு :- 077 416 3146 (4281)



விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /-Kg

கனடா-900 /-Kg

ஜேர்மனி- 700 /-Kg

நெதர்லாந்து-700 /-Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240 V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-2755)



கட்டடம், காணி தேவை

யாழ்.நகர எல்லைக்குள் சைவ, அசைவ உணவகம் ஒன்றை நடத்துவதற்குத் தேவையான காணி, கட்டடம் வாடகைக்கு தேவை.

077 032 5889 (4263)



ஹொட்டேல்துறை அனுபவமுள்ளவர்களுக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான

செங்கன் விசா

ஏற்பாட்டுடன் உடனடி வேலைவாய்ப்பு

சம்பளம் ரூ.126,000/-

Waiters உணவு விநியோகஸ்தர் | 100 பேர் வயதெல்லை 35 | Commis சமையல் உதவியாளர்

நட்சத்திர தர ஹொட்டேல் அல்லது உயர்தர உணவகங்களில் பணியாற்றிய அனுபவம். ஆங்கில தொடர்பாடல்திறன் அவசியம்

அனுபவம் இல்லாதவர்களுக்கு 3 - 4 மாத விசேட

ஹொட்டேல் பயிற்சி

& ஆங்கில தொடர்பாடல் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு, விசா ஏற்பாடு

O/L or A/L எடுத்த மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

SIKARAM ACADEMY Business • Hospitality • English FAST TRACK to CAREERS Sri Lankan Entrepreneur of the Year 2017

விபரங்களுக்கு 0777 324 004 077 36 16 798

Emerald Isle Manpower & Travel Services The Sri Lankan Recruitment Specialists

221 1/1. மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் 021 - 222 00 11 www.sikaram.lk

077 00 38 215 077 55 46 956 021 221 9 221

(சி-2793)



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576 | சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576 | கிளிநொச்சியில் - இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு கிளிநொச்சி (தம்ரோ காட்சி அருகில்) 076 443 1576 | 021 222 3536

(சி-2781)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... யிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org